யுனெஸ்கோ கூரியர்

ஜனவரி 1984— தனிப்பிரதி ரூ 2-00



இனவெறி

வாழவேண்டிய காலம்...

நிழற்படம் © டொமினிக் தார்பாய்ஸ், பாரிஸ்

19 கனடா.

(நட்புப்) போட்டிப் பொருள்கள்

கிரின்லாந்துக்கும் கனடாவுக்கும் இடையிலுள்ள பாஃபின் தீவில் வாழும் எஸ்கிமோ சிறுவர், பண்டைய ஆட்டம் ஆடுகின்றனர். இதில் சீல் எனும் கடல் விலங்கின் எலும்புகளைக் கையுறையில் வைத்து, நழுவு முடிச்சுள்ள தோல் வாரினால் எடுக்கவேண்டும். ஒவ்வோர் எலும்பும் பனிக்கட்டி, நாய், குடும்ப உறுப்பினர் போன்ற ஒரு குறிப்பிட்ட பொருளைக் குறிக்கும். மிகுதியான எலும்புகளை எடுப்பவரே விளையாட்டில் வெற்றி பெறுபவர். அவற்றைக் கொண்டு அவர் 'இக்லூ'வீடு, சறுக்கு போன்றவை கட்டலாம்.

யுனெஸ்கோ கூரியர்

உலகைக் காட்டும் பலகணி
ஜனவரி—1984

யுனெஸ்கோவுடன் கூட்டுறவுக்கான இந்திய தேசியக் குழுவுடன் செய்து கொண்டுள்ள ஏற்பாட்டின்படி தென் மொழிகள் புத்தக டிரஸ்டினால் வெளியிடப்படுகிறது.

யுனெஸ்கோவினால் இருபத்தியேழு மொழிகளில் வெளியிடப்படுகிறது.

தமிழ்	ஹிந்தி	கொரியன்
ஆங்கிலம்	ஹீப்ரு	சுவாஹிலி
ஃபிரெஞ்சு	பெர்சியன்	கிரோடே-செர்ப்
ஸ்பானிஷ்	டச்சு	மாசிடோனியன்
ரஷ்யன்	போர்த்துகீஸ்	செர்போ-கிராட்
ஜெர்மன்	துர்க்கிஸ்	ஸ்லோவேன்
அராபிக்	உருது	சீனம்
ஜப்பானிஸ்	கட்டலான்	பல்கேரியன்
இத்தாலியன்	மலேசியன்	கிரீக்

விற்பனை விநியோக அலுவலகம் :
[illegible] கிழக்கு ஸ்பர்டங்க் சாலை, சென்னை-600 031
ஆண்டுச் சந்தா ரூ. 21

ஆசிரியர் அலுவலகம்:
யுனெஸ்கோ, பிளாஸ் தெ போந்தனோ
பாரிஸ்-7ஃபிரான்ஸ்

பிரதம ஆசிரியர் : எதுவார்து கிளிசான்

தமிழ்ப் பதிப்பு நிர்வாக ஆசிரியர் :

மீ. முகம்மது முஸ்தபா (மணவை முஸ்தபா)

January 1984. No. 186

The Unesco Courier

SSN 30304-3177
N› 11-1983- Opl-83-1-404A

பக்கம்

வரலாறு முழுவதும் மனிதர், இனங்கள் பற்றிய ஏற்றத்தாழ்வுக் கோட்பாடுகள்

4 இனம், வெறுப்புணர்ச்சி, கற்பனை
–மிஷேல் லேரிஸ்

6 வரலாற்று அடிப்படை
–மிக்கேல் வசிலியேவிச் கிரியுக்கோவ்

9 இனக் கொலை

இன்று இனவெறி

11 ‘நாம்’, ‘அவர்கள்’
–ஆல்பெர்ட் மெம்மி

இன ஒதுக்கம்: இனவெறி அரசின் கோட்பாடு

14 வெட்கக் கேடான வரலாறு
–பேசில் டேவிட்சன்

17 யுனெஸ்கோ, ஐ.நா. சங்கம், தென்னாஃப்ரிக்கா

ஏற்க இயலாத, ஒளிவு மறைவற்ற இனவெறி

22 முகக் கண்ணாடி வழியே பகைமை
–டஹர் பெண் ஜெலூன்

இனவெறியும் அறிவியலும்

25 நுண்ணோக்கி வழியாக கற்பனைகள்
–ஆல்பெர் ஷாக்கார்டு

வருங்கால வழி

28 பண்பாட்டு எதிர்த்தாக்குதல்
மரியா தோ சே கார்மோ ரேய்ஸ்

31 கலப்பு உருமாற்றம்
–ராபர்ட்டோ ஃபெர்னாண்டெஸ் ரெட்டமார்

34 யுனெஸ்கோ செய்தியறை

2 வாழ வேண்டிய காலம்
(நட்புப்) போட்டிப் பொருள்கள் (கனடா)

ஆசிரியர் மடல்

இனவெறி போன்ற ஒரு வெளிப்படையான கொடுமையை இடையறாது திரும்பத் திரும்ப கவனிக்க வேண்டுமா எனும் கேள்வி எழலாம். இனவெறியானது உலகம் முழுவதும் புதிய வடிவங்களில் தோன்றுகிறது என்றும், ஏற்கெனவே இருக்கும் நீண்ட கொடுமைப் பட்டியலில் புதிய வடிவங்களுடன் இடம் பெற்று வருகிறது என்றும், அவை ஒவ்வொன்றும் முந்தியதைவிட முனைந்து தோன்றுகிறது என்றும் இதற்கு விடை கூறலாம். இப்புதிய தோற்றம் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து உறுதியாக எதிர்ப்பது நம் கடமையாகும்.

அயலாராகிய “மற்றவர்” பொதுவாக அந்நியராகக் கருதப்படுகிறார். இதற்கு (அவரது இனத்தினால் ஏற்படும்) தோற்றம் காரணமாக இருக்கலாம் அல்லது அவரது சமூகநிலை, வறுமை, வாழ்க்கை முறை, தனிச் சலுகைகள் அல்லது உள்ளாற்றல் காரணமாக இருக்கலாம். ஆனால், “மற்றவர்” நம்மையே, கண்ணாடியில் காட்டுவது போன்று, காட்டுகிறார் என்பதை இப்போது அறிந்து விடுகிறோம். இது நம்மை அச்சுறுத்துகின்றது வன்முறையைத் தூண்டும் இத்தகைய அச்சத்தை வெல்வதன் மூலமே இது உருவாக்கும் இனவெறியை வெல்ல முடியும்.

“மற்றவர்” பற்றிய அச்சம் இயல்பாக வருவதல்ல என்றும், சமூக அமைப்புகளின் விளைவே என்றும் ஆய்வுகள் காட்டுகின்றன. ஆனால், இன்று நிலவும் இனவெறி தற்செயலாக தோன்றுவதன்று என்பதைத் வலியுறுத்தவேண்டும். அது வரலாற்று நிகழ்ச்சியின் விளைவாகும் அதாவது, குடியேற்ற நாட்டு மக்களின் உழைப்பைப் பயன்படுத்தும் பொருளாதாரச் சுரண்டலின் (அதைக் கொள்கையளவில் முறைமைப்படுத்துதலின்) விளைவாகும்.

தீவிரமடைந்து ஓர் அமைப்பைப் பெற்றுள்ள இக்குடியேற்ற நாட்டு இனவெறிக் கொள்கை இன்று இன ஒதுக்கக் கொள்கையாக இறுதி நிலை அடைந்துள்ளது. இக் கோட்பாடு தென்னாஃப்ரிக்க மக்களுக்கு மட்டுமல்லாமல் உலக அமைதிக்குமே ஊறுவிளைவிக்கவல்லது. எல்லா வகையிலும் இதை மனுக்குலத்திற்கு எதிரான குற்றம் எனலாம்.

இதனால்தான் இனவெறிக்கு எதிரான போராட்டம், உலக முழுவதும் விடுதலை இயக்கங்களின் முக்கிய ஈடுபாடாக இருக்கின்றது. ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை அவர்களுடைய பண்பாட்டுத் தனித்தன்மையைப் பாதுகாப்பதுடன் இணைந்தது.

இப்போராட்டத்தில் அறிவியல் நடுநிலை வகிக்க முடியாது. ‘இனங்களை’ முடிவான இனப் பண்பியல் ஆதாரங்களுடன் வரையறுக்கலாம். எனும் வாதத்தை அறிவியலாளர் திட்டவட்டமாக மறுக்கின்றனர். பல்லாயிரம்ஆண்டுகளாக நிகழும் இனக் கலப்பின் விளைவாக தனிமனிதரிடையே அல்லது கூட்டத்தினரிடையே தோன்றும் இனப்பண்பு வேறுபாடுகள், அர்த்தமற்ற அடிப்படைகளில் பகுக்கப்பட்டுள்ள ‘இனங்கள்’ எனப்படுவனவற்றிடையே காணப்படும் வேறுபாடுகளைவிட மிக அதிகமாக இருக்கக்கூடும். ‘இன’ மரபுப் பண்புகளுக்கும் பண்பாட்டு இயல்புகளுக்குமிடையே தொடர்புண்டு எனும் கருத்தை அறிவியல் மிக உறுதியாக மறுக்கின்றது.

அடக்குமுறைக்கும் எதிர்ச்சார்புகளுக்கும் எதிராக உண்மையைப் பாதுகாக்கும் இப்போராட்டத்தில் யுனெஸ்கோ தலையாய பங்கு பெறுகின்றது. நவம்பர் 16, 1945இல் லண்டனில் நிறைவேற்றப்பெற்ற யுனெஸ்கோ விதித் தொகுதியின் முகப்புரைக்கும் முதல் விதிக்கேற்ப இவ்வாறு செய்யவேண்டியது அதன் மறுக்க முடியாத கடமையாகும்.

அட்டை: *சிறைப்பட்ட ஆஃப்ரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மெண்டொலவின் உருவப்படம். இதை ஐரிஷ் ஓவியர் லூயிலே ப்ரோக்வீ ‘இன ஒதுக்கத்தை எதிர்க்கும் கலைஞர்கள்’ எனும் காட்சிக்காக வரைந்தார் (14, 18ஆம் பக்கத்தலைப்புகளையும் பார்க்க.*

நிழற்படம் © இன ஒதுக்க எதிர்ப்புக் கலைஞர்கள், பாரிஸ்

1 வரலாறு முழுவதும் மனிதர், இனங்கள் பற்றிய ஏற்றத்தாழ்வுக் கோட்பாடுகள்

இனம், வெறுப்புணர்ச்சி, கற்பனை

மிஷேல் லேரிஸ்

"இனக்கூட்டமைவு சீர்படுத்த இயலாத அளவுக்கு இடையூறாக இருக்கிறது என்ற காரணத்தின்பேரில் சில மனிதக் குழுமங்களைத் தாழ்ந்தனவாகப் பாகுபடுத்திக் காட்டும் முயற்சிக்கு அடிப்படையான தீய எண்ணம் தோன்றியது?" என்ற வினா பொதுவாக எழுகிறது.

மனித இனப்பரப்பியலையும்; வரலாற்றையும் ஆராயுங்கால், இனவெறி என்பது மிக அண்மையில் தோன்றியது என்பதும், அது உலகெங்கும் நிலவவில்லை என்பதும் புலனாகும். மனிதவியலறிஞர்கள் ஆராய்ந்த சமுதாயங்கள் பலவற்றில் குழுமச் செறுக்கு முனைப்பாகக் காணப்படினும், அக்குழுமங்கள் மற்றவர்களை விடத் தாங்கள் உயர்ந்தவர்கள் எனக் கூறிக்கொள்ளவில்லை. பிற குழுமங்களைச் சரிசமமாகக் கருதி அவர்களுடன் அடிக்கடி அணிசேர்ந்திருக்கிறார்கள்.

இரத்த உறவு மட்டுமே ஒருமைப்பாட்டுக் கூறாக இருக்கவில்லை. பொதுவான நோக்கங்களும், கூட்டு நடவடிக்கைகளுங்கூட ஒருமைப்பாட்டை வளர்த்துள்ளன. பெரும்பாலான நேர்வுகளில் இந்தக் குழுமங்கள் "இனங்களாக' அமையவில்லை; இவை வெறும் சமுதாயங்களாகவே இயங்கின. சில சமயம், குழுமங்களிடையே மோதல்கள் ஏற்பட்டதற்கு உடலியல் காரணமாக இருக்கவில்லை; சில குறிப்பிட்ட பொருளாதாரச் சிக்கல்களே காரணம்.

சில மக்கள் குழுமங்களைக் கிரேக்கர்கள் "காட்டுமிராண்டிகள்" என அழைத்தனராயினும், அவர்களை இழிந்த இனத்தவராகக் கருதவில்லை; தம்மைவிட நாகரிகத்தில் குறைந்தவர்கள் என்றே கருதினர். கிரேக்கப் பேரரசன் அலெக்சாண்டர், மூன்று பாரசீக இளவரசிகளை மணந்து கொண்டார். தம்முடைய 10,000 படைவீரர்களுக்கு இந்துக்களை மணமுடித்துவைத்தான். ரோமப் பேரரசு பல நாடுகளை வென்றபோது அந்நாடுகளின் மக்களைத் தாழ்ந்த இனத்தவராகக் கருதவில்லை; அவர்களைத் திறை செலுத்தும் குடிகளாகவே கருதியது.

கிறித்துவ சமயம் மனிதரிடையே சகோதரத்துவத்தைப் போதித்தது. இத்தத்துவத்தை நடைமுறையில் அது போதிய அளவு கடைப்பிடிக்கவில்லையாயினும், இனவெறிக் கோட்பாட்டை அது உருவாக்கவில்லை. கிறித்துவ சமயத்திற்கு மாறுபட்டவர்களை "நாத்தி

மிஷேல் லேரிஸ் ஃபிரெஞ்சுக் கவிஞர், கட்டுரையாளர், மனித இனவியாலர், பாரிஸிலுள்ள தேசிய அறிவியல் ஆராய்ச்சி நிலைய முன்னால் முதுநிலை ஆராய்ச்சியாளர், தன்வரலாறு பற்றிய 'லா ரேஷீ த்யூ ஷே' எனும் இசை நாடகமும், "ஹோ மால்" எனும் கவிதைத் தொகுப்பும் "ஆஃப்ரிக்நுவார்" எனும்இன ஆய்வுநூலும் இவர் எழுதிய பல நூல்களுள் சில இக்கட்டுரை அவரது "ரேஸ் அண்டுகல்ச்சர்" எனும் ஆய்வுக் கட்டுரையின் ஒரு பகுதி. இது யுனெஸ்கோ, ஜார்ஜ் ஆலன் அண்டு அன்வின் 1975இல் வெளியிட்ட "ரேஸ் சையன்ஸ் அண்டு சொசைட்டி" எனும் தொகுப்பு நூலில் வெளிவந்தது.

"இன்றைய மனித சமூகங்களிடையே வெவ்வேறு அளவில் வேறுபாடுகள் இருப்பினும்; மனுக்குலத்தின் இன வளர்ச்சியே அதற்கு காரணம் எனக் கூறக்கூடாது (......). இவ்வின வளர்ச்சியின்போது, மனுக்குலத்திற்குப் பொதுவான ஒரு மூல இனத்திினின்று வேறுபாடுகள் தோன்றியிருக்கலாம். இவ்வேறுபாடுகள் பண்பாட்டு வேறுபாடுகளே. இவற்றை உயிரியல் பின்னணியிலோ; (புவியியல் பின்னணி முக்கியம் என்பதை மறுக்க முடியாதெனினும்) புவியியல் பின்னணியிலோ விளக்க முடியாது......... (பிஷேல் லேரிஸ்) இந்நான்கு மழலைகளைப் பார்த்ததும் தோல் நிற வேறுபாட்டின் காரணமாக அவை வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவையெனச் சொல்லத் தோன்றும். ஆனால் உண்மையில் இதற்கு உயிரியல் ஆதாரமில்லை.

நிழற்படம் © கிட்ரோசர், யுனெஸ்கோ

1978இல் யுனெஸ்கோ பொதுமாநாட்டின் 20ஆவது அமர்வில் இனம், இன வெறுப்பு பற்றிய அறிக்கை நிறைவேற்றப் பெற்றது. இது இனவெறியை 'இனத் தொகுதிகள் தம்மிலே உயர்ந்தவை அல்லது தாழ்ந்தோர் எனப்படுவோரை ஒடுக்க அல்லதுஒழிக்க சிலர் உரிமைபெற்றுள்ளனர் என்று உணர்த்துவதாகவும், இன வேறுபாடுகளின் அடிப்படையிலே அது பண்பு நெறிகளை அமைத்துள்ளது' என்றும் கூறுகின்றது. இவ்விளக்கம் பரந்த பொருளுடையது. ஏனெனில் இது "இன வெறியில் இன வெறிக் கொள்கைகள் வெறுப்பு நோக்குகள், வேறுபடுத்தும் ஒழுக்கம், அமைப்பு வகையான நடைமுறைகள் ஆகியவை அடங்கும். உலகின் கட்டுக் கோப்பு குறைந்தபண்டையசமூகங்களில் இனவெறி நிலவியதா? இடப்புறம்; அல்ஜீரியாவில், மத்திய சகாராவில் அஹாகர் மலையிலுள்ள டெ:.படெஸ்டில் இறகுகள் அணிந்த மனிதரைக் காட்டும் பண்டைய பாதை ஓவியங்கள்.

நிழற்படம் சேஸ்லோப் லாபட் © மியூஸீ தெ ஹொம்மே, பாரீஸ்

கர்கள்" எனக்கூறி, அவர்களை எதிர்த்துச் "சிலுவைப் போர்கள்" நிகழ்ந்துள்ளன. முரண் சமயக் கோட்பாடுகளை ஒடுக்குவதற்கான சமயத்துறை சார்ந்த தண்ட உயர் முறை மன்றம், திருச்சபைக்கு முரணானவர்களைத் தண்டித்திருக்கிறது. யூதர்களும் கத்தோலிக்கர்களும் புராட்டஸ்டண்டுகளும் ஒருவரையோருவர் அழித்திருக்கின்றனர். இதற்கெல்லாம், சமய உணர்வுதான் காரணமாக இருந்ததேயன்றி, இனவெறி அல்ல.

ஐரோப்பியர்கள் குடியேற்ற ஆதிக்கத்தை விரிவாக்கத் தொடங்கியதும் நிலைமை மாறலாயிற்று. சொந்த நாட்டு மக்களை ஏமாற்றி, அவர்களிடமிருந்து நாட்டைக் கைப்பற்றி அவர்களையும் அடிமை கொண்டபிறகு, அவர்களின் நிறத்தையும் உடலமைப்பையும், பண்பாடுகளையும் இழிவுபடுத்தி, அவர்களை நிரந்தரமாக அடக்கியாள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படலாயின.

இனவெறி தோன்றியதற்கு சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளே காரணம் என்பது தெளிவு. இனவெறிக் கொள்கையின் முன்னோடியாகிய கோபினோ பிரபு, "முற்போக்கு வாதத்தை முறியடிப்பதற்காகவும், ஐரோப்பிய உயர் குடியினரின், ஆதிக்கத்திற்கு ஏற்பட்டு வந்த ஆபத்திலிருந்து அதைக் காப்பாற்றுவதற்காகவும், மக்களாட்சிக் கோட்பாட்டினை எதிர்ப்பதற்காகவும் ஐரோப்பிய இனம்தான் உயர்ந்த இனம் என்றும், அது ஆரிய இனத்தின் வழி வந்ததென்றும், மற்ற மக்களை நாகரிகப்படுத்துவது அதற்கு இறைவன் இட்ட பணி என்றும் வாதிட்டேன்" என்று கூறியிருக்கிறார்.

வர்க்க பேதங்கள் இனவேறுபாடுகளைப் பிரதிபலிப்பதாகவும், எனவே இனவேற்றுமைகள் இயற்கையின் ஓர் அங்கம் என்றும் ஃபிரான்சைச் சேர்ந்த புரோக்சர், வாஷேர் டி லாப்பூஜ், ஜெர்மனியைச் சேர்ந்த அம்மான் போன்ற மானிடவியலறிஞர்கள், மானிடவியலின் துணைகொண்டு மெய்ப்பிக்க முயன்றார்கள். ஆயினும், வரலாற்றுக்கு முந்திய காலம் முதல் ஐரோப்பாவிலும், உலகின் பிற பகுதிகளிலும் மக்கள் குழுமங்களிடையே நடந்து வரும் கலப்புகளும், இன்றைய ஐரோப்பிய நாடுகளில் இடையறாது நடைபெறும்குடிப்பெயர்ச்சிகளும், இந்த முயற்சி எத்துணை பயனற்றது என்பதைக் காட்டுகின்றன.

பின்னர், இனவெறி கொடூரமான வடிவம் பெற்றது. குறிப்பாக, நாஜி ஜெர்மனியில், தேசியவாதம் என்ற போர்வையில் இனவெறி தீவிரமாகக் கையாளப்பட்டது. இன்றுங்கூட, சிறுபான்மையினருக்குச் சாதகமான பொருளாதார அரசியல் அமைப்புமுறையைத் திணிப்பதற்காக இந்த இனவெறி கையாளப்படுகின்றது. சிறுபான்மை இனம்தான் ஆளப்பிறந்த இனம் என்ற எண்ணத்தை உருவாக்க முயல்கின்றார்கள். குடி

இந்த 1944ஆம் ஆண்டு நிழற்படம் ஆஷ்விட்ஸ் - பெர்க்கனோ சிறைக்கு வந்து சேரும் ஹங்கேரிய யூதப் பெண்ணையும் குழந்தைகளையும் காட்டுகிறது. இவர்கள் அங்கு எரிவாயு அறையில் இறக்கவிருந்தனர். 2ஆம் உலகப்போரின்போது 60இலட்ச யூதர்கள் சாவுச் சிறைகளிலே மாண்டனர். இன வெறியைஎதித்ர்துப்போராடும் யுனெஸ்கோவின் பணி 1945இல் நிறைவேற்றப் பெற்ற அதன் விதித் தொகுப்பில் காணப்படுகின்றது. மனித, மாண்பு, சமத்துவம், ஒருவருக் கொருவர் மதிப்பு ஆகிய மக்களாட்சிக் கொள்கைகள் மறுக்கப்பட்டதாலும் அவற்றிற்குப் பதிலாக அறியாமை, அநீதி, ஆகியவற்றின் வாயிலாக, மனிதர், இனங்கள் பற்றிய ஏற்றத்தாழ்வுக் கோட்பாடுகள் பரவியதாலும், இப்போதுதான் மனுக்குலம் அனுபவித்த, பெரும், பயங்கரப் போர் தோன்றியது' என்று அது அறிவிக்கின்றது.

நிழற்படம் © ஆஷ்விட்ஸ் அருங்காட்சியகம்

யேற்ற ஆதிக்க வாதிகளை விட அவர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள் தாழ்ந்தவர்கள் என்ற கருத்து திணிக்கப்படுகிறது. ஒரு நாட்டு மக்களின் ஒரு பகுதியினர் சமூக அளவில் முன்னேற்றம் அடைவது தடுக்கப்படுகிறது. அவர்களுக்கு வேலைவாய்ப்புகள் குறைக்கப்படுகின்றன. எல்லாவகையிலும் அவர்கள் சுரண்டப்படுகின்றனர். மக்களாட்சி முறை வளர்ந்து வந்த அதே சமயத்தில் இந்த இனவெறியும் பெருகி வந்திருக்கிறது.

இனவெறியுணர்வு என்பது உள்ளார்ந்தது அன்று. ''அமெரிக்காவில் வெள்ளையர்களும் கறுப்பர்களும் பெரும்பாலும் அருகருகே வாழ்கின்றார்கள். அங்கு, கறுப்பர் குழந்தைகளைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்று வெள்ளையர் குழந்தைகள் கருதுவதில்லை. யாரேனும் அவர்களுக்கு அவ்விதம் சொல்லிக் கொடுத்தால்தான் அவர்கள் அவ்வாறு நினைக்கின்றார்கள்'' என்று ஆஷ்லி மாண்டேகு கூறுகின்றார். ''புறக்கணிக்கப்பட்ட'' இனத்தவரிடையே இனவெறி காணப்படுமாயின், அடக்கு முறைக்கு எதிரான குமுறலின் வெளிப்பாடேயாகும் அது.

ஆளும் இனம் என்றோ, அடிமை இனம் என்றோ எதுவுமில்லை. அடிமை முறை, மனித குலத்தோடு உடன்பிறந்ததன்று; இலாப நோக்குடன் உருவாக்கப்பட்ட சமுதாயங்களில்தான் அடிமை முறை தோன்றியது. பாலுணர்வுக் கண்ணோட்டத்தில் பார்த்தாலுங்கூட, இனங்களிடையே வேற்றுமையுணர்ச்சி காணப்படவில்லை. ஆதிகாலம் முதற்கொண்டே இனங்களிடையே இடையறாது கலப்புகள் நடைபெற்று வந்திருக்கின்றன.

இனப்பாகுபாட்டு உணர்வு என்பது, திடீரெனத் தோன்றுவது அல்ல; சீரிய நோக்கம் எதுவும் இன்றி பண்பாட்டு மரபு என்ற முறையில் பாரம்பரியமாக உருவாக்கப்படுகின்ற ஒரு மனப்பான்மை. இன உணர்வு, முறையானது அல்ல; மனிதனின் உள்ளார்ந்தஇயல்பும் அல்ல. மாறாக, இதன் தோற்றம் பற்றிக் கூறப்படுவதெல்லாம் வெறும் வாய்ப்பிரசாரமேயாகும். நவீன சமுதாயங்களின் பொருளாதாரக் கட்டமைப்பில் எழுகின்ற எதிர்ப்புணர்வுகளுக்கும் இனவெறிக்குமிடையே அடிப்படையில் தொடர்பு இருப்பதால், பொருளாதாரக் கட்டமைப்பை மக்கள் மாற்றியமைக்கும்போது, இந்த இனவெறியும் மறைந்து விடும்.

தமிழில்: இரா. நடராசன்

வரலாற்று அடிப்படை

மிக்கேல் வசிலியேவிச் கிரியுக்கோவ்

வரலாற்றுக் காலம் நெடுகிலும், சமுதாய வர்க்கங்களாகப் பாகுபடுத்தப்படுவதற்கு முன்பு, இனக் குழுமங்களுக்கிடையே இயற்கையில் தோன்றும் உள்ளார்ந்த வேறுபாடுகள் குறித்து மனிதன் அறிந்திருக்கவில்லை. சமூக ஏற்றத்தாழ்வினையும், அடக்கு முறையினையும் அறியாதிருந்த ஒரு சமுதாயத்தில், இன ஏற்றத்தாழ்வுக் கொள்கைகள் வளர்வதற்குச் சாதகமான சூழ்நிலை நிலவவில்லை. மேலும், மனித இனத்தினுள் நிலவும் பண்பாட்டு மற்றும் இன வேற்றுமைகளைக் கற்பனை செய்து பார்க்கும் ஆற்றல் ஆதி மனிதனுக்கு இல்லை. அவனுடைய ''இனப் பரப்பெல்லை'' மிகவும் குறுகலாக இருந்தது. அப்போது மிகச் சில இனக்குழுமங்களே இருந்தன. அவர்களும் அருகருகே வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய பொருளாதார மற்றும் பண்பாட்டு முறைகள் பெரும்பாலும் ஒரே மாதிரியாகவே இருந்தன. அவர்களின் உடல் தோற்றத்திலும் பெரும் வேற்றுமைகள் காணப்படவில்லை.

மரபுக் குழுமங்கள் ஒருங்கிணைந்தபோது முக்கிய இனக் குழுமங்கள் தோன்றின. வரலாற்றுக்கு முந்திய சமுதாயத்தின் கடைசிக் கட்டத்தில்தான் இனக் குழுமங்கள் உருவாகின. அப்போதுதான் முதன் முதலாக மனிதனின் சிந்தனை எல்லை அவனது சொந்தக் குழுமத்திற்கு அப்பாலும் செல்லத்தொடங்கியது. அவன் தன்னைப் பற்றியும், தனது குழுமத்திற்கு வெளியிலுள்ள. மொழியிலும், பண்பாட்டிலும், மற்ற இயல்புகளிலும் வேறுபட்ட மற்றவர்களைப் பற்றியும் அறிந்து கொள்ளலானான்.

எனினும், மனித வரலாற்றின் இந்தக் கட்டத்தில், ''அவர்களுக்கும்'' ''நமக்கும்'' இடையில் காணப்பட்ட முக்கிய வேறுபாடு பண்பாடு சார்ந்ததன்று; மாறாக, மரபுக்குழு அடிப்படையிலானதாகும். இந்த வேறுபாடு, ''நமது'' குழுமத்தின் தலையாய ஒற்றுமையை ஏற்றுக் கொண்டது. இந்தக் குழுமத்தில் எந்த மரபுக் குழுவும் சேர்ந்து கொள்ளலாம். மேலும், இந்தக் காலக் கட்டத்தில் ''அயல்'' குழுமங்கள் அனைத்தும் ''நமக்கு'' எதிரான ஒருங்கிணைந்த ஓர் அமைப்பாகக் கருதப்படவில்லை.

அடிமை முறையினையும், அடிமைத் தொழிலாளரைச் சுரண்டுவதையும் அடிப்படையாகக் கொண்ட முதல் தரச் சமுதாயங்கள் தோன்றியதும், மக்கள் குழுமங்களின் இன உணர்விலும், உலகம் பற்றிய அவர்களது கண்ணோட்டத்தில் பெரும் மாறுதல் ஏற்பட்டது. மக்கள் குழுமங்களிடையிலான உறவு நிலைகளில் சமூக ஏற்றத் தாழ்வுக் கோட்பாட்டினைப் புகுத்துவதற்கு அடிமை முறை உகந்ததாக இருக்கிறது. மேலும், மனித வரலாற்றில் முதல் தடவையாக, சமுதாயமே முரண்பட்ட குழுமங்களாக பிரிந்தது. அதன் பின்பு, நாடாய்வு செய்யவும், நாடுகளைப் பிடிக்கவும் சென்றபோது சந்திக்க நேர்ந்த விசித்திர உடலமைப்பும், புதுமையான பண்பாடும்கொண்டவர்கள், தாழ்ந்தவர்களாகக் கருதப்பட்டார்கள்; அவர்கள் அடிமைகளாகவும் பிடிக்கப்பட்டார்கள். பண்டைய எகிப்தியச் சுவரோவியங்களிலும், புடைப்புச் சித்திரங்களிலும் காணும் அயல்நாட்டவர்கள் உருவங்களும் உடைகளும், நைல் பள்ளத்தாக்கு மக்களிலிருந்து வேறுபட்டதாகக் காண்கின்றன. அவர்களுடைய தோற்றமும் நிலையும் அவர்கள் அடிமைகள் என்பதை உணர்த்துகின்றன.

எகிப்தியர்கள் தங்களைக் கடவுளின் குழந்தைகள் எனக் கருதினார்கள் ''எகிப்தியர்கள் தங்கள் மொழிபேசாதவர்களை காட்டுமிராண்டிகள் என அழைத்தனர்'' என்று வரலாற்றின் தந்தையான ஹெரோடாட்டஸ் கூறுகின்றார். ஆனால், அவர் கிரேக்கர் கூறியதை எகிப்தியர்களுக்குக் காட்டிக் கூறிவிட்டார்.

கிரேக்கமொழியில் ''காட்டுமிராண்டி'' என்றால், ''புரியாத மொழி பேசுகின்றவர்'' என்று பொருளாகும். இந்தச் சொல்லுடன் இணைந்த முரட்டுத்தனம், மிருகத்தனம், அநாகரிகம்

மிக்கேல் வசிலியேவிச் கிரியுக்கோவ் சோவியத் இனவியலார்; ரஷ்ய அறிவியல் கழகத்தின் இனவியல் நிலைய ஆசிரியர்; 'தி ஏன்ஷ்யன்ட் சைனீஸ் லேங்குவேஜ்;' ''தி சைனீஸ் கின்ஷிப் சிஸ்டம்'' போன்ற அறிவியல் நூல்கள் வெளியிட்டுள்ளார் 1982இல் மாஸ்கோவில் வெளியானரேஸ்அண்டு சொசைட்டி' எனும் தொகுப்பு நூலில் இவர் எழுதிய பகுதியிலிருந்து இக் கட்டுரை எடுக்கப்பட்டுள்ளது.

என்ற பண்புகள், பின்னர் கிரேக்கர்களுக்கும், மற்ற மக்கள் குழுமங்களுக்குமிடையிலான அடிப்படை வேறுபாடுகளைத் குறிக்கக் கற்பிக்கப்பட்டன.

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில், "காட்டுமிராண்டிகளைத்" தாழ்ந்தவர்களாக கிரேக்கர்கள் கருதலாயினர். "அவர்கள் நீதியின் பொருளைப் புரிந்து கொள்ளச் சக்தியற்றவர்கள். ஏனெனில் கிரேக்கர்களை விட அவர்கள் அறிவுத்திறனில் குறைந்தவர்கள்" என்று யூரிப்பிடிஸ் குறிப்பிட்டார். இந்தக் கோட்பாடு, அரிஸ்டாட்டில் தத்துவத்தில் சொல்வடிவம் பெற்றது.

அடிமை முறையின் அடிப்படையிலான ஓர் அரசை உருவாக்கிய கோட்பாட்டாளர் என்ற முறையில் அரிஸ்டாட்டில் சமூக உரிமைகளில் ஏற்றத் தாழ்வுகள் இருப்பது, மனிதனின் சட்டம் எனக் கருதினார். மனிதனிடம் தெய்விகக் கூறுகளும், விலங்குக் கூறுகளும் அமைந்திருக்கின்றன என்றும், இதில் எந்தக் கூறு மேலோங்கியிருக்கிறதோ அந்நக் கூறினைப் பொறுத்து, மனிதன் ஆள்கின்றான் அல்லது அடிமையாக இருக்கின்றான் என்று அரிஸ்டாட்டில் கூறினார்.

ஆட்சி புரியவும் சிந்திக்கவும் ஒரு சாரார் என்றும் ஆணைகளுக்கு அடிபணிந்து வேலை செய்வதற்கு ஒருசாரார் என்றும் அரிஸ்டாட்டில் மக்களைப் பாகுபடுத்திக் காட்டினார். இந்தப் பாகுபாட்டில் அவர் அடிமைகளையும், காட்டுமிராண்டிகளையும் ஒருங்கிணைத்துள்ளார். "காட்டுமிராண்டிகள் சிந்திக்கும் ஆற்றல் சிறிதும் அற்றவர்கள். அவர்கள் நிரந்தரமாக அடிமைத்தனத்தில் இருக்கப் பிறந்தவர்கள்" என்கின்றார். அரிஸ்டாட்டில் காட்டுமிராண்டிகளுக்கும், கிரேக்கர்களுக்குமிடையிலான வேற்றுமையைச் சுட்டிக் காட்டிய அரிஸ்டாட்டில், காட்டுமிராண்டிகள் பிறவியிலிருந்தே கிரேக்கர்களைவிட அடிமைத்தனம் மிகுந்தவர்கள்' என்கின்றார். இதனாலேயே இவர் தம் சீடரான அலெக்சாண்டருக்கு, 'கிரேக்கர்களைத் தம் சொந்த உறவினர்களாகவும், காட்டுமிராண்டிகளை விலங்குகளாகவும் தாவரங்களாகவும் கருதும்படி" அறிவுறுத்தினார்.

"காட்டுமிராண்டிகள்" பற்றிய இந்தக் கருத்துக்கு இணையானதொரு கருத்து பண்டையச் சீனாவிலும் நிலவியது. கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த பான்-கு என்ற வரலாற்றாசிரியர் இவ்வாறு எழுதியுள்ளார்: "காட்டுமிராண்டிகள் தங்கள் தலை முடியைத் தளர்வாகக் கட்டுகிறார்கள்; அங்கிகளை இடதுபுறம் மடித்துவிடுகின்றார்கள். அவர்களுக்கு மனிதரைப்போல் முகங்கள் உண்டு: ஆனால், விலங்குகளைப் போல் இதயம் உடையவர்கள். அவர்களுடைய ஆடைகள் நமது பேரரசில் அணியப்படும் ஆடைகளிலிருந்து வேறுபட்டவை. அவர்களுடைய பழக்கவழக்கங்கள், உணவு, பானம் அனைத்தும் வேறானவை. அவர்கள் பேசும்மொழி புரியாத ஒன்று. எனவே, அறிவார்ந்த அரசானது, அவர்களைக் காட்டுவிலங்குகளாகவே நடத்துகிறது.

சீனர்கள் வாழும் நாடு, விண்ணுலகின் மையத்தில் அமைந்திருப்பதாக கன்ஃபூசியக் கோட்பாட்டாளர்கள் கருதினார்கள். இந்த இட அமைப்புத்தான் மனிதரின் குண இயல்புகளையும் தராதரங்களையும் உருவாக்குவதாகவும் அவர்கள் நம்பினார்கள். கி.மு. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த *"உப்பு மற்றும் இரும்பு பற்றிய விவாதம்"* என்னும் ஆய்வு நூலில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. "எல்லையோர மாகாணங்களில் மக்கள் மலைப்பகுதிகளிலும் மலை இடுக்குகளிலும் வாழ்கின்றார்கள். இப்பகுதிகளில் அண்டசக்திகள் முரண்பட்டு இயங்குகின்றன. கடுங்குளிரினால் நிலம் வெடிக்கின்றது. உப்புப் பாலைவனங்களில் பயங்கரக்காற்று வீசுகிறது. நிலம் உழாமல் கிடக்கின்றது" இன்னொரு நூலில், "அண்டப்பேரரசு", விண்ணுலகுக்கும் மண்ணுலகுக்கும் நடுவில் இருப்பதாகவும் இங்கு அண்டசக்திகள் அனைத்தும் ஒருங்கிசைந்து இயங்குவதாகவும் கூறப்பட்டுள்ளது. சூரியனும், சந்திரனும் தெற்கே செல்கின்றன; துருவ நட்சத்திரம் வடக்கே தோன்றுகிறது. நிலம் ஒரு சீராக மூச்சுவிடுவதால், இங்கு உள்ளவை அனைத்தும் இயல்பாக இருக்கின்றன. எனவே, அண்டப்பேரரசில் வாழ்கின்றவர்களும், உலகின் நான்கு மண்டலங்களில் வாழும் காட்டுமிராண்டிகளும் தனித்தனிப் பண்பியல்புகளைக் கொண்டிருக்கிறார். இப்பண்பியல்புகளை மாற்ற இயலாது" எனக் கூறப்பட்டுள்ளது.



பழங்கள் பறவைகளாகவும் மீன்களாகவும் மாறும் இந்த "அயல் நில" மரம், 1605இல் ஃபிரான்ஸில் வெளியான தாவர இயல் நூலிலுள்ள ஒரு படம். ஓர் அறிவியல் நூலை எழுத ஆசிரியர், பயணிகள் கூறிய தொலைநாட்டுக் கதைகளை நம்பிவிட்டார். தூர நாட்டவரைப் பற்றிய கருத்துகள் பொதுவாக இன நோக்கு காரணமாக எளிதில் திரிக்கப்பட்டன. இதற்கு வரலாற்றில் எந்நாட்டவரும் விதிவிலக்கு அல்லர் மேல்நாட்டு, பிறநாட்டு புவியியல் நூல்கள் பல "அயல்நாட்டவரை" நூதனமான, தாழ்ந்த, மனிதரல்லாதவர்போல் காட்டியுள்ளன.

நிழற்படம் © பிப்ளிதே நேஷனல், பாரிஸ்

மக்கள் வாழும் உலகம் பற்றிய ஒரு தன்முனைப்புக் கோட்பாடு, கிரேக்கர்களிடையிலும் நிலவியது. மக்கள் வாழும் உலகத்தை அவர்கள் ஒரு வட்டமாகக் கற்பனை செய்து கொண்டனர். இதன் மையம், சூரியன் உதயத்திற்கும் சூரியன் மறைவிற்கும் பாதி வழியில் இருப்பதாக அவர்கள் கருதினர். இந்த மையத்தில்தான் கிரீஸ் அமைந்திருப்பதாக அவர்கள் எண்ணினர். கிரீசின் மையத்தில் அமைந்திருந்த டெல்ஃபிதான் 'உலகின் கொப்பூழ்" எனவும் கருதினர்.

மக்கள் வாழும் உலகின் மையத்தில் வாழ்கின்றவர்கள்தான் "நமது" மக்கள் என்றும், அவர்களைச் சுற்றி வாழ்கின்ற மக்கள் தாழ்வானவர்கள் என்றும் பாரசீகர்களிடையிலும் ஒரு கருத்து பரவலாக நிலவி வந்தது. ஹெரோடாட்டஸ் சொல்கின்றார்: "பாரசீகர்கள் தமக்கு மிக அண்டையில் வாழ்கின்றவர்களை உயர்வாக மதிக்கிறார்கள். தொலைவுக்கேற்ப மக்கள் மீது அவர்களுடைய மதிப்புக் குறைந்துகொண்டு போகிறது. தங்களிடமிருந்து மிகத் தொலைவில் வாழ்கின்றவர்களை அவர்கள் மிக இழிந்தவர்களாகக் கருதுகின்றார்கள்." இவ்விதம் பாகுபாடு செய்யும் போக்கினால், தொலைத்தூரத்திலுள்ளவர்கள் அகத்தில் மட்டுமின்றி வெளித்தோற்றத்திலும் சாதாரண மனிதர்களிலிருந்து மாறுபட்டவர்களாகவும், விலங்குகளை ஒத்தவர்களாகவும் இருப்பார்கள் என்று அவர்கள் கருதலானார்கள்.

தொலை தூரங்களில் வாழ்கின்றவர்கள் மனிதர்களிலிலிருந்து மாறுபட்டவர்கள் என்ற கருத்தைப் பண்டையச் சீனாவைச் சேர்ந்தபுவியியல் நூலாசிரியர்கள் பலரும்கொண்டிருந்தார்கள். ஆனால், சீனாவில் புத்தமதம் பரவியதும், உலகின் பிறபகுதிகளைக் குறித்துச் சீனர்கள் கொண்டிருந்த கருத்தும் மாறியது. சீன இனம்தான் தலைசிறந்தது என்ற எண்ணம் புத்தரின் சீடர்களிடையே குறையலாயிற்று. பொது சமயம் பற்றிய கருத்து அவர்களிடையே வளர்ந்தது. புத்த சமயத்தின் தலைநகரம், சீன எல்லையிலிருந்து வெகு தொலைவில் இருந்தமையால், தொலை தூரத்தில் வாழ்ந்த மக்களை இழிவாகக் கருதும் மனப்போக்கு மாறியது.

இந்தியாவில் கி. பி. 412-425இல் பயணம் செய்த சீனப் பாகியான் தமது பயணக் குறிப்புகளில் ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார். இந்தியாவில் இவர் சந்தித்த புத்த பிக்குகள் இவரிடம் 'எங்கிருந்து வருகிறீர்கள்''? எனக் கேட்டதற்கு, 'ஹான் நாட்டிலிருந்து வருகிறேன்' என்று இவர் பதிலளித்தார். இதைக் கேட்டு வியப்படைந்த அவர்கள் அத்துணை தொலை தூரத்திலிருந்து மக்கள் இங்கு எவ்வாறு வர இயலும்?' எனக் கேட்டார்கள். இதிலிருந்து. 'அண்டப் பேரரசு'', பௌத்த உலகுக்கு வெளியில்தான் இருக்கிறதுஎன்பதை இவர் உணர்ந்து கொண்டார். ஆனால், சீனாவை அண்டப் பேரரசு என்று குறிப்பிடவில்லை. ஏனெனில் அவருக்கு அப்போது அண்டப் பேரரசு' இந்தியா தான்.

மையக்காலத்தின் தொடக்கத்தில் ஐரோப்பாவில் கிறிஸ்கர்கள் பற்றிய கதைகள், வெறுங் கற்பனையாக இருக்க வேண்டும்; அல்லது, இவை உண்மையாக இருக்குமாயின், அவர்கள் மனிதர்களாக இருக்க மாட்டார்கள். அவர்கள் உண்மையில் மனிதர்களாக இருப்பின், அவர்கள் ஆதாமின் வழித் தோன்றல்களாகவே இருப்பர்' என்கிறார் அவர். மனிதனின் படைப்பு பற்றிய விவிலிய நூலின் போதனையை ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் புனித அகஸ்டின் மனித இன ஒருமைப்பாட்டை வலியுறுத்தினார்.

மத்திய காலத்து ஐரோப்பிய எழுத்தாளர்கள் மனிதர்களை கிறிஸ்தவர்கள் என்றும் அவர்களை எதிர்க்கும் புறச் சமயத்தார் என்றும் மட்டுமே வேறுபடுத்திக் காட்டினார்கள். இதனால் கிறிஸ்தவ உலகைச் சேர்ந்த மக்கள் குழுமங்களுக்குள் சமத்துவ உணர்வு நிலவியதாகக் கூறமுடியாது.

மறுமலர்ச்சிக் காலத்தில்தான் மனிதன் மனிதகுலத்தைக் கண்டறிந்தார் என்பர். கிரேக்கோ—ரோமன் அறிவியல் பாரம்பரியத்தில்ஏற்பட்ட ஆர்வம், பண்டைய எழுத்தாளர்களின் பல கருத்துகள் பரவுவதற்கு வழிகோலியது. புவியியல் கண்டுபிடிப்புகளின் காரணமாக. ஐரோப்பியர்களின் இனப் பரப்பெல்லையும் விரிவடைந்தது. மனிதக் குழுமங்களுக்கிடையிலான வேற்றுமைகள், இதுகாறும் கருதப்பட்டிருந்ததைவிட மிக அதிகம் என்பது தெரிய வந்தது.

அமெரிக்க இந்தியர்களைப் பற்றி விவிலியத்தில் ஒரு குறிப்பும் காணப்படவில்லை. அவர்களின் தோற்றம் பற்றி சிக்கல் எழுந்தது. பழைய ஏற்பாட்டின் போதனையை புதிய இனமரபு



ஆஃப்ரிக்காவில் சகாராவிற்குத் தெற்கே 15 முதல் 19ஆம் நூற்றாண்டுவரை நடைபெற்ற வெளிநாட்டு அடிமை வாணிகத்தில் 19இலட்சம் மக்கள் ஏற்றுமதி செய்யப்பட்டனரெனச் சில வல்லுநர் கருதுகின்றனர். அடிமை வாணிகத்தினால் ஆஃப்ரிக்கா இழந்த மக்களின் தொகை எவ்வளவாக இருப்பினும் அது இந்த இழப்பினால் அந்நாட்டுப் பண்பாட்டு, பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட விளைவுகளை ஓரளவுதான் காட்டமுடியும். இடப்புறம்: அடிமைகள் தப்பியோடாதபடி தடுக்கும் இரும்பு முகமூடி, கழுத்துப்பட்டை, விலங்குகள்.

நிழற்படம் © எதிமீதியா, பாரிஸ்

தவம் வேகமாகப் பரவியது. இது, ஐரோப்பிய மக்களிடையே இன உணர்வு பெருக ஒரு காரணமாயிற்று. இனங்களையும். பண்பாடுகளையும் வேறுபடுத்திக்காட்டுகிற பழைய கிறிஸ்தவக் கோட்பாடானது இரண்டு அடிக்கோள்களை அடித்தளமாகக் கொண்டதாகும். ஒன்று, மனித இனம், ஆதாம் வழிவந்தது என்பது; இன்னொன்று, ஆதி பழிவினையின் விளைவாக இனச்சிதைவு ஏற்பட்டது என்பது.

ஆதாமும் ஏவாளும் ஈடன் தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டு ஏபல் கொலையுண்டது. காயி தன் பெற்றோரைப் பிரிந்து, தன் சொந்தக் குடும்பத்தை நிறுவுவதற்காக அலைந்து திரிந்தார். ஆனால், ஆதாமின் இளைய மகன் தொடர்ந்து தந்தையின் வழியிலேயே சென்றார். இவரது வழிவந்தவர்களில் ஒருவரே நோவா. இவருக்கு மூன்று புதல்வர்கள் பிறந்தனர். இவர்கள் மூவரும், பெரும் பிரளயத்திற்குப் பின்னர், மனித இனத்தின் மூன்று பிரிவுகளைத் தனித்தனியே நிறுவினர். ஹாமின் வழியில் எகிப்து, எத்தியோப்பியா, கானான் ஆகியவற்றின் மக்கள் தோன்றினர்; ஜாஃபத்திடமிருந்து சுமேரியர்களும் மாகோக் மக்களும் தோன்றினார்கள்; ஷெம்மின் வழியில் எலாமைட்டுகளும், ஆசியர்களும், ஹீப்ருக்களும் மற்றவர்களும் வந்தார்கள். பேபல் கோபுரத்தைக் கட்டியவர்கள் ஏற்கெனவே தங்களுக்குள் வேறுபட்டிருந்தார்கள். அவர்கள் ஒருவரையொருவர் அடையாளங்கண்டு கொள்ளக்கூட இயலாதிருந்தனர். மனித இன வரலாற்றின் இந்தக் கட்டத்தில், உடலமைப்புகளிலும் மாறுதல்கள் தோன்றலாயின. இந்த உடலமைப்பு ஆதாம் கொண்டிருந்த உன்னத அமைப்பிலிருந்து பெரிதும் வேறுபட்டிருந்தது.

''பூமியின் எல்லையோரங்களில் வாழ்ந்த அரக்கர்கள், நோவாவின் வழியில் வந்தவர்கள்'' என்ற கொள்கையை புனித அகஸ்டின் (354—430) தமது *''கடவுளின் நகரம்''* என்ற நூலில் திட்டவட்டமாக மறுக்கின்றார். ''இந்த அரக்

தகவலுடன் இணைத்துப் பார்த்தபோது, பல கோட்பாடுகள் விரிவடைந்தன. இதிலிருந்து, கிரேக்கர், ரோமானியர், கார்த்தேஜியர், வேல்ஷியர் போன்ற ஐரோப்பிய மக்கள் குழுமங்களுள் ஏதாவதொன்றின் பிரிவினராக அமெரிக்க இந்தியர்கள் இருக்க வேண்டும் என்ற கொள்கை உருவாயிற்று. இந்தக் கொள்கைகுப் போப்பாண்டவர் இரண்டாம் ஜூலியசும் அதிகார முறையான ஒப்புதலையளித்தார். அவர் 1512இல் பிறப்பித்த கட்டளையின் மூலம் 'அமெரிக்க இந்தியர்களும், மனிதகுலத்தின் ஏனையோரைப் போலவே, ஆதாமின் வழித் தோன்றல்களேயாவர்' என்று பிரகடனம் செய்தார்.

ஐசக் டி லா பேரேர் (1594—1676) என்ற ஃபிரெஞ்சு அறிஞர் வெளியிட்ட கருத்து முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. இவர் 1655இல் வெளியிட்ட ஆய்வு நூலில், 'மனிதனின் தோற்றம் பற்றிப் பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் உலக மக்கள் குழுமங்கள் அனைத்தும் ஆதாமிடமிருந்து தோன்றியன என்பது ஐயப்பாட்டிற்குரியது என்றார். விவிலியக் கதையின் துல்லியத்தை இவர் ஐயுறவில்லை. எனினும், குறிப்பிட்ட பகுதி தொடர்பான நிகழ்ச்சிகளை மட்டுமே விவிலியம் கூறுவதாக இவர் கருதினார். இக்கருத்தை ஏற்றுக் கொள்வதாயின், யூதர்களின் மூதாதையும் ஆதாம்தான் என்று கொள்ள வேண்டும். ஆனால், அமெரிக்க இந்தியர்களுக்கு வேறொரு ஆதாம் இருந்திருப்பார். எனவே, மனிதனைப் படைத்தது ஒரு தனிச் செயல் அன்று; பூமியில் மனிதன் தோன்றிய பல்வேறு இடங்கள் இருந்தன' என்றார் ஐசக். இவருடைய இக்கருத்து, அறிவியலுக்கு எதிரான எல்லா வகைக் கோட்பாடுகளும் உருவாக வழி வகுத்தது; இந்தக் கோட்பாடுகள் இனப் பாகுபாட்டை வரம்பற்றதாக்கி விட்டன.

தமிழில்: இரா. நடராசன்

இனக் கொலை

கடந்த சில ஆண்டுகளாக பண்பாட்டுத் தனித்தன்மை இழப்புபற்றிப் பல்வேறு பன்னாட்டு மாநாடுகள் கவலை தெரிவித்துள்ளன. வரலாற்று, சமூக, அரசியல், பொருளாதார அடிப்படைகளுள்ள இச்சிக்கலான போக்கை "இனக் கொலை" என்கின்றனர்.

இனக்கொலை என்றால் ஓர் இனத் தொகுதிக்கு, கூட்டாகவோ, தனித்தோ, தன் பண்பாட்டையும் மொழியையும் துய்த்து, வளர்த்து, பரப்பும் உரிமை மறுக்கப்படுகிறது என்று பொருள், இது மனித உரிமைகளையும், குறிப்பாக இனத் தொகுதிகள் தம் பண்பாட்டுத் தனித்தன்மையை மதிக்கும் உரிமை, எல்லா தனிமனிதரும், நாட்டவரும் வேறுபட்டிருக்கும் உரிமை, தம்மை வேறுபட்டவராகக் கருதவும், கருதப்படவும் வேண்டிய உரிமை ஆகியவற்றைப் பேரளவில் மறுக்கும் ஒரு முனைப்பான வகையாகும். 1978இல் யுனெஸ்கோ பொது மாநாடு நிறைவேற்றிய இன, இன வெறுப்புபற்றிய அறிக்கை இவ்வுரிமையை ஏற்றுக் கொள்கிறது.

ஆ∴ப்ரிக்காவில் இன வளர்ச்சி, இனக்கொலை பற்றி வல்லுநர்கள் ஆய்ந்த கூட்டத்தின் முடிவுகளை இங்கு வெளியிடுகின்றோம். யுனெஸ்கோ கூட்டிய இக்கூட்டம் மேல் வோல்ட்டாவில் ஊவகதுகூவில் 1983 ஜனவரி 31 முதல் பிப்ரவரி 4 வரை நடைப்பெற்றது.

ஆஃப்ரிக்கக் கண்டத்தில் வாழும் மனித இனங்களின் பண்பாடும் கலாச்சாரமும், அவர்களின் தனித்தன்மையும் வெகுவேகமாகஅழிந்து வரும் நிலைமையில் உள்ளது. இந்தக் குறிப்பிட்ட அழிவு சில இனங்களை, மிகவும் அதிகமாகவும் ஆழமாகவும் பாதித்துள்ளது.

இதை மிகைப்படுத்திக் கூற வேண்டுமானால் இதன் தாக்கம், பொதுவாக ஆஃப்ரிக்க இன மக்களின் அடிப்படை வாழ்க்கையையே, ஊடுருவி அழிக்க முனைந்துள்ளது எனலாம்.

தென் ஆஃப்ரிக்காவில் மக்களை எதிர்த்தும், அச்சுறுத்தியும், கொடுமைப் எடுத்தி இன வெறி பாராட்டுவதால் அங்கே பாண்டுஸ்டான்ஸ் என்ற தனிக் குடியிருப்பு தோன்றலாயிற்று. இதனால் மனித இன ஆராய்ச்சிக்கு வழிஇல்லாமல் தடை ஏற்பட்டுள்ளது. மக்களைப் பிரித்தும், அவர்களை அழிக்கவும் தொடங்கியதால், அவர்களின் அடிப்படை வாழ்க்கையே ஆட்டங் காணத் தொடங்கியது.

மனிதஇனத்திற்கு எதிராக வெவ்வேறு வகையில், முற்றுகையிட்டு ஆக்கிரமித்து வரும் இந்த நிலைமைகள் இன்று ஆழமாகவும், அதேசமயத்தில் அதை எதிர்த்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்றும் ஆராயப் பட வேண்டும்.

பொதுவாக தற்போது எல்லா ஆஃப்ரிக்க இனத்தினரும் பன்மை கொள்கைகளை ஏற்று நடந்து வந்தாலும், வெளிநாட்டினரது தாக்கம் இந்த கொள்கைகளில் அதிகமாக காணப்படுகிறது. பொருளாதார ஆதிக்கம் கலையியல் பண்பாட்டு ஊடுருவல் போன்றவை இன்றும் இவர்கள் வாழ்க்கையில் தொடர்கிறது.

அடிமை வாணிகம், இந்த இன அழிவிற்கு அடிகோலியது எனலாம். 'டிரேன்ஸ் அட்லாண்டிக்' அடிமை வாணிகம் எனப்படும் இந்த இழிவுச் செயல்தான் ஆஃப்ரிக்க இனத்தின் சக்தி குறைவிற்கும் அழிவிற்கும் ஆரம்பம்.

ஆஃப்ரிக்க முழுவதும் இதனால் காலனி ஆதிக்கத்திற்கு உட்படத் தொடங்கியது. ஆஃப்ரிக்க இன மக்களின் அன்றாட வாழ்வும் அவல நிலைக்கு ஆளாகத் தொடங்கியது.

வெளிநாட்டிலிருந்து வந்தவர்களின் நலனிற்காக அரசியலும், சட்டங்களும் மாற்றி அமைக்கப்பட்டன. தலைமுறையாக நடந்து வந்த வாணிக முறைகள் ஒடுக்கப்பட்டு. அழிக்கப்பட்டு புதிய முறையில் மாற்றி அமைக்கப்பட்டன.

பொருளாதார முறைக்கும், சமூக கலை, பண்பாட்டு வாழ்க்கை முறைகளும், நகரங்களும். கிராமங்களும் வெளி நாட்டினரின் வசதிக்காக திருத்தி அமைக்கப்பட்டன. இவை மட்டுமில்லாமல் வாழ்க்கை முறையும் மாற்றிஅமைக்கப்பட்டு, கல்வி அறிவைப் பரப்புவதிலும், புதிய முறை பின்பற்றப்பட்டது.

இந்தக் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் அரசியல், சட்டம், பொருளாதாரம், சமூக மற்றும் கலை, பண்பாட்டிலும் உயிர் பெறத் தொடங்கியது,

புதிய நிர்வாக முறைகளும், சட்டதிட்டங்களும் ஆஃப்ரிக்க இன மக்களுக்கு ஒவ்வாது, கொள்கைகளும், நிறுவனங்களும் அவர்கள் வாழ வளர தடையாக இருந்தன.

இறக்குமதி செய்யப்பட்ட முறைகள் சட்டங்கள், பின்பற்ற வேண்டிய புதிய அணுகு முறைகள் ஆஃப்ரிக்க இன மக்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கையையும் நடைமுறை உறவினையும் பெரிதும் பாதித்தது.

பொருளாதார உறவுகள், உதாரணமாக ஓர் இனத்திற்குள்ளோ, அல்லது வெளி உலகத்தினோடோ, பொதுவாக லாப நோக்கிலேயே அமையும். இதைப் போன்ற புதிய அமைப்பு முறைகள்; ஆஃப்ரிக்க இன மக்களின் ஒன்றுடன் ஒன்று பிரியாத ஒற்றுமையான ஒருமைப்பாட்டின் அழிவிற்குக் காரணமானது.

வெளிநாட்டினர்களுக்காக, அமைந்த கல்வி முறை கடன் வாங்கப்பட்டு இங்கு மறுபடியும் அதன் தாக்கத்தை பரப்ப முயன்றபோது ஆஃப்ரிக்க இன மக்கள் பரம்பரையாக கற்ற முறைக்கு முற்றிலும் எதிராக அமைந்திருந்தது.

அறிவியலிலும் தொழில் துறையிலும், கொண்டு வரப்பட்ட புதிய மாற்றங்கள் ஆஃப்ரிக்க இனங்களின் வழிவழியாக வந்த அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்களை ஒளி குன்றச் செய்தன. ஏனென்றால், ஆஃப்ரிக்க இனத்தவர்கள் குறிப்பாக கலை, வேளாண்மை, வீடுகட்டும் முறைகள், மருத்துவம், மருத்துவ நூல் ஆகியவற்றில் சிறந்து விளங்கினர், இந்த புதிய அணுகுமுறைகள், ஏற்கெனவே அவர்கள் வாழ்ந்து, சுற்றுப்புற சூழ்நிலைக்கேற்ப கற்றறிந்த அறிவுத் திறனை, காலனி ஆதிக்கத்தினர் மதிக்கத் தயாராக இல்லை,

இந்த நிலைமைகளைத் தடுக்க



தனது பண்பாட்டின் தனித்தன்மையை பொதுத் தன்மையுடன் காட்டும் திறமையே ஒரு கலைஞனின் திறமை. அவ்வாறு செய்யும்போது அவன் தனது பண்பாட்டின் தனி இயல்பைக் காட்டுவதுடன், பிற பண்பாட்டு மக்களும் அதை நன்கு அறிந்து கொள்ள வகை செய்கிறான். மேலே: இன்றைய காங்கோ ஓவியர் சிரில் பொக்கோடாக்கி தீட்டிய ஓவியம்.

நிழற்படம் மிகேல் கிளாட், யுனெஸ்கோ

அனைத்து நாடுகள். சட்டத்தின் துணை கொண்டு தன்னை தயார் செய்து கொண்ட பொழுது. நாட்களும் நேரங்களும் சிலரது விஷயங்களில் கடந்து இருந்தன.

சில நாடுகள் சட்டதிட்டங்களினால் ஒரு நல்ல முடிவு வரும் என்று எதிர் பார்க்கவில்லை.

இதனால் தேசிய அளவிலும் உலகளவிலும், மனித இனத்தைக் காப்பாற்ற அவர்களது உரிமைகளை போற்ற குரல் எழுப்பவேண்டிய காலம் உதயமாயிற்று.

பொருளாதாரத்திலும், சமூக அமைப்லும் தங்களுக்குத் தாங்களே வேண்டியவற்றை தயார் செய்து கொள்ளவும், முன்பிருந்த ஒற்றுமையை மிளிரச் செய்யும் வகையில் முன்னேறவும், அதற்கான மாதிரி வடிவங்களை அவர்களே அமைக்கவும் வேண்டும். மேலும், தேசிய அளவிலும், ஆஃப்ரிக்கக் கண்டத்தின், சூழ்நிலைகளுக்கு ஏற்பவும் அமையவேண்டும்.

இதில், கலப்புப் பொருளாதார தொழில் நுட்பமுறைகள் முக்கிய பங்காற்றவேண்டியநிலைமையில் உள்ளன. ஆஃப்ரிக்க இனத்தவர்களால், உருவாக்கப்பட்ட முறைகளும் நடைமுறையில் உள்ள முறைகளும் கலந்து முன்னேறு வழிவகுக்க வேண்டும்.

சரியான கல்வித் திட்டங்கள் தீட்டப்படவேண்டும். ஆஃப்ரிக்க மொழியிலேயே கல்விகற்க ஊக்கமளிக்கப்படவேண்டும். உற்பத்தியைப் பெருக்கும் திட்டங்களோடு கூடிய வகையில் கல்வி முறை மாற்றி அமைக்கப்படவேண்டும்.

இதைப் போலவே பழைய மருத்துவ முறைகளும், பழைய மருத்துவ நூல்களும் பின்பற்றப்படவேண்டும். இதனால், ஆஃப்ரிக்க இனமக்களின் உடல் நலம் பெறுவதோடு அவர் கலை, பண்பாடும், இனமும் ஒன்றுபட வழிகோலும்.

இம்மாதிரியான முடிவுகள், மாற்றங்கள் ஆஃப்ரிக்க இன மக்கள் வளர்ச்சி அடையவும், இனத்தை அழிக்க முயல்வோரை எதித்துக் குரல் கொடுக்கவும், ஆஃப்ரிக்க இனத்தின் நல்லெண்ணத்தையும் மதிப்பையும் காப்பாற்றவும் ஏதுவாகும்.

எதிர்காலத்தில் இதைப்பற்றி ஆராய்ந்து எழுத, ஆராய்ச்சி செய்பவர்களை, ஆஃப்ரிக்க நாடுகளின் அறிவாளிகள் மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சி சங்கம் வரவேற்கிறது.

அரசியல்வாதிகள், நிர்வாகத்தலைவர்கள், அனைத்து நாடுகளின் நிர்வாகங்கள், உலகம் தழுவிய, அரசாங்கத்தைச் சேராத சமூக நிறுவனங்கள் முடிந்தவரையில், ஆஃப்ரிக்க இனத்தை, முன்னேறும் வகையில், திட்டங்கள் நிறைவேற ஒத்துழைப்பு தருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

தமிழில்: அனந்தபத்மநாபன்

சமூக நடைமுறையில், 'இனம்' என்பது உயிரியல் கூறாக இருப்பதைவிட சமூக கற்பனையாகவே இருக்கிறது எனலாம். 'இனம்' எனும் கற்பனை பெருமளவு மனித, ஊறுபாட்டை விளைவித்துள்ளது. அண்மை ஆண்டுகளில் அது மிகப் பல உயிர்களை அழித்து, சொல்ல இயலாத் துயரை ஏற்படுத்தியுள்ளது. இன்னும் அது பல்லாயிரம் மனிதரின் இயல்பான வளர்ச்சியைத் தடுத்து, உற்பத்தித் திறனுள்ள உள்ளங்கள் ஒத்துழைக்கும் பயனை நாகரிகம் பெறாதவாறு தடைசெய்கிறது.

இனம்பற்றிய அறிக்கை, யுனெஸ்கோ, பாரிஸ், ஜூலை, 1950

‘நாம்,’ ‘அவர்கள்’

ஆல்பெர்ட் மெம்மி

இனப்பாகுபாடு குறித்து 20 ஆண்டுக்கால கூர்ந்தாய்வுக்கும் சிந்தனைக்கும் ஆராய்ச்சிக்கும் பிறகு, இக்கொள்கை மிக மோசமானது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டேன். இக்கொள்கையின் அறநெறி அம்சம் மட்டுமல்ல, தருக்கவாதமும் பயனற்றதுதான். இனப்பாகுபாட்டின் எந்த அம்சமும் பகுத்தறிவுக்கு உகந்ததாக இல்லை. இது பற்றிய கருத்துகள் முரண்பாடானவை; வாதங்கள் வஞ்சகமானவை; முடிவுகள் ஐயத்திற்குரியவை அல்லது அவசரமானவை.

இனப்பாகுபாட்டை ஆதரித்து ஏராளமான நூல்கள் எழுதப்பட்டுள்ளன. இவை சுருக்கமாக மூன்று கருத்துகளை வலியுறுத்துகின்றன. முதலாவதாக, தூய இனங்கள் இருக்கின்றன என்பது; இரண்டாவதாக, இத் தூய இனங்கள் உயிரியல் முறையில் உயர்ந்தவை. அதனால் உளவியல் முறையிலும் பண்பாட்டு முறையிலும் உயர்ந்தவை என்பது; மூன்றாவதாக இந்த உயர்வு காரணமாக, இந்த இனங்கள் சமூகத்திலும் பொருளாதாரத்திலும் ஆதிக்கம் செலுத்த உரிமையுடையவை என்பது.

இம்மூன்று கருத்துக்களும் எத்துணை வலுவற்றவை என்பதை மேற்போக்கான ஆய்விலிருந்தே தெரிந்து கொள்ளலாம். மனிதனின் இன்றைய உயிரியல் தன்மையானது, இடைவிடாத இனக்கலப்புகளின் மூலம் வளர்ச்சியடைந்தது; இன்னும் வளர்ச்சியடைந்து வருகிறது. இந்நிலையில், தூய இனம் என்ற கோட்பாடு வெறுங் கற்பனையேயாகும். இதனால், மனிதனுக்கு மனிதன் வேறுபாடு இல்லை என்று கருதிவிடலாகாது. பண்பாட்டு நிலையிலும், உயிரியல் முறையிலுங்கூட மனிதனுக்கு மனிதன் வேறுபாடு உண்டு. எந்த ஒரு சமூகக் குழுமமும் ஓர் உயிரியல் வளர்ச்சி முறைக்குள் அடங்குவதாக இல்லை என்பதை அண்மைக்கால அறிவியல் ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. அதே போன்று, உயர்ந்த இனக் கோட்பாடும் செயல் முறையில் தாக்குப் பிடிக்கக்கூடியதாக இல்லை. உயிரியல் முறையில் உயர்ந்த இனம்இருப்பதாக ஏற்றுக்கொண்டாலும், அது உளவியல் முறையிலும் பண்பாட்டு முறையிலும் உயர்வுக்கு வழிகாட்டவில்லை. இறுதியாக. இயற்கையான உயர்வின் வடிவம் எதிலும், பொருளாதார அல்லது சமூகம் சலுகைகளை எதற்காகத் தொடர்புப்படுத்தவேண்டும் என்பது தெரியவில்லை. சுருங்கக்கூறின், இனப் பாகுபாட்டிற்கு ஆதாரமான அறிவியல் கோட்பாடோ தெளிவான வேறுபாடோ எதுவுமே இல்லை.

இனப்பாகுபாடானது ஒரு கற்பனைக் கோட்பாடாக, ஒரு போலிக்கொள்கையாக இருக்கிறது. அது பகுத்தறிவுக்குப் புறம்பானது. உணர்ச்சிவயப்பட்ட குழப்ப நிலையில் உண்டான அச்சத்தின் விளைவாக உருவான ஒரு பொய்த்தோற்றம் அது. தம்மிலிருந்து வேறுபட்ட, தாம் அறிந்திராத வேறொரு நபரை அல்லது குழுமத்தைக் காணும்போது ஒரு நபரிடம் அல்லது குழுமத்திடம் உண்டாகும் அச்சம் அல்லது அவநம்பிக்கை காரணமாக இது விளைகின்றது. இதனால், அந்த மாற்றார் மீது வெறுப்பு தோன்றுகிறது. அந்த எதிர்த்தரப்பிரை விடத் தாம் அதிகமான சலுகைகளை அல்லது நலன்களைப் பெறவேண்டும் என்ற ஆவேசம் பிறக்கிறது. அதனால் எதிர்த்தரப்பினர் தம்மைவிட இழிந்தவர்கள் என மெய்ப்பிக்க எந்த இழிவான வழிகளையும் கடைப்பிடிக்கத் துடிக்கின்றார்கள்.

அச்சமும், உயிர்வாழ்வதில் போட்டியும் இணைந்து இனப்பாகுபாட்டுக்கு வழிவகுக்கிறது. உயிர் வாழ்வதற்காக மனிதன் தனது நேர்மையினையும் உடமைகளையும் பாதுகாத்துக்கொள்ள முயல்கின்றான். சில சமயம், அண்டை அயலாரின் உடமைகளையும், உணவையும், கச்சாப் பொருள்களையும், நிலத்தையும், பெண்களையும், பண்பாட்டு உடைமைப் பொருள்களையும் கவர்ந்துகொள்ளவும் விழைகிறான். மனிதன் ஆக்கிரமிப்பாளனாகவும் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகின்றவனாகவும் இருக்கின்றான்; அவன் அச்சுறுத்துகின்றான்; அதேசமயம் அச்சப்படுகின்றான்.

எனினும், மற்றவர்கள் மீதான தீவிர வெறுப்புணர்ச்சியை இனவெறி என்று கூறிவிடமுடியாது. இனவெறியாளரின் வாதங்கள் இந்த வெறுப்புணர்வையும், பழைய பண்பாட்டு மற்றும் சமூக உண்மைகளையும் அடிப்படையாகக் கொண்டவை, குற்றஞ்சாட்டுகின்றவருக்கு உயர்வினையும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு இழிவினையும் கற்பிக்கின்ற வேறுபாடுகளின் பெயரால் ஆதிக்கத்தையும் ஆதாயத்தையும் நியாயப்படுத்தும் போலி வாதம் இதுவாகும். ‘‘வெள்ளையராக இருப்பது நல்லது, அழகானது, மாறாக, கறுப்பராக இருப்பது தீமையானது; அழகற்றது. எனவேதான், வெள்ளையர் சலுகைகளுக்கு உரிமையுடையவர்கள்’’ என்று வலியுறுத்துவது இந்த வாதமாகும்.

இனவெறியானது, அதாவது, உயர்ந்த இனம் என்ற கோட்பாடானது, உயிரியல் தூய்மையின் அடிப்படையில் அமைந்தது என்பதற்கு ஆதாரமே இல்லை. இது, ஆதிக்கத்தையும் சுரண்டலையும் நிலைநாட்டுவதற்கான ஒரு போலிவாதமேயாகும். இக்காரணத்தாலேயே, மனித நடத்தையின் பொதுத்தன்மையினையும், இனவெறியின் தனித்தன்மையினையும் சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமாகிறது. இல்லையெனில், மற்றவர்களை வெறுக்கின்ற நிரந்தர நாடகத்தை, இனவெறியுடன் இணைந்த பொய்ப்பிரச்சினைகள் மூடி மறைத்துவிடும். தெளிவாக வேறுபடுத்திக் காட்டுவதற்காக இந்தத் தீவிர வெறுப்புணர்வை ‘‘முரண்பாட்டுக்கிலி’’ என்ற புதிய சொல்லால் குறிப்பிட விரும்புகின்றேன். ஆதிக்கத்தையும், சிறப்புரிமைகளையும் நியாயப்படுத்துவதற்காக உயிரியல் இன வேறுபாடுகளால் உண்டான அச்சத்தைப் பயன்படுத்திக் கொள்கிற முரண்பாட்டுக் கிலியின் ஒரு வகையைக் குறிப்பதற்கு ‘‘இனவெறி’’ என்ற சொல்லை ஒதுக்கி விடுவோம். இதேபோன்று, செயல்முறை பொருள் வரையறை எதுவும், இந்த விரிவான பொருளையும் அதே நடத்தை முறையின் குறிப்பிட்ட பொருளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இந்த வகையில் ‘‘என்சைக்ளோ பீடியா யுனிவர்சாலிஸ்’’ என்ற கலைக்களஞ்சியத்தின் பொருள் விளக்கம் பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. அதில், ‘‘ஆதிக்கத்தை நியாயப்படுத்துவதற்காக, குற்றஞ் சுமத்துபவருக்கு நலன்களையும், அவரது ஆதிக்கத்திற்குள்ளானவருக்குத் தீங்கினையும் உண்டாக்கும் வகையில், உண்மையான அல்லது கற்பனையான உயிரியல் வேறுபாடுகளைப் பொதுமைப்படுத்தி நிரந்தரமாகப் பயன்படுத்துவதே இனவெறி என்பதாகும்’’ என்று கூறப்பட்டுள்ளது. இந்த விளக்கத்தைத் தனது பொருள் வரையறைக்கு அடிப்படையாக யுனெஸ்கோவும் பயன்படுத்

ஆல்பெர்ட் மெம்மி: இவருடைய நூல்கள் 20 நாடுகளில் வெளியாகியுள்ளன. இனவெறியின் பல்வேறு வெளிப்பாடுகளை விளக்கும தகுதி படைத்தவர். ‘‘தி காலனைசர்’’, ஷான் போல் சார்த்ர் எழுதிய முகவுரையுடைய ‘‘தி காலனைஸ்டு’’ (சுவனிர் அச்சகம், லண்டன், 1974), ஆல்பர்ட் காமஸின் முன்னுரையுள்ள ‘‘தி பில்லர் ஆஃப் சால்ட்’’ (1955) ஆகியவை இவருடைய ஆங்கில நூல்களுள் குறிப்பிடத்தக்கவை. இவரது அண்மை நூல் ‘‘லே ராசிஸ்ம்’’ (கலிமார் பதிப்பகம், பாரிஸ், 1982)

> மனுக்குலத் தொகுதிகள் தம் அறிவையும் உணர்ச்சிகளையும் வளர்க்கும் உள்ளார்ந்த திறமையில் வேறுபட்டுள்ளார் எனும் கருத்திற்கு யாதொரு அடிப்படையுமில்லை என இன்றைய அறிவியல் அறிவு விளக்குகிறது.
>
> ஒரே இனத்தைச் சேர்ந்த மனிதர்களிடையேயுள்ள உயிரியல் வேறுபாடுகள், இரு வேறு இனங்களுக்கிடையேயுள்ள அதே உயிரியல் வேறுபாடுகளின் அளவைப்போல், அல்லது அதைவிட மிகுதியாக இருக்கலாம்.
>
> இனவகை மாற்றங்களுடன் எவ்வித தொடர்புமற்ற பரந்த சமூக மாற்றங்கள் பல நிகழ்ந்துள்ளன. எவ்வேறு தொகுதியினரிடையே நிலவும் சமூக, பண்பாட்டு வேறுபாடுகளை நிர்ணயிப்பதில் இனவியல் வேறுபாடுகள் முக்கியத்துவம் பெறுவதில்லை என்று வரலாற்று, சமூகவியல் ஆய்வுகள் எண்பித்துள்ளன.
>
> **இனம், இனவேறுபாடுகளின் இயல்புபற்றிய அறிக்கை.**
> **யுனெஸ்கோ, பாரிஸ், ஜூன் 1951**

தியிருக்கிறது.

யூதர் இன எதிர்ப்புக்கும், அடிமை வாணிகத்திற்குமிடையிலான தொடர்பு என்ன? பெண்களுக்கு அல்லது இளைஞர்களுக்கு எதிரான தப்பெண்ணத்தையும் இனவெறி எனலாமா? ஏழைகளையும் ஒடுக்கப்பட்டவர்களையும் பாதிக்கும் ஒரு வகை இனவெறியும் இருக்கிறதா? இக்கேள்விகள் இக்காலத்தில் மனச்சாட்சிகளை உறுத்துகின்றன. இந்த நடத்தைமுறைகளுக்கிடையிலான தொடர்பினை நிலைநாட்டுவதற்கு, இவற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் அவதியிலிருந்துஆதிக்கவாதி என்ன நன்மையைப் பெறுகின்றார் என்ற கேள்விக்கு விடை கண்டாலே போதும்,

''முரண்பாட்டுக்கிலி'' என்பதன் பொதுவான பொருள் விளக்கத்தின் கீழ், இந்த நடத்தைமுறை வடிவங்கள் ஒவ்வொன்றின் தனித்தன்மையையும் தனிச்சொல்லாலேயே குறிப்பிடலாம், இதன்படி, கறுப்புமக்கள் மீதான இனவெறியை ''*நீக்ரோக்கிலி*'' எனலாம்; யூதர்கள் எதிர்ப்பினை ''*யூதேயோக்கிலி*'' என்றும் அராபியர் மீதான வெறுப்பினை ''*அரபுக்கிலி*'' என்றும் குறிக்கலாம்.

இனவெறி என்பது ஒரு கோட்பாடு என்ற முறையில் அண்மையில்தான் தோன்றியது. அது இன்றும் நடைமுறையில் கையாளப்படுகின்றது. 16ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவில் காலடி வைத்த ஸ்பானியர்கள், அமெரிக்க இந்தியர்களை நாகரிகப்படுத்தும் புனிதப்பணிக்காகத் தாங்கள் அங்கு



CLXXXII.

18ஆம் நூற்றாண்டில் ஷான்–ஷாக் ரூசோ படைத்த 'பெருந்தகு காட்டுமிராண்டி'' எனும் கற்பனை அமெரிந்திய இலட்சிய உருவத்தை இயற்கை நிலையில் வாழும் ''பூர்வீக மனிதனாக'' காட்டுகிறது. இக்கருத்து, தென் அமெரிக்க இந்தியத் தலைவனைக் காட்டும் இந்த 16ஆம் நூற்றாண்டுச் சித்திரத்தில் காணப்படுகிறது.

நிழற்படம் © எதிபீதியா, பாரிஸ், பிப்ளியோதெக் நேஷனல்

வந்திருப்பதாகக் கூறினார்கள். அமெரிக்க இந்தியர்கள் இயற்கையிலே தங்களைவிடத் தாழ்ந்தவர்கள் என்றார்கள். அவர்களை வென்று, அங்கு குடியேறுவது தங்களது சட்டப்படியான உரிமை என்றும் வாதிட்டார்கள். இவ்வாறு, தங்களை உயர்ந்தவர்களெனக் கருதிக்கொண்டு, மற்றக் குழுமங்களைத் தாழ்வாக எண்ணிக்கொண்டு, அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் திட்டமிட்ட முயற்சி, குடியேற்ற ஆதிக்கத்துடன் தொடங்கியது.

கறுப்பர் அடிமை வாணிகம் 17ஆம் நூற்றாண்டில் உச்ச நிலையை எட்டியது. உயிரியல் முறை இனப்பாகுபாட்டுக்கு ஆதரவாகப் பயன்படுத்தப்பட்ட முதல் வாதங்களுக்கும் கறுப்பர் அடிமை வாணிகத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. இத்தகைய வாதங்களை சில பண்டைய எழுத்தாளர்கள் முதலில் கூறியுள்ளார்கள். அடிமை முறை அடிப்படையிலான சமூக அமைப்பை அரிஸ்டாட்டில் ஆதரித்தார். கிரேக்கர்களுக்கு அடிமைகளாகப் பணிபுரிந்த 'காட்டுமிராண்டிகளை' இயற்கையிலேயே தாழ்ந்தவர்கள் எனக் கூறி நியாயப்படுத்த முயன்றார். உயிரியில் முறையில் இனங்களுக்குக் களங்கம் கற்பிக்கும் போக்கு அப்போது காணப்படவில்லை. பின்னர், அடிமை வாணிகத்தின் ஆதாயத்தைப் பெருக்கும் நோக்குடன் இந்த வாதங்கள் பயன்படுத்தப்பட்டன.

யூதர் எதிர்ப்பு மிகத் தொன்மையானதுதான். ஆனால் முதலில் அது ஒரு சமய அல்லது தேசியச் சிக்கலாகவே எழுந்தது. மிகவும் பிற்காலத்தில்தான், யூதர்களின் சமூக மறுமலர்ச்சி பெற்று, பொருளாதாரப் போட்டிகள் தோன்றிய பின்னர்தான் யூதர்எதிர்ப்பு ஒரு கோட்பாடாக உருப்பெற்றது. சமூக நெருக்கடிகள் தோன்றியபோதெல்லாம் அவதிக்குள்ளான மக்களின் ஆத்திரம், தங்கள் மத்தியில் வாழ்ந்த யூதர்களின் மேல் பாய்ந்து, யூதர் எதிர்ப்புணர்வு புத்துயிர் பெற்று வந்தது. பரவலாக வாழ்ந்துவந்த யூதர்கள் இத்தகைய ஆத்திரத்திற்கு மிக எளிதில் பலியாகி வந்தார்கள்.

சுருங்கக்கூறின், அறிவியல் அடிப்படையில் இனப்பாகுபாட்டுக்கு விளக்கமளிக்கும் போக்கு அண்மையில்தான் தோன்றியது. இனப்பாகுபாட்டு ஆதரவாளர்களில் ஒருவராகிய ஜோசப் ஆர்தர் கோபினோ என்பவர், இனப்பாகுபாட்டுக்கு மூளை பற்றிய ஆராய்ச்சியைப் பயன்படுத்தினார். ஐரோப்பியர்களுடையதைப் போன்ற மூளை ஹீரான்களுக்கு இல்லை என்று அவர் கூறினார். புகழ்பெற்ற விஞ்ஞானிகள்கூட இக்கருத்தை நம்பினார்கள். லின்னேயஸ், ஜார்ஜஸ் லூயி பஃபான் போன்றவர்கள்கூட இனப்பாகுபாட்டை ஆதரித்தார்கள். இவர்களுடைய கருத்துகள் அறிவியல்முறை இனப்பாகுபாட்டுக்கு வழி வகுத்தன. மனித இனங்கள், உயர்ந்த இனங்கள் என்றும் தாழ்ந்த இனங்கள் என்றும் பிரிந்துள்ளன என்ற கருத்து சென்ற நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பியப் படித்தவர்களிடையே உருவாகியது. இதற்கு டார்வின் கோட்பாடுகூட ஆதாரமாக காட்டப்பட்டது.

இவ்வாறு இனவெறி வளர்வதற்குச் சாதகமான சூழல் உருவாக்கப்பட்டது. இந்தச் சூழலைப் பயன்படுத்திக்கொண்டு, ஃபிரான்சில் யூதர் எதிர்ப்பாளர்களை கோபினோ உருவாக்கினார். ஆனால், இவருடைய கருத்துக்குச் சிறந்த விளைச்சல் கண்டது ஜெர்மானியில்தான். அங்கு யூதர் எதிர்ப்பு உணர்வு தலைவிரித்தாடியது. அவர்களை ஒழிப்பதற்கு அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டது, யூதர்கள், முகாம்களில் வைக்கப்பட்டனர்; நாடு கடத்தப்பட்டனர்: இனப்படுகொலைசெய்யப்பட்டனர். இத்தாலியில், மற்ற மக்கள் குழுமங்கள் மீது இத்தாலிய ஆதிக்கத்தை நியாயப்படுத்தும் ஃபாசிசம் தோன்றியது. எத்தியோப்பியப் படையெடுப்பு இதனால் நடைபெற்றது. ஸ்லாவிய இயக்கங்கள் தோன்றி, இலக்கியம், மொழி, பழக்கவழக்கங்கள் மூலம் தங்கள் இனத்தின் உயர்வை நிலைநாட்ட முயன்றன. இதற்கென இரத்தக் களரியில் ஈடுபட



1964ஆம் ஆண்டில் நோபல் அமைதிப் பரிசுபெற்ற டாக்டர் மார்ட்டின் லூத்தர் கிங், வாஷிங்டனிலுள்ள லிங்கன் நினைவு மன்றத்தின் முன் ''உரிமைக்காக நடைபெறும் மன்றாட்டுத் திருப்பயண''த்தில் கலந்து கொள்ளும் மக்களிடம் பேசுகிறார். இங்குதான் அவர் தாம் கொலை செய்யப்படுவதற்கு 5ஆண்டுகளுக்கு முன் ஆகஸ்ட் 28. 1963இல் இச்சிறப்புமிகு சொற்களைக் கூறினார்:

'அன்பர்களே! இன்றைய, நாளைய இன்னல்களை நாம் எதிர்நோக்க இருந்தபோதிலும், இன்னும் நான் ஒரு கனவு காண்கிறேன். அது அமெரிக்கக் கனவில் ஆழ வேரூன்றிய கனவு. அதாவது, எல்லோரும் சமமாகப் படைக்கப்பட்டவர்களே எனும் தனது கோட்பாட்டின் உண்மைப்பொருளுக்கேற்ப இந்நாடு ஒருநாள் வாழ்ந்துகாட்டும் இவ்வுண்மைகள் தெளிவாகத் தெரிவன என்று நம்புகிறோம்

ஒருநாள் ஜார்ஜியாவின் செங்குன்றுகளிலே முன்னாள் அடிமைகளின் புதல்வரும், முன்னாள் அடிமை உரிமையாளரின் புதல்வரும் சமபந்தியில் அமர்வார்களெனக் கனவு காண்கின்றேன்.

அநீதி எனும் வெப்பத்தில் புழுங்கும் மாநிலமும். அடக்குமுறை எனும் வெப்பத்தில் புழுங்கும் மாநிலமுமான மிசிசிப்பி மாநிலம்கூட ஒருநாள் உரிமை, நீதி எனும் சோலையாக மாறுமெனக் கனவு காண்கிறேன்.

என் நான்கு சிறு குழந்தைகளும் தம் தோலின் நிறத்திற்காக அல்லாமல், ஒழுக்க இயல்புக்காகவே மதிக்கப்படும் நாட்டில் வாழ்வார்களெனக் கனவு காண்கிறேன்.

திழற்படம் யு எஸ் ஐ எஸ்

வும் அவை தயங்கவில்லை. ஆங்கிலோ — சாக்சானிய நாடுகளையும் இந்நோய் தொற்றிக் கொண்டது. ஃபிரான்சில் கால்டன் போன்ற ஆங்கிலேயர்கள், மற்ற இனங்கள் பரவுவதைத் தடுப்பதற்கான ஆராய்ச்சியில் ஈடுபட்டார்கள். அமெரிக்காவிலும் ஒரு சாரார் இனப்போராட்டத்தை ஊக்குவிக்கலானார்கள். தென் ஆஃப்ரிக்காவில் இனவெறி ''இன ஒதுக்கல்'' என்ற வடிவம் பெற்றது.

சமூக, பண்பாட்டு, உயிரியல் அடிப்படையிலான இக்கோட்பாடுகள் அனைத்தையும் ஒப்பிட்டுப் பார்க்குங்கால் ஓர் உண்மை மட்டும் தெளிவாகப் புலனாகிறது. ''இன உயர்வு என்ற பெயரில், ஒரு மனித இனம் மற்ற இனங்களைவிடத் தான்தான் உயர்ந்த இனம் எனக் கருதிக்கொண்டு மற்றவர்களை அடக்கியாளும் உரிமை தனக்குத்தான் உண்டு என எண்ணுகின்றது. இந்த உரிமையை நிலைநாட்டிக்கொள்ள அது வன்முறையிலும் படுகொலையிலும் ஈவிரக்கமின்றி ஈடுபடுகின்றது.

குடியேற்ற ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்கும், கறுப்பர் அடிமை வாணிகத்தை நடத்துவதற்கும், யூதர்களை ஒழிப்பதற்கும் சிறந்த சாதனமாக இனவெறிக் கோட்பாடு பயன்படுத்தப்பட்டது. இன்றும் இதனைப் பயன்படுத்தி வருகின்றார்கள். அல்ஜீரியப் போரைத் தொடர்ந்து பல இலட்சம் அரபுத் தொழிலார்கள் ஃபிரான்சிலும் ஐரோப்பாவிலும் குடியேறினார்கள். அது அங்கு அரபுக்கிலியும் நீக்ரோக்கிலியும் வளர வழி செய்தது. குடியேறிய தொழிலாளர்கள் மீது வெறுப்புணர்வு தோன்றுவதற்கும் இது வழி வகுத்தது. மற்றவர்களைக் கண்டு அஞ்சுகின்ற முரண்பாட்டுக்கிலியின் ஓர் அங்கமே இந்த மனப்பான்மையாகும்.

பெண்களுக்கு எதிரான ''இனப்பாகுபாடு'' எதுவும் உண்டாவதற்கு ''இல்லை'' என விடை கூறலாம். ஏனெனில், பெண்கள் ஒரு தனி இனமோ, தனிக் குழுமமோ, தனிச் சமூக—பொருளாரக் குழுமமோ, இல்லை. எனினும் பெண்களின்பால் ஒருவித முரண்பாட்டுக்கிலி நிலவுகின்றது. ஆண்களை உயர்ந்தவர்கள் என்றும் கூறும் பல்வேறு கோட்பாடுகள் உருவானது இதனால்தான். இனவெறிக்குக் காரணமான இந்தப் பல்வேறு வகைக்கிலிகளை நன்கு அறிந்து கொண்டால்தான் இனவெறி எதிர்த்துத் துணிவுடன் போராடமுடியும்.

தமிழில்: இரா. நடராசன்

கல்வித்துறையில் வெறுப்புணர்வு, பொறையின்மை இனவெறி ஆகியவற்றிற்கெதிரான நடவடிக்கை

யுனெஸ்கோவின் 12ஆம் பெருந்திட்டக்குறிகோள்கள்:

- தனிமனிதரும், சமுதாயங்களும், நாடுகளும் பொறையின்மை, இனவெறி ஆகியவை வெளிப்படுவதை உணருமாறு செய்து, அவற்றை அவற்றிற்கெதிராகத் திரட்டுதல்.
- பிற பண்பாடுகளைப் புரிந்து கொள்வதன் மூலம் தனிமனிதரும், தொகுதியினரும், நாடுகளும் ஒருவருக்கொருவர் தம் நோக்கங்களையும் செயல்களையும் மாற்றத் துணைசெய்தல்.

கல்வித்துறையில் மூன்று மட்டங்களில் செயல் நடைபெறும்:

1. வேறுபாடு காட்டிச் செயல்படுவதையும், வெறுப்புணர்வு, பொறையின்மை, (இன) வேறுபாட்டுணர்வு ஆகியவை பரவுதலையும் தடுக்கும் கல்விக் கொள்கைகள், திட்டங்கள், அமைப்புகள்.
2. தம் பணியின் சிறப்பை உணர்ந்து, வெறுப்புணர்வு, பொறையின்மை, இனவெறிபற்றி விழிப்பாயிருப்பதற்கு ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல். எடுத்துக்காட்டாக, பல்வேறு பண்பாட்டுப் பின்னணிகளை நன்கு அறிந்துகொள்வதற்காக ஆசிரியர் பரிமாற்றத்திற்கு ஏற்பாடு செய்யலாம்.
3. இனவெறியை வளர்க்கும் வகையில் வீரர்களையும் நிகழ்ச்சிகளையும் புகழ்ந்தேற்றும், அல்லது அதற்கு மாறாக சகிப்புத்தன்மை, எல்லாப் பண்பாடுகள்மீது மதிப்பு ஆகிய பண்புகளை வளர்க்க உழைத்த வரலாற்றுப் பெரியார்களுக்குப் போதிய முக்கியத்துவம் தராத பாட நூல்களும் கல்விச் சாதனங்களும், இச்சூழ்நிலையில், பாடக் கருத்துக்களைத் திருத்தி, ஆசிரியர், மாணவரின் ஆய்வுத் திறனைக் கூர்மையாக்குவதற்காகப் பாட நூல்களையும் கல்விச் சாதனங்களையும் பரிமாறிக்கொள்ள ஊக்கம் தரப்படும்

குழந்தைப் பருவத்தின் தொடக்கத்திலே எதிர் நோக்கங்களும் வெறுப்புணர்வுகளும் உருவாக்கப்பட்டு, கல்விப் பருவத்தில் அவை உறுதிப்படுத்தப் பெறுவதால், புதிய உள்நோக்குகளைப் பயிற்றுவித்து, அதனால் இனவெறியை எதிர்க்கும் தேவையை இவ்வாறு யுனெஸ்கோ வலியுறுத்துகின்றது.

நிழற்படம் © யெலி வெய்ன்பர்க்

1955, 1956 முழுவதும் தென்னா∴ப்ரிக்க காவலர், இன ஒதுக்கக் கொள்கையை எதிர்த்த நூற்றுக்கணக்கான பேர்களின் இல்லங்களையும் அலுவலகங்களையும் தொடர்ந்து சோதனையிட்டனர். போலி விசாரணைக்காக ஆவணங்கள், கடிதங்கள் சிறு வெளியீடுகள், உடைகளின் துண்டுகள் ஆகியவற்றைக்கூட எடுத்துச் சென்றனர். பிறகு 1956 டிசம்பர் 5ஆம் நாள் காங்கிரஸ் இயக்கத் தலைவர்களின் வீடுகளைக் காவலர் தாக்கி அவர்களைச் சிறைப்படுத்தினர். 146 பேர்—104 ஆ∴ப்ரிக்கர், 23 வெள்ளையர், 21 இந்தியர், 8 பிற நிறத்தவர் —தென்னா∴ப்ரிக்காவில் சாவுத் தண்டனைக்குரிய குற்றமாகிய உயர் அரச துரோகக் குற்றம் சாட்டப்பட்டனர். அவர்களுள் பெரும்பாலோர் விரைவில் விடுவிக்கப்பட்ட போதிலும் 30 பேர் அடுத்த $4\frac{1}{2}$ ஆண்டுகளாக ஒவ்வொரு நாளும் நீதிமன்றத்தில் நீண்ட ஆவணங்களை வாசித்தலையும், ஆ∴ப்ரிக்க தேசிய காங்கிரஸ் கூட்டங்களைப் பற்றித் திரித்துக் கூறப்பட்டவைகளையும், கைக்கூலி பெற்றோர் கூறிய தவறான செய்திகளையும் இடையறாது கேட்க வேண்டியிருந்தது. அரசதுரோக விசாரணையின் இறுதியில் குற்றம் சாட்டப்பட்டோர் அனைவரும் விடுதலை பெற்றனர். இது தென்னா∴ப்ரிக்காவில் அரிய நிகழ்ச்சியாகும். மேலே: குற்றம்சாட்டப்பட்டோரின் நிழற்படம். ஆ∴ப்ரிக்க காங்கிரஸ் தலைவர் நெல்சன் மெண்டெலா முன்னிருந்த மூன்றாம் வரிசையில் வலமிருந்து எட்டாவதாகக் காணப்படுகிறார். 1966இல் அவரைத் திரும்ப ஆயுள் தண்டனை வழங்க, இன்னும் சிறையில் உள்ளார்.

3 இன ஒதுக்கம் இனவெறி அரசின் கோட்பாடு

வெட்கக்கேடான வரலாறு

பேசில் டேவிட்சன்

தென் ஆஃப்ரிக்காவில் ஒரு சிறிய வெள்ளைச் சிறுபான்மையினர் உருவாக்கிக் கையாளும் இனவெறியின் வரலாறுதான் இன ஒதுக்கத்தின் வரலாறாகும். பெரும்பான்மைக் கறுப்பர்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்காகவும், இந்தப் பெரும்பான்மையினரிடமிருந்து அவர்களின் நாட்டைப் பறிப்பதற்காகவும், அவர்களது உழைப்பை இயன்ற வரையில் சுரண்டி, வெள்ளையர்கள் மற்றும் அவர்களின் அயல் நாட்டுக் கூட்டாளிகளின் நலனுக்காகப் பயன்படுத்துவதற்காகவும் சிறுபான்மை வெள்ளையர் இன ஒதுக்கத்தைக் கையாள்கின்றனர். நன்னம்பிக்கை முனையில் முதன் முதலில் டச்சுக்காரர்கள் 1652இல் குடியேறுவதற்குக் காலடி வைத்ததிலிருந்து இனவெறியின் வரலாறு தொடங்குகிறது. தொடக்க முதலே, இந்த டச்சுக்காரர்களும், அவர்களுக்குப்பின் ஹாலந்து, பிரிட்டன், ஃபிரான்ஸ் முதலிய நாடுகளிலிருந்து வந்து குடியேறியவர்களும், தங்களுடைய சொந்த வசதிக்காகவும் ஆதாயத்திற்காகவும், இந்த மண்ணின் மைந்தர்களின் உடைமைகளையும் உரிமைகளையும் பறிப்பது தங்களுடைய உரிமை எனக் கருதினர்.

அதன்பின் அவர்கள் தங்களுடைய ஆதிக்கத்தைச் சட்ட முறையாக்கிக் கொண்டு, பறித்த நிலத்தின் பரப்பளவையும் வெகுவாகப் பெருக்கிக் கொண்டனர். ʻʻகறுப்பர்கள்ʼʼ என்ற பட்டியலில், ஆசியர்களையும் கலப்பு நிறத்தவர்களையும் சேர்த்துக் கொண்டனர். இதைத் தவிர, ஆதிநாளிலிருந்து இது நாள் வரையிலும் 'வெள்ளையர்'களுக்கும் 'கறுப்பர்'களுக்குமிடையிலான உறவுகளில் மாற்றம் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. நேரடி அடிமை முறையின் பண்பற்ற வடிவங்கள் படிப்படியாக வளர்ந்து, இனவெறிக்கான புரட்டுவாதச் சட்டங்களாகவும், ஒழுங்குமுறை விதிகளாகவும் உருவாகியிருக்கின்றன. இவை, இவற்றைப் பயன்படுத்துபவர்களுக்கும், இவற்றால் துன்புறுவோருக்கும், சட்ட முறையாக்கப்பட்ட அடிமைத்தனம் என்றே கூறலாம்.

இனவெறியின் ஆதாரங்களைப் பங்குபோட்டுக் கொள்வதில் 'வெள்ளையர்களிடையே நடைபெற்று வரும் போட்டி, அரசியலை இழிவுபடுத்தி, இன்றைய நாளிதழ்களை நிரப்பிவருகின்றது. டச்சு மொழிபேசும் சிறுபான்மையினருக்கும், ஆங்கிலம் பேசும் சிறுபான்மையினருக்குமிடையே நாடாளுமன்றத்தில் கடும் மோதல்கள் நடைபெற்று வருகின்றன. இவ்விரு சிறுபான்மைக் குழுவினரும், பெரும்பான்மைக் கறுப்பர்களைச் சுரண்டுவதில் மட்டுமே ஒருங்கிணைந்திருக்கிறார்கள்.

பேசில் டேவிட்சன் பிரிட்டிஷ் எழுத்தாளர்; வரலாற்றறிஞர். ஆஃப்ரிக்க வரலாற்றிலும் இன்றைய நிகழ்ச்சிகளிலும் வல்லுநர்; பிரிட்டிஷ் பிற நாட்டுத் தொலைக்காட்சிக்காக ஆஃப்ரிக்க வரலாறு பற்றி 8 ஒரு மணி நேர நிகழ்ச்சிகள் தயாரித்து வருகிறார். அமில்கார் கப்ராலின் முன்னுரையுடைய லிபரேஷன் ஆஃப் கினி (1969) இன் தி ஐ ஆஃப் தி ஸ்டார்ம் அங்கோலாஸ் பீப்புள்ʼʼ (1972) என்பவை ஆஃப்ரிக்காபற்றி இவர் எழுதிய நூல்களுள் சில.

இந்தப் போலித் திரைக்குப் பின்னால் இவர்கள் தங்கள் குழுவினரின் நலனுக்காக ஒருவரோடொருவர் போராடி வருகின்றார்கள்.

இன ஒதுக்கத்தின் தோற்றம் குறித்து வேறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. ஜான் கால்வினின் சமயச் சீர்திருத்தக் கொள்கையைச் செயற்படுத்துவதற்காக, டச்சு மொழி பேசும் சிறுபான்மையினர் இன ஒதுக்கத்தைத் தோற்றுவித்தனர் என்று ஒரு சாரார் கூறுகின்றனர். 1948இல் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றப் பெரும்பான்மைதான் இனஒதுக்கத்தை ஏற்படுத்தியது என்கின்றனர் இன்னொரு சாரார். இவ்விரு கருத்துமே, இனஒதுக்க முறையின் உண்மைப் பொருளைத் திரித்துக் கூறுவதாகும். ʻʻஆதாயங்களையெல்லாம் தாங்களே எடுத்துக் கொள்வதற்குப் பிரிட்டிஷ், ஃபிரஞ்சு போன்ற குடியேற்றவாதிகள் கையாண்ட குடியேற்ற ஆதிக்க இனவெறியை மூடி மறைப்பதற்காகக் கூறப்பட்ட போலி விளக்கங்களே இவையாகும். குடியேற்ற ஆதிக்க இனவெறியின் மிகக் கொடிய வடிவமே 'இன ஒதுக்கம்' ஆகும். இந்த முடிவுகள் கடுமையானவையாகத் தோன்றலாம். ஆனால், தென் ஆஃப்ரிக்க வரலாறு நமக்குப் புகட்டும் பாடம் இந்த முடிவுகள்தான்.

இன்றையத் தென் ஆஃப்ரிக்காவின் நிலப்பகுதிகளாக அமைந்துள்ள லிம்போ ஆற்றுக்குத் தெற்கிலுள்ள நிலப்பகுதிகள் அனைத்தும் 1899 வரையில் கறுப்பர்களின் எதிர்ப்பை முறியடிப்பதற்காக இராணுவ வல்லரசுகளால் பயன்படுத்தப்பட்டன. 1805இல் நடந்த டிரபால்கர் போரில் ஃபிரஞ்சுக்காரர்களை ஆங்கிலேயர்கள் தோற்கடித்து, நன்னம்பிக்கை முனையில் பாதுகாப்பாக நிலை கொண்டார்கள். அதன்பின், அவர்கள் ʻʻஎல்லைப் போர்கள்ʼʼ என அழைக்கப்பெற்ற நீண்ட போர்களில் தொடர்ச்சியாக ஈடுபட்டார்கள். ஆனால் கறுப்பர்களின் எதிர்ப்பை அவர்கள் முற்றிலுமாக முறியடிக்க இயலவில்லை. கறுப்பர்களின் எதிர்ப்பு நீடிக்கவே, ஆங்கிலேயர்கள் கிழக்கு, வட கிழக்குத் திசைகளில் படைகளைச் செலுத்தி, அங்கிருந்த ஆஃப்ரிக்கர் சமுதாயங்களை ஒன்றன்பின் ஒன்றாக அடிமைகொண்டார்கள். இறுதியாக, 1879இல் ஜூலு முடியாட்சிப் பகுதியை வெற்றி கொண்டார்கள்.

இங்கு குடியேறிய டச்சுக்காரர்களின் மரபினரின் எண்ணிக்கை பெருகவே, அவர்கள் தங்களுக்கென ஒரு தனி ஆட்சியை உருவாக்க முனைந்தார்கள். அவர்கள் டச்சுமொழியும், ஆஃப்ரிக்க மொழிகளும் கலந்த ʻʻஆஃப்ரிக்கான்ஸ்ʼʼ என்ற தனிமொழியைப் பேசினார்கள். ஆனால், எக்சோசா, ஜூலு போன்ற வலுவான ஆஃப்ரிக்கச் சமுதாயங்களை வெற்றி கொள்ளும் அளவுக்கு அவர்கள் எண்ணிக்கை பலமோ படை வலிமையோ கொண்டிருக்கவில்லை. எனினும், மற்றச் சிறிய ஆஃப்ரிக்கச் சமுதாயங்களை அவர்கள் எளிதில் வென்றார்கள். இச்சமுதாயங்கள், பிரிட்டிசார் வெற்றிகொண்ட

பகுதிகளுக்கு மேற்கில் வாழ்ந்து வந்தார்கள். இப்பகுதிகளை, ஆரஞ்சு சுதந்திர அரசு, டிரான்ஸ்வால் என்ற குடியரசுகளாக அமைத்துக்கொண்டு டச்சு மரபினருக்கெனத் தனி ஆட்சிப் பகுதியை அமைத்துக் கொண்டார்கள்.

1880இல் தனித்தனியாக நான்கு வெள்ளையர் ஆட்சிப் பகுதிகள் அமைந்தன. நன்னம்பிக்கை முனையும், நேட்டாலும் ஆங்கிலேயர் குடியேற்றங்களாக அமைந்தன; வடக்கிலும் மேற்கிலும் இரண்டு டச்சு மரபினரின் குடியரசுகள் அமைந்திருந்தன. இக்குடியேற்றங்களில் வாழ்ந்தவர்கள் உழுதொழில் செய்தனர். தொழில் உற்பத்தி எதுவும் நடைபெறவில்லை. அங்கிருந்த குடியானவர்கள் விளைபொருள்களையும், கம்பளியையும் ஏற்றுமதி செய்து. தமக்குத் தேவையான உற்பத்திப் பொருள்களை இறக்குமதி செய்துகொண்டனர். 1867இல் கிம்பர்லியில் வைரப்படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த வைரச் சுரங்கங்களை 1871இல் ஆங்கிலேயர் தங்கள் உடைமையாக்கிக் கொண்டனர். இதன்பின், 'வைரத் தேட்டம்'' தொடங்கியது. 1885இல் நன்னம்பிக்கை முனையிலிருந்து கிம்பர்லிக்கு இருப்புப் பாதைபோடப்பட்டது. ஆனால், இந்தப் புதிய செல்வங்கள் கூட, பொதுவான நிலைமையில் எவ்வித மாறுதலையும் உண்டாக்கவில்லை. டிரான்ஸ்வால் குடியிருப்பிலுள்ள விட்வாட்டர்ஸ்ராண்டின் 1884-86இல் தங்கச்சுரங்கங்கள் கண்டுபிடிப்பட்ட பிறகுதான் இங்கு பெரும் மாறுதல்கள் நிகழலாயின.

இந்தத் தங்கச் சுரங்கங்களில் ஒரு டன் தாதுப்பொருளில் அடங்கியுள்ள தங்கத்தின் அளவு மிகக்குறைந்த விகிதத்தில் இருந்தது. தங்கப் படிவங்கள் மிகவும் ஆழத்தில் இருந்தன. தங்கத்தாதுவைத் தோண்டியெடுத்து, அதிலிருந்து தங்கத்தை பிரித்தெடுப்பதற்கு பெருமளவு மூலதனம் தேவைப்பட்டது. டிரான்ஸ்வால் மக்கள் குடியானவர்களாக இருந்ததால் அவர்களிடம் பெரும் முதலீடு செய்ய இயலவில்லை; அதில் அவர்களுக்கு ஆர்வமும் இல்லை. இத்தங்கச் சுரங்கங்களைத் தங்கள் உடைமையாக்கிக்கொள்ள ஆங்கிலேயர்கள் சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். 1899இல் ஆங்கிலேயருக்கும் டச்சு மரபினருக்கும் போர் மூண்டது. ஈராண்டுகள் நடந்த இப்போரில் பெருமளவு உயிர்களைப் பலிகொடுத்த பின்னர் ஆங்கிலேயர் வெற்றிபெற்றனர். இந்த வெற்றிதான் இன்றையத் தென் ஆஃப்ரிக்காவுக்கு அடிகோலியது.

போரில் வென்ற ஆங்கிலேயர், தோல்வியுற்ற டச்சு மரபினருடன் விரைவிலேயே ஒரு சமரச உடன்பாடு செய்து கொண்டனர். இந்த உடன்பாடு இங்குள்ள பெரும்பான்மைக் கறுப்பர்களுக்கு எதிரான ஒரு கூட்டணியாக அமைந்தது. இதன்படி, நன்னம்பிக்கை முனைக் குடியேற்றம், நேட்டால், டிரான்ஸ்வால், ஆரஞ்சு சுதந்திர அரசு ஆகியவை அடங்கிய தென் ஆஃப்ரிக்க ஒன்றியம் 1910இல் அமைக்கப்பட்டது. பெரும்பான்மைக் கறுப்பர்களுக்குத் திட்டமிட்டு ஓர வஞ்சனை காட்டும் வழிமுறைகள் அனைத்தும் இந்த ஒன்றியத்தின் அரசமைப்பில் எழுத்து வடிவில் சேர்க்கப்பட்டன. இன ஒதுக்கத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட இந்த ஒன்றியத்தின் நாடாளுமன்றத்தில் முழுவதும் வெள்ளையர்களே இடம்பெற்றனர், அவர்களிலும் ஆங்கிலம் பேசும் சிறுபான்மையினரே ஆதிக்கம் செலுத்தினர்.

இந்தப் புதிய நாடாளுமன்றம் சிறிதும் காலந்தாழ்த்தாமல், திட்டமிட்ட இனவெறிக்கு உத்தரவாதமளித்தது. 1911இல் இயற்றப்பட்ட உள்நாட்டுத் தொழிலாளர் ஒழுங்குமுறைச் சட்டம், ஊதியம் ஈட்டும் கறுப்பர்களுக்கு எதிரான ஓர வஞ்சனையைச் சட்டபூர்வமாக்கியது. 1913இல் நிலச் சட்டம் ஒன்றை நாடாளுமன்றம் நிறைவேற்றியது. இதன்படி, இந்த ஒன்றியத்திலுள்ள மொத்த நிலப் பரப்பில் 90% பகுதி வெள்ளையர்களின் உடைமைக்கு ஒதுக்கப்பட்டது. மீதமுள்ள 10% பகுதி மட்டுமே கறுப்பர்களுக்கென ஒதுக்கப்பட்டது. கறுப்பர்கள் உடைமை கொள்வதற்கென ஒதுக்கப்பட்ட இந்த சிறிய பகுதி ''உள்நாட்டவர் ஒதுக்கப்பகுதிகள்' என அழைக்கப்பட்டது. இப்பகுதி விரைவிலேயே 'வெள்ளையர்கள் பகுதிகளுக்கான கறுப்புத் தொழிலாளர்களின் புகலிடமாக மாறியது. மீதமுள்ள 90% பகுதியில், கறுப்பர்கள் குடியிருக்கவோ நடமாடவோ, வேலை செய்யவோ. பொழுதுபோக்கவோ கூடாதெனத் தடை விதித்துச் சட்டங்கள் இயற்றப்பட்டன.

1923இல் உள் நாட்டவர் (நகர்ப்புறப் பகுதிகள்) சட்டம் இயற்றப்பட்டது. இதுவும். 1913ஆம் ஆண்டு நிலச் சட்டமும் கறுப்பர்களுக்கு எதிரான வெள்ளையரின் கொள்கைகள் அனைத்திற்கும் அடிப்படையாக அமைந்து, இன்றுங்கூட நடைமுறையில் இருந்து வருகின்றன. 'வெள்ளையர் பகுதி'களுக்குள்ளும் பிரிவினையை ஏற்படுத்த இவை ஒரு கருவியாக அமைந்தன. ''தனிமுறை வளர்ச்சி'' என்ற பெயரில் இந்தப் பிரிவினை ஏற்படுத்தப்பட்டது.

இந்தச் சட்டத்தின்படி, வெள்ளையர்களுக்குக் கறுப்பர்கள் எந்தக் கேவலமான வேலையையும் செய்ய வேண்டும்; என்ன கூலி கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளவேண்டும்; வேலை நிலைமை எவ்வளவு மோசமாக இருந்தாலும் முணுமுணுக்கலாகாது. இவ்வாறு வெள்ளையர்கள் தங்களுக்குக் கறுப்பர்களின் உழைப்பு மலிவாகக் கிடைக்கும்படி செய்து கொண்டார்கள். இதன்பின் கறுப்புத் தொழிலாளர்களுக்கு 'அடையாளச் சீட்டு' முறை புகுத்தப்பட்டது. வெள்ளையர்களிடம் பணிபுரியும் கறுப்பர்களைக் காவல் துறையினர் கண்காணிக்க இந்தமுறை வழி செய்தது. கறுப்பர்கள் தங்கள் விருப்பம்போல வெள்ளையர்களுடன் கலப்பதை இது தடை செய்கிறது. வெள்ளையர்கள் விரும்பினால், குழந்தைகள் காப்பாளர்களாகவும் சமையல்காரர்களாகவும் கறுப்பர்களை வேலைக்கு வைத்துக் கொள்ளலாம்

ஆங்கிலம் பேசும் சிறுபான்மையினர் சட்டங்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டிருந்த வரையில், தென்

(தொடர்ச்சி 21ஆம் பக்கம் பார்க்க)

நிழற்படம் ©பீட்டர் மகுபன், இன்டர்நேஷனல் டெஃபன்ஸ் அண்ட் எய்டு ஃபண்டு ஃபார் சௌத் ஆஃப்ரிக்கா; லண்டன்

பட்டினியின் தோற்றம்

துருத்திய மார்பினில் எலும்புகள் எண்ணினேன்
கூருளி கொண்டு கொத்திய என்புகள்
பட்டினிச் சிற்பியின் படைப்புகள் போலும்!

விண்ணுயர் தட்டை விழித்துப் பார்த்தான்
கண்ணாடிக் கண்கள் கண்டன அப்பம்.

விறைத்த தோலும் வெளுத்தே இருந்தது
மருத்துவர் கைகளை மறைக்கும் உறைபோல்.

பறந்து சிதறும் பல்வண்ண ஈக்களை
பறித்தே இருக்கும் பச்சோந் தியைப்போல்
நாக்கை இவனும் நீட்டி இழுத்தான்.

குழந்தாய். குழந்தாய்! உனது வயிறும்
இரவும் பகலும் இடித்து முழங்கும்
அரிமா வாழும் அவலக் குகையாம்.

ஆஸ்வால்டு எம்புயிசெனி ம்ட்ஷாலி

யுனெஸ்கோ, ஐ.நா.சங்கம், தென்னா:ப்ரிக்கா

1946இல் ஐ. நா. பொதுப் பேரவையின் முதல் அமர்வி லிருந்தே தென் ஆஃப்ரிக்க அரசாங்கத்தின் இனவெறிக் கொள்கைகள் ஐ. நா.வில் விவாதிக்கப்பட்டு வந்துள்ளன. அந்த ஆண்டில் இந்தியா அப்போதிருந்த தென் ஆஃப்ரிக்க ஐந்கிய அரசாங்கம் இந்திய வம்சா வழித் தென்னாஃப்ரிக் கர்களுக்கு எதிரான சட்டமியற்றியதாகப் பேரவையின் முன் முறையீடு செய்தது. இரு சட்டங்கள் குறிப்பாக இந்தியருக்கு எதிரானவை. முதல் சட்டம் நேட்டாலிலும் ட்ரான்ஸ்வாலிலும் சில பகுதிகளில் இந்தியர் நிலம் வாங்கல் விற்றலைத் தடுத்து நிறுத்திய அறுதியிடும் சட்டம். அடுத்த சட்டம் அறுதியிடும் சட்டத்தை நேட்டால், ட்ரான்ஸ்வால் முழுவதும் செயல்படுத் தும் ஆசிய நில உரிமை, இந்தியப் பிர்திநிதித்துவச் சட்டம் (1946) இது இன—தனி—அரசியல் உரிமைகளைப் புகுத்தி யது.

தென் ஆஃப்ரிக்க அரசாங்கம் ஐ.நா.வின் எதிர்ப்புகளைப் புறக்கணித்தது. ஆசிய நில உரிமைச் சட்டத்தைச் செயல் படுத்தியது மடடுமல்லாமல், 1948இல் இன ஒதுக்கக்கொள்கை யின் அடிப்படையிலே தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தது. 1950ஆம் ஆண்டு இனப்பிரிவுப் பகுதிச் சட்டம் எண் 41 நகர்ப் பகுதிகளில் இந்த இன ஒதுக்கத்தைச் செயல்படுத்த முனைந் தது,

இச்சட்டப்படி, "வெள்ளையர்" நகர்களின் ஓரத்திலுள்ள நகர்ப்புறங்களுக்கு ஆஃப்ரிக்கர்கள் அனுப்பப்பட்டனர். இந்தி யர்கள் குறிப்பிட்ட நகர்ப்பகுதிகளில் மட்டும் வாழ அனுமதிக் கப்பட்டனர். இன ஒதுக்கத்துடன் இனப் பாகுபாட்டு முயற்சி யும் பெருமளவில் தொடங்கியது. 1950ஆம் ஆண்டின் மக்கள் பதிவுச் சட்டமும், அதன் பிந்திய திருத்தங்களும் தென் ஆஃப்ரிக்க மக்களை வெள்ளையர், பிற நிறத்தவர், ஆஃப்ரிக் கர் என மூன்று முக்கிய பிரிவுகளாகப் பகுத்தன. ஆசியர்கள் பிறநிறத்தவர் பிரிவில் ஒரு துணைப் பிரிவாக இடம் பெற்றனர். அதே ஆண்டில் தென் ஆஃப்ரிக்காவின் இன ஒதுக்கக் கொள் கையின் அடிப்படையில் வேறு இரு சட்டங்களும் இயற்றப் பட்டன. முதல் சட்டம் சுதேச பிரநிநிதித்துவ அவை (தென் ஆஃப்ரிக்க அரசாங்கம் 1936இல் ஏற்படுத்திய இந்த அவையில் வெள்ளையரும் ஆஃப்ரிக்கரும் இருந்தனர்) ஒழிப்பு, பொது டைமைத் தடுப்புச் சட்டம். இச்சட்டம் தனிமனிதரையும் நிறு வனங்களையும் கட்டுப்படுத்தும் மிகுதியான அதிகாரங்களை அரசாங்கத்திற்கு வழங்கியது. அடுத்த சட்டம் கேப் பகுதி யில் வாழ்ந்த பிறநிறத்தவர் ஒரு நூற்றாண்டளவாகத் துய்த்து வந்த பொதுப் பட்டியல் வாக்குரிமையைப் பறிக்க முனைந்த சட்டத்தின் முதல் பகுதியாகும்.

ஐ.நா. பொதுப் பேரவை 1950 டிசம்பர் 2ஆம் நாள் நிறை வேற்றிய 395(5)ஆம் தீர்மானம் இதற்குப் பதில் அளித்தது. "இன ஒதுக்கக் கொள்கை இன வேறுபாட்டின் அடிப்படை யில் அமைந்தது" என்று அது கூறியது. இதைத் தொடர்ந்து 1952, ஜனவரி 12ஆம் நாளிட்ட 651 (6) ஆம் தீர்மானமும், 1952,, டிசம்பர் 5ஆம் நாளிட்ட 615(7) தீர்மானமும், 1958, நவம்பர் 11ஆம் நாளிட்ட 719 (8)ஆம் தீர்மானமும் நிறை வேற்றப்பெற்றன. இத்தீர்மானங்கள் தென் ஆஃப்ரிக்க அர சாங்கம் நகர்ப்பகுதிச் சட்டங்களை மாற்றுமாறும், வெள்ளை யருக்கு மட்டுமன்றிப் பிறருக்கும் வாக்குரிமை வழங்குமாறும் வலியுறுத்தின.

1953இல் திருப்பவும் தேசியக் கட்சி அதிக பெரும்பான்மை யுடன் தேர்தலில் வெற்றிபெற்றது. இவ்வெற்றியின் பயனாக வெள்ளையரின் பழைய எதிர்க்கட்சிகளும் தொகுதிகளும் நடைமுறையில் மறைந்தன. வெள்ளையர் இன ஒதுக்கக் கொள்கையைப் பரவலாக ஆதரித்தனர் என்பதையும் இத் தேர்தல் முடிவுகள் எண்பித்தன.

1953இல் பாண்ட்டு கல்விச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன்படி கல்வி அமைச்சர் அரசாங்க பாண்ட்டு பள்ளிகளில் பயிற்று மொழியைத் தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றார். இதனால் சில ஆஃப்ரிக்கப் பள்ளிகளில் ஆங்கிலம் முக்கிய பயிற்றுமொழியாக இருந்த நிலை மாறியது; அரசாங்கம் திணித்த குலமரபு முறையின் ஒரு பகுதியாக பாண்ட்டுக் கல்வி புகுத்தப்பட்டது.

ஐ.நா. சாசனத்தின் அடிப்படைகளுக்கேற்ப நிலையை மறுஆய்வு செய்யுமாறு ஐ.நா. பொதுப் பேரவை தென் ஆஃப்ரிக்க அரசாங்கத்தை "அழைத்தது". 1955இல் பேரவை தென் ஆஃப்ரிக்க அரசாங்கத்தின் கொள்கைகள் பற்றித் "தனது கவலையைத் தெரிவித்தது" 1957இல் பொதுப் பேரவை கொள்கையை மாற்றுமாறு அந்த அரசாங்கத்திற்கு "வேண்டுகோள் விடுத்தது."

1953ஆம் ஆண்டு பாண்ட்டு கல்விச் சட்டத்தைப் புகுத்திய பிறகு அரசாங்கம் தனது பொது வருவாயிலிருந்து நிதி வழங்கு வதற்கு ஒரு வரம்பு விதித்தது. 1955-56இல் இது ஆண்டுத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டது. இது போதுமானதாக இல்லையாதலால், ஆப்ஃரிக்க கல்வி பரவுவதற்குத் தடையாக இருந்தது. ஆஃப்ரிக்கர் மீது விற்க்கப்பட்ட வரி கூடுதலானது. ஏற்கெனவே இருந்த அநீதியான வரி முறை இன்னும் மோச மானது. 1959, 1958இல் சுதேச (நகர்ப்பகுதிகள்) தொகுதிச் சட்டம் திருத்தப்பட்டது.1927ஆம் ஆண்டு சுதேச ஆட்சி முறைச் சட்டம் 1956இல் மேலும் திருத்தப்பட்டது. இது ஆஃப்ரிக்கர் களை அகற்றுவதற்கோ, குறிப்பிட்ட பகுதிகளுக்கு ஒதுக்கு வதற்கோ நாட்டுத் தலைவருக்கு மிகுந்த அதிகாரங்கள் அளித்தது. 1956ஆம் ஆண்டுத் தொழில் சமரச சட்டம், ஓரினத் திற்குப் பதிலாக மற்றோரினத்தை வேலைக்கு அமர்த்து வதைத் தடுக்கவும், குறிப்பிட்ட இனத்தவருக்கு ஒதுக்கவும், குறிப்பிட்ட தொழில்களில் வேலைக்கு அமர்த்தப்படும் குறிப் பிட்ட இனத்தவரின் எண்ணிக்கையை அல்லது சதவீதத்தை நிர்ணயிக்கவும் அரசாங்கத்திற்கு அனுமதியளித்தது.

பொதுப் பேரவையின் தீர்மானங்களை எதிர்த்ததுடன், அப்பிரச்சினையை வாதிக்க பேரவைக்கு அதிகாரமளிக்கும் 2 (7) ஆம் விதி தரும் உரிமையை தென் ஆஃப்ரிக்காவில் குடி யேற்ற நாட்டுக் கொள்கைக்கு அதிகாரப் புரட்சி தொடங்கிய தும் தென் ஆஃப்ரிக்கா வேறு சில திட்டங்களையும் வகுத்தது. மேல்நாட்டு ஆதிக்கம் நீங்கியதும் பொதுவுடைமை ஆஃப்ரிக் காவில் செல்வாக்கு பெறும் என்றும், கறுப்பர் வாழும் ஆஃப் ரிக்க அரசுகளைப் பிரிட்டிஷ் 'காமன் வெல்த்' எனும் பொது நலக்கூட்டில் சேர்க்கக் கூடாது என்றும் 1953இல் டாக்டர் மலான் கூறினார்.

அதற்குப் பதிலாக மலான் ஒரு புதிய திட்டத்தைக் கூறி னார். அது மேல் நாட்டுக் குடியேற்ற அரசுகளுக்கும் தென் ஆஃப்ரிக்காவிற்கும் இடையே ஒரு விரிவான பொதுக் கொள்கையை வகுக்கும் "ஆஃப்ரிக்க சாசனம்" ஆகும்.

இதற்கிடையில் 1950இல் யுனெஸ்கோ தனது இனத் திட்டத்தைத் தொடங்கி இனம் பற்றிய அறிக்கைகளை வெளியிட்டுப் பரப்பியது. இவை தென் ஆஃப்ரிக்காவின் இன ஒதுக்கக் கொள்கையின் உயிர் நாடியையே தாக்கின.

யுனெஸ்கோ இனவெறிப் பற்றிப் பல அறிவியல் ஆய்வுகளையும் வெளியிட்டது. இவை பல நாடுகளில் பரவின. தென் ஆஃப்ரிக்காவில் இன உறவுகள் நிலையம் 1955-1956 இல் புதிய அமைப்பைப் பெற்று விரிவாக்கப்பட்டது. இந்நிலையம் யுனெஸ்கோவின் அறிக்கைகளையும் சிறு நூல்களையும் விளம்பரப்படுத்திப் பரப்பியது. நாம் ஏற்கெனவே பார்த்தது போல், இந்நிலையில்தான், 1953ஆம் ஆண்டுத் தேர்தலுக்குப் பிறகு வெள்ளையரின் எதிர்கட்சிகள் சரிந்தன. 1955 ஏப்ரல் 5ஆம் நாள் தென் ஆஃப்ரிக்கா யுனெஸ்கோவிலிருந்து வெளியேறுவதாக அறிவித்தது. "யுனெஸ்கோ வெளியீடுகள் தென் ஆஃப்ரிக்காவின் இனப் பிரச்சினைகளில் தலையிடுவதும், ஆஃப்ரிக்க இன உறவுகள் நிலையம் அவற்றைத் தென் ஆஃப்ரிக்காவில் விளம்பரப்படுத்திப் பரப்புவதும்" அதற்கு காரணம் என்றும் அறிவித்தது.

1960இல் மகளிரின் கட்டாய, நுழைவுச் சீட்டுச் சட்டத்திற்கெதிராக நடந்த வன்முறையற்ற போராட்டத்தில் தென் ஆஃப்ரிக்க காவலர் படை ஆப்ரிக்கர்களை ஷார்ப்வில் எனுமிடத்தில் படுகொலை செய்தது. உலகை உலுக்கிய இச்செயல் 16 புதிய சுதந்தர ஆஃப்ரிக்க நாடுகள் ஐ.நா. சங்கத்தில் சேர்க்கப் பெற்ற அதே ஆண்டில் நிகழ்ந்தது. ஐ. நா. பாதுகாப்பு அவை முதல் முறையாக இன ஒதுக்கக் கொள்கை உலக அமைதிக்கு ஊறு விளைவிக்குமெனக் கருதியது. ஐ. நா, சாசனப்படி "உலக அமைதிக்கு ஊறு விளைவிக்கும்" செயலுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கையைப் பாதுகாப்பு அவை எடுக்கவில்லை. ஆயினும், அவை பின் 1960, ஏப்ரல் முதல் நாள் தீர்மானம் அரசாங்கத்தின் கொள்கைக்காக வருந்தி, சமத்துவத்தின் அடிப்படையில் இன ஒற்றுமை ஏற்படுத்துமாறு கேட்டுக் கொண்டது.

1960இன் இறுதியில் ஐ. நா. பொதுப்பேரவை, தென் ஆஃப்ரிக்காவுக்கு எதிராகத் தடைகளை விதிக்கும் வரைவுத் தீர்மானத்தை வாதித்தது. இது பெரும்பான்மை வாக்குகள் பெற்ற போதிலும், முக்கிய பிரச்சினைகள் பெறவில்லை.

ஆயினும், மேல்நாடுகளின் நோக்கில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. இந்நாடுகள் அதுவரை 2(7)ஆம் விதியின்படி தலையிடுவது தவறெனக் கூறிய தென் ஆஃப்ரிக்காவை ஆதரித்தன; தென் ஆஃப்ரிக்க பிரச்சனையை வாதிக்க பொதுப் பேரவைக்கு உரிமை இல்லை என்றும் கூறின.

1961 மே 31இல் தென் ஆஃப்ரிக்க வெள்ளையர் தம் நாடு குடியரசாக வேண்டுமென வாக்களித்தனர். அதுவரை பிரிட்டிஷ் அரசி தென் ஆஃப்ரிக்காவின் அரசியாகவும் இருந்தார். ஆனால் ஷார்பவில் நிகழ்ச்சியின் பிறகு, பிரிட்டிஷ் பொதுநலக் கூட்டிலிருப்பதை எதிர்க்கத் தொடங்கின. இந்நெருக்கடியின் விளைவாகப் பொதுநலக்கூட்டே தொடர்ந்து நிலைபெறுமா என்ற ஐயம் ஏற்பட்டது. 1961இன் தொடக்கத்தில் லண்டனில் நடைபெற்ற முக்கிய கூட்டத்தில் தென் ஆஃப்ரிக்கா வெளியேற்றப்பட அல்லது வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது தலைமை அமைச்சராக இருந்த டாக்டர் வெர்வோர்டு பொதுநலக்கூட்டு தென் ஆஃப்ரிக்காவின் உள்நாட்டுக் காரியங்களில் தலையிடுவதாகக் குற்றம் சாட்டி வெளியேற முடிவுசெய்தார்.

ஷார்பவில்லுக்குப் பயங்கர ஆட்சி தொடங்கியது எனலாம். ஆஃப்ரிக்க தேசிய காங்கிரஸ் ஒரு நாள் துக்கம் கொண்டாடியதைத் தொடர்ந்து அரசாங்கம் எல்லா இனங்களையும், ஆஃப்ரிக்க தேசிய காங்கிரஸ், அனைத்து ஆஃப்ரிக்க காங்கிரஸ், முற்போக்கு கட்சி, காங்கிரஸ் நட்புறவு ஆகிய கட்சிகளையும் சேர்ந்த 1,900 பேரைக் கைது செய்தது. இது தவிர 20,000 ஆஃப்ரிக்கர்கள் சுற்றித் திரிந்தார்கள் குற்றஞ்சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டனர். ஆஃப்ரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் லுத்துலி சிறையிடப்பட்டார். பிறகு பொதுவுடமை தடுப்புச் சட்டத்தின் கீழ் அவருக்குத் தடை விதிக்கப்பட்டது. ஆஃப்ரிக்க தேசிய காங்கிரஸுக்கும் அனைத்து ஆஃபிரிக்க காங்கிரஸுக்கும் நாட்டினுள் தடை விதிக்கப்பட்டது. அதன் முக்கிய தலைவர்கள் சிறையிடப்பட்டனர்.

ஆகவே, 1960-க்குப் பிறகு. ஒருபுறம் பன்னாட்டுச் சமுதாயம் இன ஒதுக்கத்தைக் கண்டித்து அதைக் கைவிடுமாறு வலியுறுத்தி வந்தது. மறுபுறம் தென் ஆஃப்ரிக்கா 'அரசுத் துரோக விசாரணை'களைத் தொடங்கி ஆஃப்ரிக்கர்களைப் பெருந்திரளாகக் கைது செய்து, இரு முக்கிய ஆஃப்ரிக்க அரசியல் காட்சிகளையும் தடை செய்து அதன் முக்கிய தலைவர்களைச் சிறையிலடைத்தது. 1960இல் சிறைப்படுவதிலிருந்து தப்புவதற்காக தென் ஆஃப்ரிக்காவிலிருந்து அகதிகள் வெளியேறத் தொடங்கினர். இவர்களும், இரு முக்கிய ஆஃப்ரிக்கக் கட்சிகளும் காந்தியடிகளின் அகிம்சா கொள்கைக்கேற்ப தம் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக வெளி நாட்டார் தென் ஆஃப்ரிக்காவுக்குத் தடை விதிக்க வேண்டு மெனக் கேட்டுக் கொண்டார்.

1962இன் இறுதியில் ஐ. நா. பொதுப் பேரவை பெரும்பான்மையுடன் ஒரு தீர்மானத்தை (1761. 17) நிறைவேற்றியது. இது உறுப்பு நாடுகள் தென் ஆஃப்ரிக்காவிற்கு எதிராக எடுக்க வேண்டிய நடவடிகைகளை எடுத்துக் கூறி, தென் ஆஃப்ரிக்காவில் அமைதியான மாற்றத்தை ஏற்படுத்த விழைந்தது. இந் நடவடிக்கைகளுக்கேற்ப உறுப்பு நாடுகள் தூதாண்மைத் தொடர்புகளைத் துணிக்கலாம்; தென் ஆஃப்ரிக்க கப்பல்கள் தம் துறைமுகங்களில் தங்காமல் தடுக்கலாம்; தென் ஆஃப்ரிக்கப் பொருள்களை இறக்குமதி செய்யாமலும், படைக்கலம். உட்பட ஏற்றுமதிகளைத் தடை செய்யலாம். மேலும், ஐ. நா. தீர்மானங்கள் தென் ஆஃப்ரிக்கா ஏற்குமாறு செய்வதற்கு தடைகள் உட்பட தக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு பாதுகாப்பு அவையும் கேட்டுக் கொள்ளப்பட்டது. அதே நேரத்தில் இன ஒதுக்கக் கொள்ளைபற்றிய ஒரு தனி ஐ.நா. குழுவும் அமைக்கப்பெற்றது. இது பொதுப் பேரவையின் அமர்வுக் காலங்களுக்குகிடையில் தென் ஆஃப்ரிக்காவில் நிகழும் நிகழ்ச்சிகள்பற்றி ஆய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்.

ஆயினும், தென் ஆஃப்ரிக்காவுடன் வாணிகத் தொடர்புள்ள முக்கிய நாடுகள் பொதுப்பேரவையின் தீர்மானத்தை ஆதரிக்கவில்லை. ஆகவே அது பாதுகாப்பு அவையின் முன் வந்தது. அந்த அவைதான் சாசனத்தின் 7ஆம் இயலுக்கேற்ப



பால் ரேபரோலி (இடப்புறம்) 'எர்னெஸ்ட் பிஞ்ஞோன்-எர் (னெஸ்ட்வலப்புறம்) எனும் ஃபிரெஞ்சு ஓவியர்கள் தீட்டிய இந்த இன ஒதுக்க எதிர்ப்புச் சுவரொட்டிகள், மார்ச் 1983இல் பாரிஸில் கேவரி மேக்டில் நடை பெற்ற 'இன ஒதுக்கத்தை எதிர்க்கும்கலைஞர்'எனும் காட்சியில் இடம்பெற்றன. ஐ.நா.வும்'இனஒதுக்கத்தை எதிர்க்கும் உலக்கலைஞர் குழு'வும் இக்காட்சியை நடத்தின 1981இல் நிறுவப்பெற்ற இக்குழுவில், இன ஒதுக்கத்தை ஒழிக்க பன்னாட்டுச் சமுதாயம் எடுக்கும் முயற்சிகளை ஆதரிக்கும் பலநாட்டுக் கலைஞர்கள் உறுப்பினராக இருக்கின்றனர்.



நிழற்படங்கள் © உலக இன ஒதுக்க எதிர்ப்புக் கலைஞர்கள், பாரிஸ்

பாரிஸில் குழைமக்கலைத் தேசிய நிறுவனத்தில் 1983 நவம்பர் 22 முதல் டிசம்பர் 31வரை நடைபெற இருக்கும் இன ஒதுக்க எதிர்ப்புக் காட்சியையும் இக்குழு நடத்தும். இதில் உலகப் புகழ்பெற்ற 85 ஓவியரும் சிற்பிகளும் பங்குபெறுவர். இக்காட்சி உலக முழுவதும் சென்று, இறுதியில் இனஒதுக்கத்தை எதிர்க்கும் உலகக்கலைஞரின் அருங்காட்சியகமாக அமையும் இது தென்னாப்பிரிக்காவில் நிறுவப்படும் முதல் மக்களாட்சி அரசாங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்படும்.

கட்டாயத் தடைகளை விதிக்க முடியும்.

தென் ஆஃப்ரிக்காவிற்கு எதிராகத் தடைகள் விதிக்கும் திட்டம்பற்றி ஆய்வதற்காக 1963 ஆகஸ்டில் பாதுகாப்பு அவை கூடியது. ஆனால் இத்திட்டம் நிறைவேறவில்லை. ஏனெனில், தென் ஆஃப்ரிக்காவுடன் வாணிகத் தொடர்புள்ள முக்கிய நாடுகள் பாதுகாப்பு அவையின் உறுப்பினர்களாக இருந்தன. ஆயினும், படைக் கருவிகளைத் தென் ஆஃப்ரிக்காவிற்கு விற்கவேண்டாமென பாதுகாப்பு அவை உறுப்பு நாடுகளைக் கேட்டுக் கொண்டது. இரு மேல் நாடுகள் வாக்களிக்கவில்லையாதலால் இக்குறிப்பிட்ட தடையைக் கூட சாசனத்தின் 7ஆம் இயலுக்கேற்ப விதிக்க இயலவில்லை. ஆகவே இது ஒரு பரிந்துரையாக மட்டுமிருந்தது. ஆயினும் சில நாடுகள் இன ஒதுக்கச் சட்டத்தைச் செயல்படுத்த உதவக் கூடிய கருவிகளை விற்பதை நிறுத்தின. ஆகவே தென் ஆஃப்ரிக்காவில் படைக்கருவி உற்பத்தி அதிகரித்தது. பொது தனியார் துறைகளின் துணையுடனும், சில நாடுகளின் தொழில் நுட்ப உதவியுடனும் இது நடைபெற்றது. தான் படைக்கலங்களை ஏற்றுமதி செய்யப்போவதாக 1982இல் தென் ஆஃப்ரிக்கா அறிவித்தது. அணுக்கருவித் துறையில், பல நாடுகளில் நிகழ்ந்துள்ள ஆய்விலிருந்து தென் ஆஃப்ரிக்கா ஏற்கெனவே அணுக்கருவியுடைய நாடாக இருக்கலாம் எனத் தெரிகின்றது. அணுக்கருவி பரவுதலைத் தடுக்கும் உடன்படிக்கை ஏற்பட்டிருந்தும் இது நிகழ்ந்திருக்கிறது. தென் ஆஃப்ரிக்கா இவ்வுடன்படிக்கையில் கையொப்பமிடவில்லை. இவ்வாறாக, இன ஒதுக்க அரசு படைபலம் பெறுவதைத் தடுப்பதில் ஐ. நா. தோல்வியடைந்து விட்டது.

1960முதல் 1966வரை நமீபியாவின் மீதும் உலகின் கவனம் திரும்பியது. 1914ஆம் ஆண்டுக்குப் பிறகு ஜெர்மானியக் குடியேற்ற நாட்டுக் கொள்கையின் கொடுமைகள் தெரிந்ததும், 1919 மே 7இல் தென் ஆஃப்ரிக்காவில் ஆட்சியுரிமை அரசாக நியமிக்கப்பட்டது. இன ஒதுக்க முறையை வளர்த்த தென் ஆஃப்ரிக்கா, ஆட்சியுரிமை முறையை வகுத்த சர்வதேச சங்க ஒப்பந்த விதிகளை இன ஒதுக்கத்திற்கு ஆதரவாக விளக்கத் தொடங்கியது. மேலும், 1945இல் சான் ஃபிரான்சிஸ்கோ மாநாட்டில் ஐ. நா. சாசனம் தீட்டப்பெற்றபோது, தென்மேற்கு ஆஃப்ரிக்காவைத் தன்னோடு இணைக்க வேண்டுமெனத் தென் ஆஃப்ரிக்கா கேட்டுக்கொண்டது.

1946இல் நமீபியாவைத் தென ஆஃப்ரிக்காவுடன் இணைக்க வேண்டுமெனத் தென் ஆஃப்ரிக்க அரசாங்கம் அனுமதி கேட்டது. 1946 டிசம்பர் 16இல் ஐ. நா. பொதுப் பேரவை தனது 65 (1)ஆம் தீர்மானப்படி இதை ஏற்க மறுத்தது. ஆயினும் தென் ஆஃப்ரிக்கா இணைப்புத் திட்டத்தைத் தொடர்ந்து 1946 டிசம்பரில் ஐ. நா. பொதுப் பேரவை தனது 338 (4) ஆம் தீர்மானப்படி நமீபாவின் சட்ட முறையான நிலை பற்றி விளக்க விழைந்து, ஹேகிலிருந்த பன்னாட்டு நீதி மன்றத்தின் அறிவுரையை நாடியது. நீதி மன்றத்தின் கருத்து 1950 ஜூலை 11ஆம் நாள் அறிவிக்கப்பட்டது. அதன்படி (அ) அப்பகுதி பன்னாட்டு ஆட்சியுரிமையின் கீழுள்ள பகுதியாகும். (ஆ)சாசனத்தின் 12ஆம் இயல் ''அப்பகுதி பொறுப்பாண்மை முறையின் கீழ் கொண்டு வரப்படுவதற்கு'' வழி வகுக்கின்றது.

பல ஆண்டுகள் தென் ஆஃப்ரிக்காவை கேட்டுக் கொண்ட பின், 1961இல் பொதுப் பேரவை, ''தென்மேற்கு ஆஃப்ரிக்காவின் நிலைமை பற்றிப் பாதுகாப்பு அவையின் கவனத்தை ஈர்த்து, அந்நிலைமை தொடருமெனில் உலக அமைதியும் பாதுகாப்பும் குலையுமெனப் பொதுப் பேரவை கருதுவதாகவும் முடிவு செய்தது. மேலும் 1705 (16)ஆம் தீர்மானம் தென் மேற்கு ஆஃப்ரிக்க சுதேசிகளுக்காகத் தனிப் பயிற்சித் திட்டமும் தொடங்கியது.

1960இல் எத்தியோப்பியாவும் லைபீரியாவும் ஹேகிலுள்ள பன்னாட்டு நீதிமன்றத்தில் தென் ஆஃப்ரிக்காவுக்கு எதிராக நடவடிக்கையைத் தொடங்கின. ஆட்சியுரிமைப் பொறுப்புக்கு மாறாகத் தென் ஆஃப்ரிக்கா நமீபியாவில் இன ஒதுக்கத்தைத் திணிப்பதாக இந்நாடுகளும் வாதித்தன. 1960 முதல் 1966 வரை இவ்வாதங்கள் நீடித்தன. 1966இல் பன்னாட்டு நீதி மன்றக் வியப்புக்குரிய தீர்ப்பை வழங்கியது. வழக்கின் பொருள் பற்றித் தீர்ப்பிடவில்லையெனினும், தென் ஆஃப்ரிக்காவின் ஆட்சியுரிமை பற்றி எத்தியோப்பியாவுக்கும் லைபீரியாவுக்கும் சட்டமுறையான உரிமையோ அக்கறையோ கிடையாது என்று தீர்ப்பளித்தது.

நீதிமன்றத் தீர்ப்பினால் மூன்று விளைவுகள் விளைந்தன. முதலில் அது தென் ஆஃப்ரிக்காவின் உணர்வுக்கு ஊக்கமளித்தது. இதைவிட முக்கியமான விளைவு என்னவென்றால், தென் ஆஃப்ரிக்காவுடன் ஆயுதந்தாங்கிப் போரிடுவது தவிர்க்க முடியாது எனும் நமீபிய ஆஃப்ரிக்க விடுதலை இயக்கத்தின் கருத்தை இத்தீர்ப்பு உறுதிப்படுத்தியது. மூன்றாவது அது திரும்பவும் இப்பிரச்சினையை ஐ. நா. முன் கொண்டு வந்தது.

1966, அக்டோபர் 27இல் பொதுப்பேரவை 2145 (21) ஆம் தீர்மானத்தை நிறைவேற்றியது. இதற்கு 114 வாக்குகள் ஆதரவாகவும், 2 வாக்குகள் (போர்ச்சுகல், தென் ஆஃப்ரிக்கா) எதிராவும் கிடைத்தன. மூன்று நாடுகள் (ஃபிரான்ஸ், மாலவி, பிரிட்டன்) வாக்களிக்கவில்லை. ஆட்சியுரிமைப் பகுதியைப் பொறுத்தவரையில் ஆஃப்ரிக்கா தன் கடமையில் தவறிவிட்டது என்று தீர்மானம் அறிவித்தது.

''ஆகவே, இங்கிலாந்து அரசரின் சார்பில் தென் ஆஃப்பிரிக்கா செலுத்தி வந்த ஆட்சியுரிமை நிறுத்தப்படுகிறது; அப்பகுதியை ஆட்சி செய்ய தென் ஆஃப்ரிக்காவுக்கு உரிமையில்லை; இனிமேல் தென் மேற்கு ஆஃப்ரிக்கா ஐ. நாவின் நேர் பொறுப்பிலிருக்கும்'' என்று அத்தீர்மானம் கூறியது.

பாதுகாப்பு அவையின் 269 (1969) ஆம் தீர்மானம் பொதுப் பேரவையின் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது. இதற்கு 13 வாக்குகளின் ஆதரவு கிடைத்தது. எதிர்ப்பு எதுவும் இல்லை, இரு நாடுகள் (ஃபிரான்ஸ்ஸும் இங்கிலாந்தும்) வாக்களிக்கவில்லை. அத்தீர்மானம் ''தென் ஆஃப்ரிக்கா அப்பகுதியை ஆட்சி செய்வதை உடனே நிறுத்த வேண்டும். என்றும் எப்படியும் 1969 அக்டோபர் 4-க்குள் நிறுத்த வேண்டும். என்றும் கேட்டது.

''நமீபியாவின் சார்பில் செயல்படக் கருதும் தென் ஆஃப்ரிக்கா எவ்விதத் தொடர்பும் கொள்ள வேண்டாம் என்று எல்லா அரசுகளையும் கேட்டுக்கொண்டது.

''அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடும் நமீபிய மக்களுக்கு அறவழி ஆதரவும் பொருள் உதவியும் தருமாறு எல்லா அரசுகளையும் வேண்டிக் கொண்டது''.

ஐ. நா.வின் மேற்பார்வை சட்ட முறையானதன்று எனத் தென் ஆஃப்ரிக்கா கூறியது.

பாதுகாப்பு அவையின் தீர்மானங்கள் பெருகின. இதற்கிடையில், நமீபியாவில் தென் ஆஃப்ரிக்கா தொடர்ந்து ஆட்சி புரிவது சட்ட முரணானது என்றும், நமீபியாவில் தென் ஆஃப்ரிக்கா ஆட்சி செலுத்தக் கூடாது என்றும் 1971 ஜூன் 21இல் பன்னாட்டு நீதிமன்றம் தீர்ப்பிட்டது. ஐ. நா.வின் செயல் தொடர்ந்து நடைபெற்று வரும்போது அதன் தனிச் செயல் நிறுவனங்களையும் இன ஒதுக்கப் பிரச்சினை பாதித்தது. பன்னாட்டுத் தொழில் நிறுவனம் உலக நல்வாழ்வு நிறுவனம், உணவு, உழவு நிறுவனம் ஆசிய நிறுவனங்களில் தென் ஆஃப்ரிக்கா இருப்பதே பிரச்சினையாக இருந்தது. எடுத்துக்காட்டாக, ஆஃப்ரிக்க மண்டலக் கூட்டுறவு முற்றிலும் அம் மண்டலத்துக்குரியதாக இருக்க முடியவில்லை. ஏனெனில், தென் ஆஃப்ரிக்காவை அக்கண்டத்தின் சுதந்தர நாடுகள் வெளிப்படையாக எதிர்த்தன; அங்கோலா, கினி-பிசோ, மொசாம்பிக், வெள்ளையர் ஆதிக்கம் மிகுந்த அன்றைய ரொடீஷியா போன்றவற்றுடன் குடியேற்ற நாட்டுப் போரில் ஈடுபட்டிருந்த போர்ச்சுகலுடன் தென் ஆஃப்ரிக்கா உறவு கொண்டிருந்தது.

இது வெறும் செயலற்ற உறவன்று; படை ஆதரவும், வெள்ளையர் ஆதிக்கமுடைய தென் ஆஃப்ரிக்க "கூட்டாட்சி"யும், பொதுச் சந்தையும் அமைக்கும் உறவாக இருந்தது. மேலும், தனிச்செயல் நிறுவனங்கள் ஈடுபட்டுவந்த பெரும் பகுதிகளை இன ஒதுக்கம் நேரிடையாகச் பாதித்தது. ஆஃப்ரிக்கர்களின் தொழிற் சங்கங்களுக்கு ஒப்பந்த ஆற்றல் இல்லாதிருந்ததும், வேலை ஒதுக்கக் கொள்கையும் பன்னாட்டுத் தொழில் நிறுவனத்தைப் பாதித்தது. தனி. சமத்துவமற்ற மருத்துவப் பணியும், ஊட்டமின்மையால் ஆஃப்ரிக்கரிடையே பரவிய நோய்களும் உலக நல்வாழ்வு நிறுவனத்தைப் பாதித்தன. ஆஃப்ரிக்க வேளாண்மையை வேண்டுமென்றே அழித்தது. உலக உழவு நிறுவனத்தைப் பாதித்தது.

ஏற்கெனவே கூறியதுபோல், 1955இல் தென் ஆஃப்ரிக்கா யுனெஸ்கோவைவிட்டு விலகியது. ஆகவே, தென் ஆஃப்ரிக்கா உறுப்பு நாடாக இருப்பதால் விளையும் குழப்பத்தினின்று யுனெஸ்கோ தப்பியது. ஆயினும் இன ஒதுக்கக் கொள்கை யுனெஸ்கோவையும் பாதித்தது.

1963இல் பொதுப் பேரவை, இன ஒதுக்கம்பற்றி ஆய்வதற்காக நிறுவப்பெற்ற துணைக் குழுவுக்கு உதவுமாறு தனிச் செயல் நிறுவனங்களை அழைத்தது. அதற்கேற்ப, 1965, ஏப்ரல் 20இல் ஐ.நா. பொதுச் செயலர், "கல்வி, அறிவியல், பண்பாடு ஆகிய துறைகளில் இன ஒதுக்க விளைவுகளை ஆராயுமாறு" யுனெஸ்கோவை வேண்டினார். யுனெஸ்கோ நிருவாகக் குழு இதை ஏற்று, இது தகவல் தரும் ஆய்வாக இருக்க வேண்டுமென முடிவுசெய்தது.

1966இல் முடிக்கப் பெற்று, 1970இல் திருத்தப் பெற்று திரும்பவும் திருத்தப்படும் இவ்வறிக்கை, இன ஒதுக்கமானது கல்வி அறிவியல், பண்பாடு, செய்தித் துறைகளைப் பெரிதும் பாதித்துள்ளதெனக் காட்டியது. ஐ. நா. சாசனம், யுனெஸ்கோ விதிகள், ஐ. நா. மனித உரிமைகளின் அனைத்துலக அறிக்கை ஆகியவற்றை இன ஒதுக்கம் மீறியதுடன், அதைவிடப் பெரும் கேடுகளையும் விளைவித்துள்ளது. "அது கல்வி, முறையில் வேண்டுமென்றே ஏற்றத்தாழ்வுகளைப் புகுத்தியுள்ளது; அறிவியல், பண்பாட்டுச் செயல்களைப் பாதித்துள்ளது, செய்தித் தொடர்பு விதிகளையும் கட்டுப்படுத்துகின்றது" இன ஒதுக்கம் இனப் பிணக்குககளைத் தீர்க்கும் வழியன்று: அதுவே பிணக்குகளுக்கு முக்கிய காரணமாகும் "இது வெள்ளையருக்கும் பிறருக்குமுள்ள உறவை முறிக்கும்; இன உணர்வைத் தூண்டும்: இன ஒதுக்கத்தின் நோக்கங்களுள் ஒன்றான இவ்வுணர்வு தென்னாஃப்ரிக்க டச்சு மரபினருக்கும் ஆங்கிலம் பேசும் தென்னாஃப்ரிக்கருக்குமிடையே பூசலை வளர்க்கும்; ஆஃப்ரிக்கரைத் தனிக்குல பிரிவுகளாகப் பிரிப்பதனால், குலங்களிடையே போட்டியை வளர்க்கும் குல உணர்வைத் தூண்டும்,"

தென் ஆஃப்ரிக்க அரசாங்கம் இதற்கு விரைவில் "பதில்" ஒன்று தயாரித்து, ஓரளவு சட்டமன்ற வாதத்திற்குப் பிறகு, குறிப்பாக யுனெஸ்கோ அறிக்கைக்குத் தடைவிதித்தது.

நடவடிக்கைகள் அதிகரித்தன. இது வியப்பன்று. யுனெஸ்வின் பணிகளை எல்லாம் இன ஒதுக்கம் பாதித்தது. யுனெஸ்கோவின் எல்லா ஆய்வுகளும் இதைக் காட்டின. வரலாறு திரித்து எழுதப்பட்டது. கோர்னெவின் எழுதிய "லப்பார்த்தேட் பூவார் எ ஃபால்சிஃபிகாசியோன் ஹிஸ்தோரிக்" இதை எண்பித்தது. பாடநூல்கள் வழியாக இனவெறி தந்திரமாக ஊட்டப்பெற்றது. தென் ஆஃப்ரிக்கப் பாடநூல்களை ஆய்ந்த "ஹிஸ்டரி இன் ஃப்ளாக் அண்டு ஒயிட்" எனும் நூல் இதை நிரூபிக்கிறது. சமூகவியல் ஆய்வு திரிக்கப்பட்டது. ஆய்வு குறிப்புகள் பறிக்கப்பட்டன. சமூகவியலார்க்குத் தடை விதிக்பட்டது. "அப்பார்த்தேட் அண்டு சோஷியல் ரிசேர்ச்"இதை எடுத்துக்காட்டுகிறது. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் செய்திகள் திரிக்கப்பட்டன தென் ஆஃப்ரிக்க செய்தி நிறுவனங்கள் இதைக் காட்டுகின்றன. கல்வியாளர்கள் நாட்டிற்கு வெளியே விரட்டப்பட்டனர். புகழ்மிகு சமூகவியலார் ரூத் ஃபர்ஸ்ட் கடிதக் குண்டினால் கொல்லப்பட்ட மூன்றாம் நாள் மொசாம்பிக்கிலுள்ள மாப்புட்டோவில் கூடிய கூட்டம் இதை எண்பித்தது.

இப்போராட்டத்திலிருந்து யுனெஸ்கோ தப்ப முடியவில்லை. திரும்பத் திரும்ப தமது பேச்சுகளிலெல்லாம் பொது இயக்குநர் இப்பெரும் பிரச்சினை பற்றி எச்சரித்தார். இது வெறும் இன வேறுபாடு மட்டுமன்று; வெள்ளையரின் அரசியல் ஆதிக்கத்தைப் வலுப்படுத்தும் அடக்கு முறை; விலைகுறைந்த ஆஃப்ரிக்கத் தொழிலாளரைப் பயன்படுத்தி வெள்ளையரின் இலாபத்தைப் பெருக்கும் முறை, கல்வியை மறுக்கும் இன வெறிக் கோட்பாடு; ஆஃப்ரிக்கருக்கும் ஆசிரியருக்கும், பல நிறத்தவருக்கும் அறிவியலையும் தொழில் நுட்பத்தையும் வழங்க மறுத்து, ஆஃப்ரிக்கப் பண்பாடுகள் எனத் திரித்து மறைத்து கற்பனை செய்யும் கொள்கை.

மனித உள்ளங்களில் அமைதியை நிறுவி, எல்லா நாட்டவரும் ஒத்துழைப்பதின் மூலம் மனிதனின் சகிப்புத்தன்மையை வளர்க்கும் உலகை அமைக்க முயலும் யுனெஸ்கோ இன ஒதுக்கத்தையும் "தனி வளர்ச்சி" எனும் அதன் புதிய பெயரையும் நேரிடையாக எதிர்த்துவருகிறது.

தமிழில்: வள்ளுவன் கிளாரன்ஸ்

நமீபியா

நமீபிய மக்கள் இன ஒதுக்க ஆட்சியை எதிர்த்து நடத்தும் போராட்டம் நம் அனைவருக்கும் ஓர் ஒளிமயமான எடுத்துக்காட்டாகும். அப்போராட்டம் வலிமைபெற்று, ஆஃப்ரிக்காவிலும் உலக முழுவதும் ஒரு பெரும் ஒருமைப்பாட்டு இயக்கமாக வளர்ந்து வருகின்றது. அது தனது விழைவுகளை எதிரொளிப்பதுடன், பலவித அறவகை, பொருள்வகை ஆதரவையும் பெற்று வருகின்றது.

அது இப்போது பன்னாட்டுக் கருத்து ஒற்றுமையாக மூகிழ்த்துள்ளது; நமீபிய சுதந்திர குறிக்கோளைத் தழுவி மலர்ந்து வருகின்றது. அதை வெளிப்படுத்தும் வகையில். ஐ.நா. பொதுப் பேரவையும், பாதுகாப்பு அவையும் நமீபிய மக்களின் சுதந்தர உரிமை பற்றியும் அவர்கள் தேசிய இறைமை பெறும் முறைகள் பற்றியும், தென் மேற்கு ஆஃப்ரிக்க மக்கள் நிறுவனமே நமீபிய மக்களின் உண்மையான பிரதிநிதி என்று உலக நாடுகள் ஏற்றுக்கொள்வது பற்றியும் தீர்மானங்கள் நிறைவேறியுள்ளன.

இந்நிறுவனத்தின் தலைமையில் நமீபிய மக்கள் நடத்தி வரும் போராட்டம் தனது அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றும் வரையில் தனது முழு ஆதரவை நல்க யுனெஸ்கோ விரும்புகிறது.

இனவெறிக்கும் இன ஒதுக்கத்திற்கும் எதிரான இயக்கங்களை நடத்துவதில் யுனெஸ்கோ ஐ.நா. அமைப்பினுள் மிகுதியாக ஈடுபட்டுவரும் ஒரு நிறுவனமாகும். தெற்கு ஆஃப்ரிக்காவின் விடுதலை இயக்கங்களுக்கு முதன்முதல் நடைமுறை ஆதரவளித்த நிறுவனங்களுள் யுனெஸ்கோவும் ஒன்று. ஆகவே முதலில் அது நமீபியாவை இணை உறுப்பு நாடாக அனுமதித்தது; பிறகு 1978இல், இறைமை பெற்ற எல்லா நாடுகளும் பெறும் அதே உரிமைகளை அனுபவிக்கும் முழு உறுப்பு நாடாக அதை அனுமதித்தது. அதே நேரத்தில் தென் மேற்கு ஆஃப்ரிக்க மக்கள் நிறுவனத்துடன் தொடர்ந்து ஒத்துழைத்து, கல்வி, செய்தித்தொடர்பு, மனித உரிமை சார்ந்த பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

அமது மஹ்தார் எம்'போ
யுனெஸ்கோ பொது இயக்குநர்

நமீபிய மக்களின் போராட்டத்தை ஆதரிக்கும் பன்னாட்டு மாநாட்டின் தொடக்கத்தில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இம்மாநாடு 1980 செப்டம்பர் 11இல் பாரிஸில் நடைபெற்றது.

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆஃப்ரிக்க நாடாளுமன்றம் இந்த முறையில்தான் நாட்டை ஆண்டு வந்தது. இந்த முறையை நிலைப்படுத்தியதன் மூலம், டச்சு மரபினரை வெற்றி கொண்டதன் குறிக்கோளை ஆங்கிலேயர் ஈடேற்றிக் கொண்டனர். 1920-க்குப் பிறகு ஆங்கில மூலதனம் இந்நாட்டுக்குள் சீராக வருவதற்கு இந்த முறை வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது. இங்கு ஆங்கிலம் பேசும் சிறுபான்மையினருக்கு மிக உயர்ந்த வாழ்க்கைத் தரம் அமைவதற்கும், ஆங்கில முதலீட்டாளர்களுக்கு மிகுந்த ஆதாயம் கிடைப்பதற்கும் இது வழி வகுத்தது.

1948இல் ஆங்கிலம் பேசும்சிறுபான்மையினர் நாடாளுமன்றத்தில் தங்கள் பெரும்பான்மையை இழந்தனர். டாக்டர் டி. எஃப். மலான் தலைமையிலிருந்த டச்சு மரபினரின் தேசியக் கட்சி நாடாளுமன்றத்தின் கட்டுப்பாட்டைப் பெற்றது. ''தனி முறை வளர்ச்சி'' இனஒதுக்கத்தின் வாயிலாகக் கையாளப் பட்டது. இந்த மாறுதலுக்குப் பல முக்கிய காரணங்களைக் கூறலாம்.

டச்சு மரபினர் பெரும்பாலும் குடியானவர்களாகவே இருந்தனர். அவர்களுக்கு நகரங்கள் எட்டாக் கனியாகவே இருந்து வந்தன. டச்சு மரபினர் வாழும் பகுதிகளைச்சேர்ந்த ஏராளமான ''ஏழை வெள்ளையர்கள்'' வறுமை காரணமாக நகரங்களுக்கு வந்தனர். அங்கு இவர்களுக்குக் குறைந்த கூலியில் இழிந்த வேலைகளே கிடைத்தன. இதற்குக் காரணமான ஆங்கிலம் பேசுவோரை அவர்கள் வெறுத்தனர். நகரங்கள் செல்வச்செழிப்புடன் வளர்ந்து வருவதையும், அந்தச் செல்வம் ஆங்கிலம் பேசுவோரிடம் குவிந்திருப்பதையும் கண்டு அவர்கள் பொறாமை கொண்டனர்.

இதற்கிடையில் இரண்டாம் உலகப் போர் மூண்டது. இப்போர், ஆங்கிலேயர்—டச்சு மரபினர் பகைமையை மேலும் வளர்த்தது. தேசியக் கட்சியின் தலைவர்கள் அனைவரும் நாஜிகளின் வெற்றிக்குப் பாடுபட்டனர். 1948இல் அவர்கள் தேர்தலில் வெற்றி பெற்றதும், இட்லர் தோல்வி கண்ட இனவெறித் துறையில், தாங்கள் உறுதிபூண்டனர். ஆங்கிலம் பேசுவோரின் மேலாதிக்கத்திற்கு நிரந்தரமாக முடிவு கட்டவும் அவர்கள் தீர்மானித்தனர்.

இரண்டாம் உலகப் போரினால் மற்றொரு விளைவும் ஏற்பட்டது இந்தப் போர்; கறுப்பு மக்களிடையே விடுதலை வேட்கையைத் தூண்டி விட்டது தென் ஆஃப்ரிக்காவிலும் பெரும்பான்மைக் கறுப்பர்களிடையே தேசிய உணர்வு எழுச்சி பெறலாயிற்று. இதனை அடக்குவதற்காக, 1948-க்குப் பின்னர் கறுப்பர்களுக்கு எதிரான இனவெறிக் கொள்கையைச் முன்னைவிடக் கடுமையாகச் செயற்படுத்தும் வகையில் ''இன ஒதுக்க' முறையைத் தீவிரமாகச் செயற்படுத்தலாயினர்.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர், 1930–களில் வெள்ளையர் பொருளாதாரம் பெருமளவில் வளர்ச்சியடைந்தது. அரசு முதலாளித்துவத்தின் வாயிலாகப் பொருளாதாரத்திலும், அரசியலிலும் டச்சு மரபினரின் ஆதிக்கம் வலுவடைந்தது. வெள்ளையர்களுக்குக் கறுப்பர்களைஎப்பொழுதுமே அடிமைப்பட்டவர்களாக வைத்திருக்கும் நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டன.

1930–க்குப் பிறகு, வெள்ளையர் பொருளாதாரம் புதிய விரிவாக்கம் பெற்றபோதெல்லாம், கறுப்பருக்கு எதிரான ஓரவஞ்சனை நடவடிக்கைகள் மேலும் மூடுக்கிவிடப்பட்டன. ஊதிய விகிதங்கள், நிறவேறுபாட்டுக்கேற்ப அதிக ஏற்றத்தாழ்வுடன் ஏற்படுத்தப்பட்டன. இந்த ஏற்றத்தாழ்வு இன்றும் நடைமுறையில் இருக்கின்றன. 1970–களிலும், 1980–களிலும் இதே நிலை நீடித்தது. இப்பொழுது இங்குள்ள அரசியலமைப்பு முறை, இனவெறியில்லாமல் இயங்கவே முடியாதுபோல் தோன்றுகிறது.

ஆஃப்ரிக்கா. ஆசியாவைச் சேர்ந்த வெள்ளையர் இல்லாத சமுதாயங்கள், அமைதியான வழியில் மாறுதல் உண்டாக்க நெடுங்காலமாகப் பாடுபட்டு வருகின்றனர். காந்தியடிகளின் அமைதி வழிகள் இறுதியில் ஆட்சியாளர்களின் மனதை மாற்றும் என நம்பினர். இந்த அறப்போர் இயக்கம் 1945இல் நாஜிசத்தை பாசிசத்தையும் வெற்றி கொண்டதுபோல் இனவெறியையும் வெற்றி கொள்ளும் எனக் கருதினர்.

1948இல் டச்சு மரபுத் 'தேசிய வாதிகள்' வெற்றி பெற்ற பின்னருங்கூட இந்த நம்பிக்கை ஈடேறவில்லை. இதனால். 1950களில் அடையாளச் சீட்டு முறையை எதிர்த்து வெள்ளையரல்லாத சமுதாயத்தினர் அனைவரும் ஒன்று சேர்ந்து, ஆஃப்ரிக்க தேசியக் காங்கிரசின் தலைமையில் நாடெங்கும் ஒத்துழையாமை இயக்கத்தை தொடங்கினர். ஆனாலும், ஒரு பலனும் கிட்டவில்லை. அறப்போர் வழியில் மாறுதலை உண்டாக்க முடியும் என்ற நம்பிக்கையை இவர்கள் அடியோடு இழந்தனர்.

இத்தகைய அறப்போர் இயங்கங்களை ஒடுக்குவதற்காகத் 'தேசிய' அரசு பல சட்டங்களை இயற்றியது. கடுமையான அடக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன, கசையடிகள், சித்திரவதைகள் போன்ற கொடூரமான தண்டனைகள் வழங்கப்பட்டன. கறுப்பு அறப்போர் வீரர்களைப் பொதுவுடைமை வாதிகள் எனக்கூறி, அயல் நாட்டுத் தூண்டுதலின் பேரில் அரசைக் கவிழ்க்க முயன்றதாகத் தண்டிக்கும் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அறப் போராட்ட வீரர்களைக் கைதுசெய்யும், விசாரணையின்றிச் சிறையிலடைக்கவும். எவரையும் ஐயத்தின் பேரில் காவலில் வைக்கவும் காவலர்களுக்கு முழுச் சுதந்திரமளிக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கானவர்கள் சிறைபட்டனர். சிறைகளில் இவர்கள் மரணமடைவது அன்றாட நிகழ்ச்சியாகியது.

1923ஆம் ஆண்டுச் சட்டத்தை விரிவுபடுத்தி, கறுப்பர்களை வலுக்கட்டாயமாகத் தனித்து ஒதுக்கி வைப்பதற்கான சட்டங்கள் இயற்றப்பட்டன. 1980-க்குப் பின்னர் 30 இலட்சம் கறுப்பர்கள் — ஆண்களும், பெண்களும், குழந்தைகளும்— அவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த இடங்களிலிருந்து வல்லந்தமாக வெளியேற்றப்பட்டு, ''கறுப்பர் குடியிருப்பு என ஒதுக்கப்பட்ட பகுதிகளில் ''மறுகுடியமர்த்தல்'' செய்யப்பட்டனர். இந்தப் பகுதிகள், எவ்வித வசதிகளும் இல்லாத கட்டாந்தரைகளாக. அல்லது புதர்க்காடுகளாக இருந்தன. இங்கு வேலை வாய்ப்புகள் ஏவ்வித வசதிகளும் இல்லை. மக்கள் அடர்த்திமிகுந்து வெறும் கிராமியச் சேரிகளாக மாறிவிட்ட பழைய 'உள்நாட்டவர் ஒதுக்கப் பகுதி'கள் அனைத்தையும், 'பண்டு' தாயகம்' என்று மாற்றுவதற்கும், 'சுதந்திர மாநிலங்கள் அமைப்பதற்கும் சட்டங்கள் இயற்றப்பட்டன.

ஓரவஞ்சனைச் சட்டங்கள் அனைத்தும் தென் ஆஃப்ரிக்காவுக்கு இப்பொழுது தீர்ந்துவிட்டதுபோல் தோன்றுகிறது. தென் ஆஃப்ரிக்காவுக்குப் பாதுகாப்பு அளித்து வந்த அனைத்து வழிகளும் இப்பொழுது அடைபட்டு விட்டன. இனியும் அடக்குமுறையை முடுக்கி விட்டால், வெடித்துச் சிதறும் அபாய நிலையை தென் ஆஃப்ரிக்கா எட்டிவிட்டது.

ஆஃப்ரிக்க தேசிய காங்கிர்சின் போராட்டம் இந்த அளவுக்கு முதிர்ச்சியடைவதற்கு நீண்ட காலம் பிடித்திருக்கிறது. இக்கட்சியினர், 1960-களில் அறப்போராட்டங்களில் மட்டுமே ஈடுபட்டனர். அவர்களில் பலர் சிறையிலடைக்கப்பட்டனர்; சிலருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. நெல்சன் மாண்டலா போன்ற தலைவர்கள் நாச வேலைகளில் ஈடுபட்டனர். ஆனால், இவரது இந்த இயக்கம், அச்சுறுத்தல், துரோகம் காரணமாகத் தோல்வியடைந்தது. மாண்டலாவக்கும், அவரது தோழர்களுக்கும் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது; அயல் நாடுகளில் அடைக்கலம் புகுந்தனர்.

இதன்பின், அமைதி குடிபுகுந்த போதிலும், 1970-க்கு பிறகு மாறுதலுகான புதிய நிர்ப்பந்தங்கள் தோன்றலாயின. உற்பத்தித் தொழிற்சாலைகளைச் சேர்ந்த கறுப்புத் தொழிலாளர்கள் வலுவான அமைப்பு ஒன்றை உருவாக்கிக் கொண்டனர்; கல்லூரிகளிலேயே ஒதுக்கி வைக்கப்பட்ட கறுப்பு மாணவர்கள், இன ஒதுக்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சியை மீண்டும் தொடங்கியிருக்கிறார்கள். கறுப்பர் மனச்சாட்சியைத் தட்டி எழுப்பும் இயக்கம் தோன்றியது. இந்த இயக்கத்தின் தலைவர் ஸ்டீவ் பிக்கோ, வெள்ளையர் சிறையிலடைக்கப்பட்டு, இறுதியில் மரணத்தைத் தழுவினார். மோசாம்பிக், அங்கோலா போன்ற கறுப்பர் நாடுகளின் விடுதலைப் போராட்டங்கள் வெற்றிபெற்றதைக்கண்டு எழுச்சி கொண்ட கறுப்பர்கள் 1976இல் சோவட்டோவிலும், மற்றக் கறுப்பர் நகரங்களிலும், மாபெரும் ''பள்ளி வேலை நிறுத்தங்களை'' வெற்றிகரமாக நடத்தினர்.

இப்போராட்டங்களை ஒடுக்க முன்பைவிடக் கொடூரமான அடக்குமுறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயுதமற்ற அப்பாவி மக்களைக் காவலர்கள் கண்மூடுத்தனமாகச் சுட்டுக்கொல்வது இன்று அன்றாட வாடிக்கையாகிவிட்டது. 1976இல் பள்ளிவேலை நிறுத்தங்களின் போது சுட்டுக்கொல்லப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை முந்நூறுக்கும்குறையாது. வெளியுலகுக்கு வெளியிடப்படும் அறிக்கைகளில் சாந்தம் காணப்பட்டாலும், உள்நாட்டில் இராணுவ மயமாக்கும் நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து, எதிர்ப்பவர் எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாயினும் அவர்கள் மீது ஈவிரக்கமின்றி அடக்கு முறை ஏவிவிடப்படுகிறது.

அங்கோலவுடனும், மொசம்பிக்குடனும் 1981இல் தென் ஆஃப்ரிக்கா நடைமுறையில் போரில் இறங்கியது. அதன் குடியேற்றமாகிய நமீபியாவிலும் போர் மூண்டது. சிம்பாப்வே குடியரசு மீது படையெடுக்கப் போவதாகவும் தென் ஆஃப்ரிக்க அச்சுறுத்தியது. ஆனால், இந்த அரசு அதன் எல்லைகளுக்குள்ளேயே, அன்றாட, போர்ப் பிரகடனம் செய்யாமலே எல்லோருடனும் போரில் இறங்கியது, இந்தப்போர் இன்றும் நீடிக்கிறது.

தமிழில்: இரா. நடராசன்

4 ஏற்க இயலாத, ஒளிவு மறைவற்ற இனவெறி

முகக் கண்ணாடி வழியே பகைமை

டஹர் பென் ஜெலூன்

இயற்கை, வேறுபாடுகளைத் தோற்றுவித்திருக்கிறது. சமுதாயம், அவற்றை ஏற்றத்தாழ்வுகளாக மாற்றியிருக்கிறது. நாளடைவில் இந்த ஏற்றத்தாழ்வுகளை நியாயப் படுத்துவதற்கான ஒரு சாதனத்தை உருவாக்கி, அதனை இயற்கை உண்மைக்கும் பண்பாட்டுக்கும் எதிரான கேடயமாகப் பயன்படுத்தி வருகின்றார்கள். மற்ற மக்களைத் தோலின் நிறத்தின் அடிப்படையில் கணிப்பதுதான் இந்த முயற்சியின முக்கிய அம்சம். உடலை மூடியிருக்கின்ற தோலின் நிறத்தைக் கொண்டு, மனிதர்களைப் பாகுபடுத்தி ஏற்றத் தாழ்வுகளைக் கற்பிக்கும் முயற்சி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

அடிமைத்தனம் பெரும்பாலும் எதிர்மறையிலேயே செயற்பட்டு வந்தது. ஆனால், மனிதன் மீது மனிதன் செலுத்தும் ஆதிக்கம் சட்டப்படி ஒழிக்கப்பட்டிருந்தாலும், (சில நாடுகளில் 1960 வரையில்கூட அடிமைத்தனத்தை ஒழிக்கவில்லை), ஒரு குறிப்பிட்ட குழுமத்தையோ சமயத்தையோ சார்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக மற்றவர்களை இழிவாகக் கருதுகின்ற இனவெறியின் அடிப்படை மனப்பான்மை இன்னும் ஒரு சாராரிடம் இருந்து வருகின்றது. பொருளாதார நெருக்கடியினால் இந்த மனப்போக்கு மேன்மேலும் அதிகரித்து வருகிறது எனலாம். அடிமை வாணிகத்திற்குப் பிறகு குடியேற்ற ஆதிக்கம் தலைதூக்கியது. குடியேற்ற ஆதிக்கம் ஒழிந்து விடுதலை பெற்றபின்னருங்கூட ''சொந்த நாட்டில்'' குடியேற்ற ஆதிக்கம் நீடிக்கிறது என்று அறிஞர் சார்ட்ரே கூறுகின்றார். குடியேற்ற ஆதிக்கத்தின் துணை விளைவாகக் குடிபெயர்தல் நடைபெற்றது, பல நாடுகளில் இன்று இக் குடி பெயர்தலைக் காண்கின்றோம்.

இனவெறியானது அன்றாடம் குரோதத்தைச் சொற்களாலும் ஆயுதங்களாலும் வளர்த்து வருகிறது. தென் ஆஃப்ரிக்காவிலும், நாஜி ஜெர்மனியிலும் இருந்தது போன்று இனவெறி ஒரு கோட்பாடாக இல்லாதபோதிலும், அது ஒரு பழக்கமாக—கண் மூடித்தனமான மரபாகக் கையாளப்படுகிறது. இதன் தன்மையானது யூதர் முதல் கறுப்பர் வரை, ஆசியர் முதல் அராபியர் வரை மாறுபடுகின்றது. இந்தப் பழக்கம், இரத்தத்தில் ஊறிய ஒரு நடத்தையாக உருமாறி விட்டது, மனப்போக்குகளில் இது ஆழ வேரூன்றியிருக்கிறது. இனவெறியன், தன் இனம் சாராத மற்றவர்களைக் கண்டாலே வெறுக்கின்றான். இந்த வெறியில் தோன்றிய மனக் குழப்பத்தில், தனது இந்த மனப்போக்கினை நியாயப்படுத்த செயற்கைக் காரணங்களைக் கண்டுபிடிக்க முயல்கின்றான்.

யுனெஸ்கோவின் சார்பில் 1981, ஏப்ரலில் ஏதென்சில் உலக விஞ்ஞானிகள் மாநாடு ஒன்று நடைபெற்றது. இதில் உலகெங்குமிருந்து பல்வேறு துறைகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கலந்து கொண்டு, இனவெறியை 'விஞ்ஞான முறையில் ஒழித்துக் கட்டுவதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்ந்தார்கள். உலக மக்களுக்கு இம்மாநாடு ஒரு வேண்டுகோள் விடுத்தது: ''ஒரே இனத்தைச் சேர்ந்த இரு நபர்களின் சராசரி பிறப்பியல் பண்புகளில் காணப்படும் வேறுபாடுகள் இரு மக்கள் குழுமங்களிடையிலான பிறப்பியல் பண்புகளில் காணும் வேறுபாடுகளை விட மிக அதிகமாகவே இருக்கும். பல்வேறு இனங்களிடையில் வேறுபாடுகளைத் திட்டவட்டமாக வரையறுத்துக் கூற யாராலும் இயலாது. இன்றையச் சமுதாயத்தின் எதிர்காலச் சமூக வாழ்வில் விஞ்ஞானிகளுக்கு மிகுந்த பொறுப்பு உண்டு. இனவெறியைப் பொறுத்தவரை இந்தப் பொறுப்பானது, அரசியல் மற்றும் அறிவியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இனவெறி என்பது, ஒருவரது சொந்தக் குறைபாடுகளேயாகும். இந்தக் குறைபாடுகளை அவர் வகுப்பு இனம், நாட்டினம், வயதுப் பிரிவு, சமூக நிலை முதலிய) வேறு வகையைச்

டஹர் பென் ஜெலூன் மொராக்கோ நாட்டு எழுத்தாளர்; பத்திரிக்கையாளர்; 1971 முதல் ஃபிரான்ஸிலும் தம் நாட்டிலும் மாறி மாறி வாழ்ந்து வருகிறார். ''லா ப்ளூ ஹோ தெ சோலித்தியூத்.' (கட்டுரை) 1977, ''லே அமரிந்தியர் சோன் மோர் தெ லெர் ப்ளெஸ்யூர்'' (கவிதைகள்), ''லா ப்ரியேர் தெ ஆப்சான்'' (1981), ''லெக்ரிவேன் ப்யுப்ளிக்'', 1988 (நெடுங்கதைகள்) இவர் வெளியிட்ட நூல்களுள் சில.

வெனிஸுக்கு இடம்பெயர்ந்து செல்லும் கிரேக்க தொழிலாளர் அங்கிருந்து இருப்புப்பாதை வழியாக ஜெர்மானியக் கூட்டாட்சி குடியரசு செல்வர். பொருளாதாரக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவன அறிக்கைப் படி, நாடு பெயர்ந்து சென்றோர் ஜெர்மானியக் கூட்டாட்சி குடியரசில் 1981இல் 46, 29, 779 பேரும், சுவிட்ஸர்லாந்தில் 9,00,906 பேரும், ஃபிரான்ஸில் 42,23, 928 பேரும் இருந்னர்.

நிழற்படம்: ஐ எல் ஓ, ஜெனீவா

இடம்பெயர்ந்த தொழிலாளர் ஜெனீவாவில் கோர்னாவின் புகைவண்டி நிலையத்தில் வரவேற்பு அறையிலும் குடியிருப்பு நிலையத்திலும் வரிசையாகக் காத்திருக்கின்றனர். இடம் பெயரும் தொழிலாளருக்கு ஆதரவளித்தல் புதிதன்று. ஆனால் அதன் அளவும் அதில் ஈபெரும் நாடுகளின் பெரும் எண்ணிக்கையும் புதியன. புதிதாக வருவோர் புகலிடம் தரும் நாடுகளில் எளிதில் இணைந்துவிடக் கூடும். ஆனால் அவர்கள் குடிபுகுவதால் வெறுப்புணர்ச்சி வலிமையடைந்து, வேறுபாடு தோன்றுகிறது.

நிழற்படம்: ஐ எல் ஓ, ஜெனீவா

வாக்குரிமை உட்பட, சமமான பொருளாதார, சமூக, தொழிற் சங்க, அரசியல் உரிமைகள் வெளிநாட்டிலிருந்துவந்து குடிபுகுவோருக்கு சட்டபூர்வமாக வழங்கப்பெற்ற போதிலும் பொதுவாக அவர்களது குரலொலி கேட்பதில்லை. வீட்டு வசதியிலும் கல்வியிலிம் அவர்களுக்கு வேறுபாடு காட்டப்படுகிறது. வலப்புறம்: ஃபிரான்ஸில் மார்சேய்லிலுள்ள இடப்பெயர்ந்தோர் குடும்பம்

நிழற்படம்: ஏ. நோகஸ் © சிக்மா, பாரிஸ்



சேர்ந்தவர்கள் மீதும் கொட்டுகின்றார். அயல்நாட்டவரின் அன்றாடப் பண்பாட்டில் அவரது மொழி, தோல், சமையல் முறை, இசை, சமயம் அடங்கிய பிம்பங்களின் கூறுகள், இந்தக் கண்ணாடியில் படும்போது, பெறும் முனையிலுள்ளவர் தமது தகு நிலையையும் தற்பண்பினையும் இழந்துவிட்டதாக கருதுகிறார்; அல்லது இழந்துவிடுவோமென அஞ்சுகின்றார். மற்றவர்கள் மீதான பகையுணர்வைத் தோற்றுவிக்கிறது.

இரண்டாவதாக, சமுதாயமானது ஒதுக்கி வைக்கப்படுவதற்கு உள்ளாகிறது. இங்கு சுயமரியாதை நலிந்து கிடக்கிறது; இதுவரையும் அது ஏற்கப்படவில்லை; சிதைக்கப்பட்டும் வருகிறது. அதனால் வாழ்வதும் கடினமாக இருக்கிறது.

வாழ்வதற்குப் பொருளீட்டவும், குழந்தைகளின் எதிர்காலத்திற்கு வகை செய்யவும் சொந்த நாட்டையும் குடும்பத்தையும் விட்டுவிட்டுச் செல்லவேண்டிய நிலையிலுள்ள ஒருவர் பொதுவாகக் கையாலாகாதவராக இருக்கிறார். தம் வேறுபட்ட பண்பாடும், வாழ்க்கைமுறையும் கொண்டிருப்பதால் தாம் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை அவர் அறிந்திருப்பதால் அவர் பாதுகாப்பற்றவராக உணர்கின்றார். நிலவும் எதிர்ப்புணர்வு, அவரது நம்பிக்கையைப் போக்கி, அவருடைய சுயமரியாதையையே ஐயுறச் செய்கிறது. அவர் வெறும் தொழிலாளியாகவே கருதப்படுகிறார். அவரது பண்பாட்டுப் பரிமாணம் துண்டிக்கப்படுகிறது. அவருக்கு, அயல் நாட்டில் வாழ்வது என்பது, ஒரு முடங்கிய வாழ்க்கையேயாகும். அவர் பொருளாதார அடிப்படையிலேயே மதிப்பிடப்படுகின்றார். அவருடைய சொந்த வரலாறும் நாகரிகமும் அவருக்கு அளித்த அடிப்படை பெருமைகளை அவர் அடியோடு இழந்துவிடுகின்றார். இது அவரை உலுக்கி அலைக்கழிக்கும் அனுபவமாக அமைகின்றது.

இந்தக் கசப்பான அனுபவத்திலிருந்து அவர் மீள்வதற்குள் இனவெறி அவரை மீண்டும் இருளில் தள்ளி விடுகிறது. இந்த அவல நிலையில் சிதைந்துபோன தமது பண்பாட்டு வாழ்க்கையை அவர் எப்படி வாழ முடியும்?

நாளடைவில் இவரது பண்பாட்டு வாழ்க்கை, இதன் ஆதிவடிவத்தின் உலர்ந்துபோன போலி வடிவமாக மாறிவிடுகிறது. இதனால், இவரிடம் மற்றொரு வகையான வெறியுணர்வும், பொறுமையின்மையும் குடிகொள்கின்றது. தான் அரைகுறையாக நினைவு வைத்திருக்கும் ஆதி பண்பாட்டின் மீது இவர் அதீதமான பற்றை வளர்த்துக் கொள்கின்றார். இப்பொழுது இவருக்கு இவருடைய சொந்த நாட்டில் ஏற்படாத புதியதொரு சிக்கல் எழுகின்றது. இவருடைய பண்பாட்டுக்கு மூலம் எது என்று சொல்வது? இந்தக் கேள்வியை குடியேறிய நாட்டில் பிறந்த இவருடைய குழந்தைகள் கேட்கின்றார்கள். இதற்கு தக்க விடை கூறவில்லையெனில், இக் குழந்தைகள் தங்கள் பெற்றோர்களிடமிருந்து விலகிச்சென்று வேறெங்கேனும் இடந்தேட முனைவார்கள்.

பகையுணர்வாலும் வறுமையாலும் மதிப்புக் குறைந்து போயிருக்கும் பெற்றோரின் உருக்காட்சியைக் குழந்தைகளும் ஏற்க மறுக்கின்றார்கள். அவர்கள்

தந்தையைப்போல் இருக்க விரும்பவில்லை; அவர் வழியில் செல்லவும் விரும்பவில்லை. தங்கள் கட்டுப்பாட்டுக்குட்பட்ட தலைமுறையைச் சேர்ந்தவர்கள் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள்; தங்களுடைய எதிர்காலம் நிச்சயமற்றது என்பதையும், தங்களின் தற்பண்பு குழப்பமுடையது என்பதையும் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் இவர்கள் இருவகையான இனவெறிக்குப் பலியானவர்கள். ஒருவகை இனவெறி இவர்களுடைய சமுதாயத்தையேதாக்குகிறது. இன்னொரு இனவெறி, இவர்கள் எங்கு சென்றாலும் இவர்களுக்கு வாழ்வுக் கதவுகளை மூடிவிடுகிறது. இவர்கள் பெற்றோர் பிறந்த நாடு இவர்களை மறந்துவிடுகிறது. இவர்கள் பிறந்த நாட்டிலோ இவர்கள் வரவேற்கப்படவில்லை. இந்தக் குமரப்பருவத்தினர் செல்லும் திசை தெறியாமல் திண்டாடுகின்றார்கள்; வறுமையிலிருந்தும் புறக்கணிப்பிலிருந்தும் தப்புவதற்கு என்ன செய்வதெனத் தெரியாமல் திணறுகின்றார்கள். தமக்குத் தெரிந்த பண்பாட்டை இவர்கள் பேணுகின்றார்கள். இவர்கள் குடியேறிய நாட்டின் குடிமக்களாக இருந்தபோதிலும், அந்த நாடு இவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை இவர்களுடைய அடையாள அட்டைகள்கூட இவர்களுக்குத் தகுநிலையைத் தேடித் தருவதில்லை.

மேலை உலகில் நிகழும் வேறுநிகழ்ச்சிகளும், நிலவிவரும் மனப்பான்மைகளும், இந்தத் தற்பண்புக் குறைபாட்டிலும், சுயமரியாதையினாலும் ஏற்படும் விளைவுகளை மேலும் மோசமாக்கியிருக்கின்றன. 1980களில் அங்கு மூன்றாம் உலகமும், அதன் பண்பாடுகளும், சமயங்களும், முக்கியமாக இஸ்லாமும இழிவுபடுத்தப்பட்டன. அராபியர், முஸ்லிம்கள், ஆஃப்ரிக்கர்கள் ஆகிய அனைவரையும் ஒருங்கு சேர்த்து, அவர்கள் அனைவரையும் பற்றி தவறானஎண்ணங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். மூன்றாம் உலகம், வளர்ச்சி குன்றியது என்பது மேனாட்டவர் கருத்து. எனவே, அங்கு தோன்றியது எதுவாயினும் அதனைக் காரண காரியம் இல்லாமல் ஒதுக்கித்தள்ளிவிடவேண்டும் என்ற அளவுக்கு அவர்களிடம் இனவெறி குடிகொண்டிருக்கிறது.

ஆல்பர்ட் ஜேக்குவார்டு என்ற ஃபிரஞ்சு எழுத்தாளர், "*அறிவியலின் அபாயம்*" என்ற தமது நூலின் இறுதியில், "நமது சமுதாயம் இனவெறியை இரகசியமாக மறைத்து வைத்திருக்கிறது. இந்த இனவெறி நஞ்சு நன்மையை அழிக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ளவில்லை. நான் இனவெறியன் அல்ல என்று வாயால் சொல்கின்றோம். ஆனால்..." என்று கூறுகின்றார்.

காட்டுமிராண்டித்தனத்தின் நிலைமாற்றங்களினால் அலைக்கழிக்கப்படும் ஒரு நாகரிகம், அதற்கு இடங்கொடாதவாறு தனது அமைப்புமுறைகளை வலுப்படுத்திக் கொள்ளவேண்டும். இல்லையெனில், அந்நாகரிகம் நாளடைவில் மங்கி மறைந்துவிடநேரிடும். இனவெறி நஞ்சு தன்னிடம் பரவ அது இடமளிக்கலாகாது. இனவெறியாளர்களை உயர்ந்தவர்கள் என எண்ணிவிடவும் கூடாது. இனவெறியர்களின் முயற்சிகளை மிகவும் கவனமாக இருந்து முறியடிக்க வேண்டும்.

தமிழில்: இரா. நடராசன்



"அயல்நாட்டவரான அடுத்தவரை ஏற்றுக்கொண்ட சமுதாயம் அவரிடம் காணும் உருவத்தில் தன்னையே காண்கிறது; ஆனாலும் அதை ஏற்க மறுக்கிறது. ஏனெனில் அது தனது முரண்பாடுகளையும், குறைபாடுகளையும், பற்றாக் குறையையும் வலியுறுத்திக் காட்டுகிறது", என்று டஹர் பென்-ஜெலூன் எழுதுகிறார். பாரிஸ் சிறுவர் விளையாட்டரங்கிலுள்ள இந்த உருச்சிதைவுக் கண்ணாடி போன்று இனவெறியும் திரித்துக் காட்டுவதுடன் அயல் அல்லது வேறு இயல்புகளை நகைப்புக்குரியதாக்குகின்றது.

நிழற்படம் கேலாசன் ரோஃபோ, பாரிஸ்

5 இனவெறியும் அறிவியலும்

நுண்ணோக்கி வழியாக கற்பனைகள்

ஆல்பெர் ஷாக்கார்டு

மனிதன் தன்னையே உருவாக்கிக் கொள்ளவும், தனது படைப்பில் தானே பங்குகொள்ளவும் அற்புத ஆற்றல் பெற்றிருக்கின்றான். ஆனால், இந்த ஆற்றலுக்கு, தன்னையே அழித்துக்கொள்ளும் எதிர்மறையான விலையை அவன் கொடுக்கின்றான். தன்னை அழித்துக் கொள்ள இன்று அவனுக்கு எத்தனையோ வழிகள் உள்ளன. அணுஆயுதங்களால் மனித குலமே ஒட்டு மொத்தமாகத் தற்கொலை செய்துகொள்ளவும் முடிகின்றது. இழிவான, தந்திரமான, வஞ்சகமான வழிகளும் உண்டு. இதில் மிகப் பரவலாகக் காணப்படுவது இனவெறி.

வேறொரு குழுமத்தைச் சேர்ந்தவர்களை வெறுக்கின்ற மனப்பான்மை அண்மையில் தோன்றியதில்லை, எனினும், மனிதகுலத்தை ஏற்றத்தாழ்வாக வகைப்படுத்துவதை நியாயப்படுத்துவதற்கு நவீன அறிவியலையும், உயிரியல் மாதிரிகளையும் பயன்படுத்தும் புதிய போக்கு இந்த நூற்றாண்டில்தான் வளர்ந்திருக்கிறது.

நமது அறிவியல், தத்துவ, சமயக் கருத்துகள் எவ்வாறிருப்பினும், அறிவியல் முன்னேற்றமானது இந்த முடிவுகளுக்கு வழி வகுக்குமானால் அவற்றை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால், அறிவியல் உண்மைகள் குறிப்பாக பிறப்பியல் உண்மைகள் அனைத்தும் நேர்மாறான முடிவுகளுக்கு வழிகாட்டுகின்றன. மக்களில் ஒரு குழுமத்தினர் இயற்கையில் உயர்ந்தவர்கள் என்பது முற்றிலும் தவறானது என்பதை உயிரியல் ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன.

யுனெஸ்கோ சார்பில் 1981இல் ஏதென்சில் விஞ்ஞானிகளின் கருத்தரங்கு ஒன்று நடந்தது. இதில் பல்வேறு அறிவியல் துறைகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் பங்கு கொண்டனர். ஒரு வாரம் நடந்த இந்தக் கருத்தரங்கில் லெபனான், துனிசியா, மொராக்கோ, இஸ்ரவேல், மெக்சிக்கோ, ஃபிரான்ஸ், ஐவரி கோஸ்டு, நார்வே, அமெரிக்கா, ரஷ்ய உட்பட பல நாடுகளைச் சேர்ந்த 22 விஞ்ஞானிகள் கலந்து கொண்டார்கள். இவர்கள் மானிடவியல், மனித இனவியல், உளவியல், பிறப்பியல், சமூகவியல், வரலாறு, கணிதம், சட்டம், தத்துவம் ஆகிய துறைகளைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பல்வேறு பண்பாடுகளைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மனந்திறந்து தங்கள் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டார்கள்.

பிறப்பியல், உளவியல், நரம்பு உயிரியல், சமூகவியல், மானிடவியல், மனிதஇனவியல், வரலாறு, தொல்வரலாறு ஆகிய துறைகளின் கண்ணோட்டத்தில் இனவெறிக் கொள்கை இக்கருத்தரங்கில் ஆராயப்பட்டது. இக்கருத்தரங்கின் முடிவில், இதில் கலந்து கொண்ட அறிஞர்களும், யுனெஸ்கோவின் பிரதிநிதிகளும் இணைந்து, கூட்டு வேணடுக்கோள் ஒன்றைத் தயாரித்தார்கள். இந்த வேண்டுகோளை இக்கருத்தரங்கு விரிவாக விவாதித்து ஒரு மனதாக ஏற்றுக்கொண்டது. (யுனெஸ்கோ கூரியரின் 1981 ஜூலை இதழ் பார்க்க).

பிறப்பியலும் இனவெறியும் பிறப்பியலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தினால், மக்கள் குழுமங்களின் உயிரியல் பாரம்பரியங்கள் குறித்துத் துல்லியமாக அறுதியிட இயலுகின்றது. கடந்த நூற்றாண்டுகளில், தோல் நிறம், முடி அமைப்பு, மண்டையோட்டின் அமைப்பு போன்ற புறக்கூறுகளின் அடிப்படையில்தான் இனங்களைப் பாகுபடுத்திக் காட்டமுயன்றனர். ஆனால் இன்று பிறப்பியல் பண்புகள் அடிப்படையில் இதனைச் செய்ய முயல்கின்றார்கள்.

ஒரு குறிப்பிட்ட குழுமத்தின் உறுப்பினர்களிடம் பல்வேறு குடிவழி மூலக் கூறுகள் மொத்தத்தில் எத்துணை அளவு காணப்படுகின்றனவோ அதனைப் பொறுத்து அக்குழுவின்

ஆல்பெர் ஷாக்கார்டு: ஃபிரெஞ்சு இனவியலார்; பாரிஸ், ஜெனீவா பல்கலைக்கழகங்களின் ஆசிரியர். பாரிஸிலுள்ள ஃபிரெஞ்சு தேசிய மக்கள் இயல் ஆய்வு நிலையத்தின் இனவியல் துறைத் தலைவர்; "ஜெனட்டிக்ஸ் ஆஃப் ஹ்யூமன் பாப்புலேஷன்ஸ்" (1978) உட்பட பல நூல்கள் எழுதியுள்ளார்.

இனவெறி வரலாற்றில் வேரூன்றியுள்ளது. அது எங்கும் நிலவியதன்று. இன்றைய சமுதாயங்கள், பண்பாடுகள் பலவற்றில் அதன் அடையாளமே இல்லை. உலக வரலாற்றில் அது நீண்ட காலம் நிலைத்ததில்லை. அயல் ஆட்சி. கறுப்பர் அடிமைத்தனத்திற்கு ஆதரவு. அதன் பயனாக மேல் நாடுகளில் தோன்றிய இன ஏற்றத்தாழ்வு, குடியேற்ற நாட்டு உறவு ஆகியவற்றின் விளைவாகப் பலவகையாக இனவெறி தோன்றியது. யூதருக்கெதிரான பகைமை மற்றோர் எடுத்துக்காட்டாகும். இது வரலர்றில் தனிப் பங்கு பெற்றுள்ளது. பல சமுதாயங்களில் ஏற்பட்ட சிக்கல்களுக்கும் நெருக்கடிகளுக்கும் பொறுப்பேற்கும் பலிகடாவாக யூதர் கருதப்பட்டனர்.

"இனம், இன வெறுப்புணர்ச்சி பற்றிய அறிக்கை,
யுனெஸ்கோ, பாரிஸ், செப்டம்பர் 1967

மரபுவழிப் பண்புகள் அமைகின்றன. குடி வழி மூலக்கூறுகளின் எண்ணிக்கையில் காணப்படும் ஏற்றத்தாழ்வினைப் பொறுத்து, இரு மக்கள் குழுமங்களிடையிலான வேறுபாடு சுட்டிக் காட்டப்படுகின்றன. இந்த ஏற்றத்தாழ்வு குறைவாகக் காணப்படும் மக்கள் குழுமங்களை ஒருங்கிணைத்தும், ஏற்றத்தாழ்வு அதிகமுள்ள குழுமங்களை வேறுபடுத்தியும் இனங்கள் பாகுபடுத்தப்படுகின்றன.

மனித இனத்தைப் பொறுத்த வரையில் இந்த நடைமுறை பயனற்றதாகி விட்டது. குடிபெயர்தல் மிகப் பெருமளவில் நடைபெறுவதால், தனிப்பட்ட குழுமங்களை ஒதுக்கிவைப்பது இயலாததாகிவிட்டது. ஒரே மாதிரியான மக்கள் குழுமங்களிடையே எல்லைகளை வகுத்து, அவர்களை மற்றக் குழுமங்களிடமிருந்து பிரித்துக் காட்டுவது எளிதாக இல்லை. மனித இனங்களிடையே வேறுபாடுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவ் வேறுபாடுகளை குடி வழி மூலக்கூறுகளின் ஏற்றத்தாழ்வு அடிப்படையில் வகுத்துக் கூற இயலவில்லை. ஒரே குழுமத்தின் உறுப்பினர்களிடையிலும் கூட வேறுபாடுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

மனித குலத்தைப் பொறுத்தவரையில், இனம் பற்றிய கோட்பாடானது நிலையான அல்லது புறப்பொருள் மெய்ம்மையை அடிப்படையாகக் கொண்டதல்ல என்று மரபுவழிப் பண்பியலறிஞர்கள் கருதுகிறார்கள். இனங்களை வரையறுப்பதுடன், அவற்றை ஏற்றத்தாழ்வுடன் வரிசைப்படுத்திக் கூறவும் முடியும் என்பது இனவெறிக் கோட்பாடுகளுள் ஒன்று. இந்தக் கோட்பாட்டினைப் பிறப்பியல் மறுக்கிறது.

இயற்கையின் இயல் தேர்வு முறையில், "சிறந்தவை" மட்டும் வைத்துக் கொள்ளப்பட்டு, குறைபாடுடையவை ஒழிக்கப்பட்டு விடுவதில் மாறாக பல்வேறு பண்புகளையும் பாதுகாத்து வருவதே இயற்கையின் இயல்பாக இருந்து வருகிறது. உயிரியிலைப் பொறுத்த வரையில், செல்வம் என்பது 'சிறந்த' குடிவழிக் கூறுகளைக் குறிக்கவில்லை; குடிவழிக் கூறுகளிடையிலான வேறுபாடுகளையே அது குறிக்கிறது. வேறுபட்ட குடிவழிக் கூறுகளைப் பெருமளவில் பாதுகாத்துவரும் குழுமம் தான் "சிறந்த" குழுமமாகும். இந்தக் கண்ணோட்டத்தில் நோக்குங்கால், ஒரு சில குழுமங்கள் இயற்கையாகவே உயர்ந்தவர்கள் என்ற வாதத்திற்கு உயிரியலில் ஆதாரங்கள் இல்லை.

உளவியல், நரம்பியல், மற்றும் இனவெறி: சென்ற நூற்றாண்டின் மத்தியில் உளவியல் ஓர் அறிவியலாகியபோது, தனிநபர்கள் மற்றும் குழுமங்களின் அறிவுத்திறன்களை ஒப்பிட்டுப் பார்ப்பதில் அது ஈடுபட்டுள்ளது. இந்த முயற்சி விரைவிலேயே உயர்வு தாழ்வுகளை ஏற்படுத்தும் முயற்சியாக மாறியது. நவீன மேனாட்டுச் சமுதாயத்தின் நடத்தையே சராசரி மனிதனின் நடத்தை முறையாகக் கருதப்படலாயிற்று. அந்த அடிப்படையில் மனிதர்களைப் பாகுபடுத்திக் காட்டும் சோதனை முறைகள் வகுக்கப்பெற்றன. பொதுவாக, இந்தச் சோதனைகளின் முடிவுகள் இலக்க வடிவில் அறிவுக்குறி எண்ணாகக் குறிக்கப்பட்டன. இந்த அளவீடு ஒரு குறிப்பிட்ட அளவுக்குத் தான் பொருந்தும். எனினும், இதனையே இன்று பரவலாகப் பயன்படுத்துகின்றார்கள்.

அறிவுத் திறனை இலக்க வடிவில் குறிப்பதன் காரணமாக, இது தற்சார்பான ஒரு அளவீடு என்ற தவறான எண்ணம் உருவாகியிருக்கிறது. ஆனால், உண்மையில் வெவ்வேறு பண்பாடுகளை அல்லது குழுமங்களைச் சேர்ந்த தனிநபர்களை அறிவுக் குறி எண்ணைப் பயன்படுத்தி ஒப்பிடுவதானது, அறிவுக் குறி எண்ணின் பொருள் வரையறையின்படி பார்த்தாலும் பொருளற்ற செயல் என்பது புலனாகும்.

"உள்ளார்ந்த மற்றும் ஈட்டிய' பண்புகள்' பற்றிய சிக்கலை பொறுத்து அறிவுக்குறி எண்ணைத் தவறாகப் புரிந்து கொள்வது மிகவும் ஆபத்தானதாகும்.

சமுகவியலும் இனவெறியும்: இனவெறியை தீவிரமாக எதிர்ப்பதற்கு, அதன் காரணங்களை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். ஆனால், இந்த அணுகுமுறையிலும் ஓர் ஆபத்து உண்டு. இனவெறிக்கான காரணத்தையும் அதன் விளைவையும் ஆராயும்போது, இனவெறியை நாம் முதலில் ஏற்றுக் கொண்டு விட்டதாகக் கருதப்பட்டு விடும். ஆதிக்க வாதிகள் தங்கள் தோல்விகளினால் ஏற்பட்ட விரக்தியை சிறுபான்மையினர்மீது இனப்பகையுணர்வாகக் கொட்டுகின்றார்கள். அவர்களுடைய தோல்விகளுள் பொருளாதாரத் தோல்வியும் ஒன்று. எனவே, பொருளாதாரக் காரணத்தினால் மட்டும் தான் இனவெறி உண்டாகிறது என்பது தவறு.

புறப்பொருளாதாரச் சூழல்கள் இனவெறியைத் தூண்டவில்லை. மாறாக, அந்தச் சூழல்களுக்கான விளக்கங்கள் தான் இனவெறியை ஊக்குவிக்கின்றன. ஒரு சூழலைவிட, அந்தச் சூழலை நோக்கும் விதம்தான் அதிக விளைவை ஏற்படுத்துகிறது. இதில், அரசியல் நடவடிக்கைகள் முக்கியப் பங்கு பெறுகின்றன. செய்தித் தொடர்புச் சாதனங்கள், தவறான கொள்கைகளைப் பரப்பியும், உண்மைகளைத் திரித்துக் கூறியும் தங்கள் பங்குக்குத் தீங்கு விளைவிக்கின்றன.

"இனம்" காரணமாக ஒடுக்கப்பட்டிருப்பவர்களின் அவல நிலைமை, கட்டாயமான பழிப்புரையின் விளைவாக உண்டானதல்ல; மாறாக எந்த வழியிலும் நியாயப்படுத்த முடியாத, கண்டறியத் தக்கதொரு நிலைமையாகும்.

சமூக உயிரியலறிஞர்களின் சில வாதங்களை அடிக்கடித் திரித்துக் கூறுவது மிகவும் ஆபத்தாக முடியும். கறையான் முதல் மனிதக் குரங்குகள் வரையிலான விலங்குச் சமுதாயங்களின் அமைப்பாண்மையைத் தீர்மானிக்கின்ற காரணங்களையும் சூழ்நிலைகளையும் ஆராய்வது சமூக உயிரியலாகும். இத்துறையின் ஆய்வு முடிவுகளை மனித குலத்துக்கு இணைத்துக் காட்டும்போது மிகுந்த கவனம் தேவை. எடுத்துக்காட்டாக, பெரும்பாலான மனித நடத்தையானது, மரபுவழிப் பண்பினால் அமைகிறது என்பதற்குச் சான்றுகளில்லை. இன்னும் வாதிக்கப்பட்டுவரும் சில கோட்பாடுகளைக் கூட அறிவியல்



நிழற்படம் © ரோஜர் வயோலட், பாரிஸ்

மனுக்குலத்தை ஒரு சில பெரிய "இனங்க'ளாகப் பகுத்துள்ளதைக் கடந்த 30 ஆண்டுகளாக அறிவியலார் நுட்பமற்றது என்றும், விதிகளுக்குட்படாதது என்றும், உயிரியல் முக்கியத்துவம் பெறாதது என்றும் எதிர்த்து வருகின்றனர். இரத்த வகை, மனித உடல் அளவு போன்ற வெவ்வேறு முறைகளைப் பயன்படுத்துவதால் எழும் முரண்பாடுகள் இத்தகைய பாகுபாடு சரியானதெனத் காட்டத் தடையாக இருக்கின்றன. வட ஜப்பானிலுள்ள அய்னுக்கள் (வலப்புறம் உச்சி) வெள்ளைத் தோலுள்ளவர்கள் மரபான இனப்பாகுபாட்டின்படி இவர்கள் வெள்ளைஇனத்தவர்கள். ஆயினும் இரத்த

முறையில் மெய்ப்பிக்கப்பட்டு விட்டதாகப் பத்திரிக்கையாளர்கள் கூறிவிடுகின்றார்கள். வேறு சில எழுத்தாளர்கள் அறிவியல் சான்று என்ற பேரவையில், தங்களுடைய பிடிவாதக் கொள்கைகளையே நிலைநாட்ட முயல்கின்றார்கள்.

மானிடவியல், மனித இன ஆய்வியல் மற்றும் இனவெறி: பிறப்பியல் பண்பாடு, வரலாறு ஆகியவை சார்ந்த அம்சங்களை ஒருங்கிணைத்து, உலகளாவிய முறையில் மனிதனைப் பற்றி ஆராய மானிடவியல் முனைகிறது. இந்தத் துறைகள் அனைத்திலுமே ஆளுக்கு ஆள் வேறுபாடு நிலவுகிறது. வகுப்பு முறைகளைத் தயாரிப்பதில் நெடுங்காலமாக இந்த வேறுபாடுகளைக் கவனத்தில் கொள்ள மானிடவியல் முயன்று வந்துள்ளது; ஏறத்தாழ ஒரே மாதிரியான குழுமங்களை அல்லது 'இனங்களைக்' கண்டறியவும் முயன்றிருக்கிறது. மரபு வழியாக வருகின்ற உடலமைப்புக் கூறுகளின் அடிப்படையில் மனித குலத்தைப் பாகுபடுத்திக்காட்டுவதுதான் 'குழுமங்கள்' ஆகும். ஆனால்; இந்த வகையான பகுப்பாய்வு ஐயத்திற்குரியதாகும். ஏனெனில், குழுமங்களிடையிலான மரபு வழிக் கூறுகளின் பரிமாற்றங்களின் தீவிரம். காலந்தோறும், இடந்தோறும் வெகுவாக மாறி வந்துள்ளது. கடந்த சில நூற்றாண்டுகளில் இந்த பரிமாற்றங்கள் அதிகரித்துள்ளன. இதனால், கடந்த காலத்தில் 'இனங்கள்' என அழைக்கப்பட்ட குழுமங்கள் இன்று மறைந்துவிட்டன. இவற்றுக்குப் பதிலாக இன்று மண்டலக் குழுமங்கள் தோன்றியுள்ளன.

இந்த வகையில் மானிடவியல் ஆற்றியுள்ள தலையாய தொண்டு ஒன்று உண்டு. ''பெரும்பாலான மனித குழுமங்களிடம் காணப்படும் உயர்வு மனப்பான்மையானது அவர்களுடைய பண்பாட்டைப் பொறுத்ததேயன்றி, உயிரியில் பாரம்பரியத்தினால் தோன்றியதல்ல. அவர்களுடைய உணர்ச்சிகள் யாவும் இனச் சார்புடையனவேயன்றி, இனவெறி சார்ந்தவை அல்ல' என்று மானிடவியல் மெய்ப்பித்துள்ளது. ஒரு குறிப்பிட்ட இனம் இயற்கையிலேயே உயர்ந்தது என நம்புகின்ற இனவெறியானது, அண்மையில் தோன்றியதாகும். ஐரோப்பிய வல்லரசுகள் குடியேற்ற ஆதிக்கத்தை விரிவுபடுத்த முயன்றபோது இனவெறி வளர்ந்தது. இனப் பாகுபாட்டை நியாயப்படுத்துவதற்கு, டார்வின் கோட்பாடுகளைக்குடியேற்ற ஆதிக்க வாதிகள் கையாளலானார்கள். நாசிசக் காலத்தில் இந்த இனவெறி உச்ச நிலையை எட்டியது. அதன் பின்பு, இனவெறி படிப்படியாக வீழ்ச்சியடைந்து வந்த போதிலும், ஆர்தர் ஜென்சன் போன்ற உளவியலறிஞர்களும், சில குழுமங்களும் இனவெறிக்கு முட்டுக் கொடுத்துத் தூக்கி நிறுத்த முயன்று வருகின்றார்கள்.

இனவெறியர்களுக்கு மானிடவியலறிஞர்கள் கடுமையாகப் பதிலடி கொடுத்துவருகின்றார்கள். எடுத்துக்காட்டாக இந்திய அறிஞர் ஆர். சின்கா, ''பல்வேறு இனக் குழுமங்களிடையே அறிவாற்றல்களில் உள்ளார்ந்த வேறுபாடுகள் இல்லை' என்பதைத் திட்டவட்டமாக மெய்ப்பித்திருக்கிறார்.

இனப்பாகுபாட்டுக்குச் சிறிதும் ஆதாரம் இல்லாதபோதிலும் இனவெறி மனப்போக்கு இன்னும் நிலவுவதற்கான காரணத்தை நாம் இறுதியாக ஆராய வேண்டியிருக்கிறது.

வரலாறு, தொல்வரலாறு மற்றும் இனவெறி: ஆதிக்கக் குழுமங்களுக்குச் சாதகமாக இருக்கும் வகையில் கடந்த பல நூற்றாண்டுகளாக இனவெறிக் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தக் கோட்பாடுகள் முரண்பட்டனவாக இருப்பதையும் காண்கின்றோம். 18ஆம் நூற்றாண்டில் 'தீய நாகரிகர் என்பதற்கு எதிரான ''உன்னதக் காட்டுமிராண்டி' என்ற கற்பனைக் கோட்பாடும், தங்கு தடையற்ற அடிமை முறையும் கையாளப்பட்டன. இனவெறியின் ஒவ்வொரு அடித்தளத்தையும் அறிவியல் தகர்த்துவரும் இந்நாளில் கூட, இனவெறிக்குப் புத்துயிரூட்ட அறிவியலைப் பயன்படுத்தச் சிலர் முயன்று வருகின்றார்கள்.

இனவெறி இவ்வாறு புத்துயிர் பெறுவது நமக்கெல்லாம் பெரும் அறை கூவலாகும். இந்த அறைகூவலை எதிர்த்துச் சமாளிக்க வேண்டியது நம் கடமையாகும். அதற்கு அறிவியல், தொழில்நுட்பம், பண்பாடு, உரிமைகள் ஆகியவற்றின் மூலம் சமூகத்தைப் பல்வகைப் படுத்தவேண்டும். அதனைச் செய்ய நம்மால் இயலும்.

தமிழில்; இரா. நடராசன்

நிழற்படம் சிமோனட் © அட்லாஸ் நிழற்படம், பாரிஸ்

நிழற்படம் © தியரி சிகரட்டன்/காஸ்மாஸ், பாரிஸ்

வகையில் கீழ்நாட்டு 'மஞ்சள்' இனத்தை நெருங்கியுள்ளனர். பல 'அறிவியல்' இனப் பாகுபாடுகள் 'உடலமைப்பு வகைகள்' எனும் தவறான கருத்தை எழுப்பியுள்ளன. ஆஸ்திரேலியர் பழங்குடி மக்களிடையே காணப்படும் பொன்னிற மயிருடைய 'கறுப்பர்கள்' (மேலே வலப்புறம்) இத்தகைய பெரும் இனப் பாகுபாடுகள் பயனற்றவை என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு. சைபீரியாவிலுள்ள வோகல் மக்கள் (மேலே இடப்புறம்) பலவகைகளில் 'மஞ்சள்' அல்லது மங்கோலாய்டு இனங்களினின்று வேறுபட்டுள்ளனர். ஆனால் தொன்மை மனிதவியல் அவர்கள் 'மஞ்சள்' இனத்தவர் என்றது.

பண்பாட்டு எதிர்த்தாக்குதல்

மரியா தோ சே கார்மோ ரேய்ஸ்

வேற்றுமையில் ஒற்றுமை ...நுண் உருவில் உலகம்

அல்ஜீரியா: எலும்புச் சட்டத்தில் துணி போர்த்திய 'இளம் மணப்பெண்', கரங்கள் பஞ்சு அடைத்த மரத்தாலானவை. உயரம் 23 செ.மீ.

நிழற்படம் ஜே. ஆஸ்டர் © மியூசீ தெ ஹொம்மே, பாரிஸ்

வியட்நாம்: குடைந்த குடுக்கை மனித உருவிலுள்ளது. கழுவாய்ச்சடங்குகளில் பயன்படுத்தப் பெற்றது. உயரம் 24 செ.மீ.

நிழற்படம் லெம்சவுடா © மியூசீ தெ ஹொம்மே, பாரிஸ்

செனகால்: சிப்பி, கண்ணாடி மணி, உலோகத் துண்டுகளால் அலங்கரித்த தானியக் கதிர்ப்பொம்மை. அறுவடை விழாவில் இளநங்கையர் எடுத்துச்செல்வர். உயரம் 21.5 செ.மீ.

நிழற்படம் லெம்சவுடா © மியூசீ தெ ஹொம்மே, பாரிஸ்

சமுதாயங்களிடையிலான உறவு நிலைகள், அந்தந்தச் சமுதாயங்களின் சொந்த நலன்களைப் பொறுத்து முரண்பட்டனவாகவோ இணக்கமானவையாகவோ அமைகின்றன. இந்தச் சமுதாய உறவுகள், ஆதிக்க உணர்வின் தேவைகளினால் நிருணயிக்கப்படும்போது, சமூக ஏற்றத் தாழ்வுகளும், சுரண்டலும், போரும் விளைகின்றன; ஆதிக்கத்திலுள்ளவர்கள் கையாளும் சமூகப் பழக்கங்களும், கோட்பாடுகளும் இனவெறியின் தன்மையைப் பெறுகின்றன. இனவெறியின் அளாவுகைக்கு வரலாற்றுச் சூழல்கள் காரணமாக இருந்திருக்கின்றன. இக்காலத்தில், குடியேற்ற ஆதிக்கப் போர்களும், ஆக்கிரமிப்பும் மிகப் பரவலாக நடைபெற்று, இனவெறிக்கு மீதூர்ந்த சட்டசீலத்தைக் கொடுத்திருக்கின்றன. அதே சமயத்தில் இனவெறிக்கு எதிரான சூழல்களும் உருவாகியிருக்கின்றன.

தொடக்கத்தில் மற்ற மக்கள் குழுமங்களை, 'அயலவர்' என்ற கண்ணோட்டத்தில்தான் நோக்கினர். அப்போது, இன வேறுபாட்டு எண்ணங்கள் தலைதூக்கவில்லை. எனவே, இனவெறிக்கு எதிரான குரல்கள் வலுவாக எழவில்லை. 18ஆம் நூற்றாண்டில் மாண்டெஸ்கியூ, டீடராட் போன்றவர்களின் அரசில் தத்துவங்கள் இனவெறிக்கு எதிரான மனப்போக்குகளை வளர்த்தன. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்நூற்றாண்டின் தொடக்கத்திலும் கறுப்பு மக்களிடையே தேசிய இயக்கங்கள் தோன்றின; நீக்ரோப் பண்பாட்டுப் பாதுகாப்பு இயக்கங்களும் தீவிரமாயின. ஆனால், இரண்டாம் உலக போருக்குப் பின்னர்தான், உலகளாவிய முறையில், கோட்பாட்டளவிலும் நடைமுறையிலும் இனவெறிக்கு எதிராகப் பெரும் போராட்டம் தொடங்கியது. இதற்குப் பல காரணங்கள் தூண்டுதலாக இருந்தன.

தாங்கள்தான் "நாகரிகமடைந்தவர்கள்' எனக் கூறி வந்த மேனாட்டவர், மற்ற மக்கள் குழுமங்களை விடத் தங்களிடம்தான் "காட்டுமிராண்டித்தனம்" மிகுதியாகக் குடிகொண்டிருப்பதை உணர்ந்து அதிர்ச்சியடைந்தனர். நாசிசமும், யூதர் இனப் படுகொலையும் இனவெறியின் கொடூரத்தை உலகுக்குக் காட்டின. குடியேற்ற ஆதிக்கத்திற்கு உள்ளான மக்கள் குழுமங்கள், தாங்கள் சுதந்திரம் பெறுவது வரலாற்றின் கட்டாயம் என்பதை உணர்ந்தனர். கறுப்பு அமெரிக்கர்கள் விரைவிலேயே தங்களுடைய இன—வரலாற்று வேறுபாடுகளின் அடிப்படையில் தங்களுடைய தேசியத் தற்பண்பினை நிலை நாட்ட முனைந்தனர். இதன் காரணமாக, இனவெறிக்கு எதிரான போராட்டம் ஒருமுகப்படலாயிற்று.

பேரழிவு விளைவித்த போரிலிருந்து அப்பொழுதுதான் விடுபட்டிருந்த மேனாடுகள், சமூகப் பொருளாதாரத்

மரியா தோ சே கார்மோ ரேய்ஸ், அங்கோலா நாட்டுச் சமூகவியலார். இவ்வம்மையார் அல்ஜீரியாவிலுள்ள அங்கோலா ஆய்வு நிலையத்தில் பணிபுரிந்தார்; போர்ச்சுகலிலுள்ள சமூக சேவை உயர்நிலையத்தில் கற்றுக் கொடுத்தார். பாரிஸிலுள்ள சமூக சேவை உயர் ஆய்வுப் பள்ளிப் பேராசிரியர் ஜார்ஜ் பலான்டியரின் துணையுடன் டாக்டர் பட்டத்திற்குத் தயார் செய்துவருகிறார்.

துருக்கி; மரச்சட்டத்தில் துணி போர்த்திச் செய்த பொம்மை உயரம் 33 செ.மீ.

நிழற்படம் லெம்சவுடா © மியூசீ தெ ஹோம்மே, பாரிஸ்

ஜப்பான்: "அனசாவனங்கியே (அக்காள்); வண்ணக் களிமண் முகமுடைய தாள் பொம்மை. மரபான முடியலங்காரம் உயரம் 17செ.மீ.

நிழற்படம் லெம்சவுடா © மியூசீ தெ ஹொம்மே, பாரிஸ்



சிரியா: கருவண்ணம் பூசிய, புடைத்த முகமுள்ள ஆட்டுக்கால் எலும்பு. ரோமானிய ஊழி.

நிழற்படம் ஜே. ஆஸ்டர் © மியூசீ தெ ஹொம்மே, பாரிஸ்

மாலி: மெழுகுப்பொம்மை வெண்மணிக் கண்கள், தலை அணிகலன்கள், பருத்தித்துணிப் பாவாடை உயரம் 13.5செ.மீ.

நிழற்படம் லெம்சவுடா © மியூசீ தெ ஹொம்மே பாரிஸ்



பிரேசில்: வண்ண உடலிலுள்ள மண் பொம்மை முன் ஆடை மரப்பட்டையாலானது. உயரம் 17.5 செ.மீ.

நிழற்படம் லெம்சவுடா © மியூசீ தெ ஹொம்மே, பாரிஸ்



கிரீன்லாந்து: மகளிர் முடியலங்காரமுள்ள, கையில்லாத சிறு மரப் பொம்மை. உயரம் 10.8 செ.மீ.

நிழற்படம் லெம்சவுடா © மியூசீ தெ ஹொம்மே, பாரிஸ்

தைச் சீரமைப்பதிலும். உலகஅமைதியை நிலைநாட்டுவதிலும், கவனம் செலுத்தி வந்தன. பல்வேறு பண்பாடுகளுக்கிடையிலான ஒருமைப்பாட்டிலிருந்து எழுகிற உலகளாவிய சகவாழ்வை நிலைநாட்டுவதில் நாடுகளிடையே பண்பாட்டு, அறிவியல், கல்வித் தொடபுர்களை ஏற்படுத்துவதற்கான நிறுவனங்களை நிறுவுவது தலைமயாய பணியாக இருந்தது. இதன் விளைவாக, உலகளாவிய நற்பணி நோக்கங்கொண்டதாக யுனெஸ்கோ போன்ற நிறுவனங்கள் நிறுவப் பெற்றன. யுனெஸ்கோ நிறுவனம் அறிவியலின் அடிப்படையில் இனவெறியை பகுப்பாய்வு செய்து அதன் தீமைகளைப் பல வெளியீடுகள் வாயிலாக உலகுக்கு உணர்த்தியுள்ளது. இவற்றுள் 'இனம் பற்றிய அறிவிக்கை' (1950) 'இனத்தின் தன்மை மற்றும் இன வேறுபாடுகள் பற்றிய அறிவிக்கை' (1951), "இனம் மற்றும் இனப்பாகுபாடு குறித்த அறிவிக்கை (1967) 'இனம் மற்றும் இனப் பாகுபாடு' பற்றிய பிரகடனம் 1978 ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவ்வாறு, இந்தக் கொடுமைக்கு முடிவுகட்டுவதற்கான கொள்கைகளை உருவாக்குவதற்கான சாதனங்களை யுனெஸ்கோ வழங்கியது.

இனவெறிக்கு எதிரான போராட்டம் இன்னும் போதிய அளவு விரிவடையவில்லை. மேனாட்டுச் சமுதாயங்களில் மாறுதல்கள் நிகழ்ந்து வருவது உண்மைதான். எனினும், இச்சமுதாயங்கள், தங்களுடைய விரிந்த குடியேற்ற ஆதிக்கப்பகுதிகளை இழக்க நேரிட்டது. பின்னர் இனவெறியின் அடிப்படையையும் தகர்க்கின்ற சமூக இயக்கங்கள் தோன்றின. வேறுப்பட்டவற்றையெல்லாம் (சிறுபான்மையினர், மகளிர் முதியோர், இளைஞர் வெறுக்கின்ற மனப்போக்குக் காரணமாக இந்தஇயக்கங்கள் வேரூன்றிய சமூகப் பழக்க வழக்கங்களையும், நடத்தை முறையினையும் எதிர்த்தன. தனிமனிதனை சமூக உறுப்பினனாக உருவாக்குவதில் பண்பாட்டு நெறிகளை வழிவழியாகக் கற்பிக்கும் சாதனம் என்ற முறையில் கல்விக்குத் தலையாய பங்கு உண்டு.

இனவெறியின் வரம்புகளை விரிவாக்கிப் பார்க்கும்போது, ஒரு தனி நாட்டின் எல்லைகளுக்குள் பண்பாட்டு ஒருமைப்பாடு என்பது உண்மையில் பண்பாட்டுப் பல்வகைப்பாடே என்பதையும். ஒருபண்பாட்டுடன் மக்கள் தங்களை ஐக்கியப் படுத்திக் கொள்ளும் முறைகள் ஒருபடித்தன்மையாகவோ, வேறுபாடின்றி ஒரே சீராக அமைந்தனவாகவோ இல்லை என்பதையும் இந்தச் சமூக இயக்கங்கள் காட்டுகின்றன. சில வரலாற்றுச் சூழ்நிலைகளில் ஆதிக்க வெறியை இந்தத் தற்பண்பு மூடி மறைக்கிறது என்பதையும் இவை காட்டுகின்றன. நிறுவனக் கட்டமைப்பில், ஆடவர்க்கும் மகளிர்க்குமிடையிலான உறவு நிலைகள் இதற்குச் சான்றாகும். இந்த நேர்வுகளில், எதிர்ப்புத் தருக்கமுறையானது வேற்றுமையை முனைப்பாகக் காட்டி, புதிய பண்பாட்டு வடிவங்களில் அதனை இன்றியமையாத கூறாகச் செய்கிறது. இந்தச் சூழ்நிலையில்தான் இனவெறிக்கு எதிரான போராட்டத்தில் வேறுபட்டு வாழும் உரிமையை வலியுறுத்த வேண்டியது இன்றியமையாததாகிறது.

தேசிய விடுதலை இயக்கங்கள், இன

வெறிக் கோட்பாட்டுக்கு எதிராக பண்பாட்டுக் கோட்பாட்டை நிலை நிறுத்தியிருக்கின்றன. குடியேற்ற ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டத்திற்கு இந்த அணுகுமுறை அடிப்படையாக அமைந்தது. இந்தப் போராட்டம் வரலாற்றுச் சூழலுக்கேற்ப அரசியல், பொருளாதார ஆயுத வடிவங்களைப் பெற்றது. இது பற்றிய அறிஞர்களின் எழுத்துக்கள் சிந்தனையைத் தூண்டுபவை. கினி மற்றும் வெர்தே முனை விடுதலைக்கான ஆஃப்ரிக்கக் கட்சியின் தலைவரான அமில்கர் காப்ரால் (1921—1973) என்பார், மாறிவரும் சமுதாயத்தில் பண்பாட்டு எதிர்ப்புச் சிக்கல் குறித்து இவ்வாறு கூறுகின்றார்:

“அயல் நாட்டு ஆதிக்கத்திலிருந்து விடுதலையடைந்த ஒரு மக்கள் குழுமம், விருப்புவெறுப்பின்றி, ஆதிக்க வாதியின் பண் பாடுகளும், மற்றப்பண்பாடும் ஆற்றியுள்ள ஆக்கபூர்வமான தொண்டின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடாமல், அப்பண்பாடுகளின் தீய அம்சங்களை ஒதுக்கிவிட்டு, நல்ல இயல்புகளைத் தம் பண்பாட்டுடன் இணைத்துக் கொண்டு நெடிய நேரிய வழியில் சென்றால்தான், அம்மக்கள் உண்மையில் விடுதலையடைந்தவர்கள் ஆவார்கள். எனவே, பண்பாட்டு அடக்குமுறை எதேச்சாதிகார ஆதிக்கம், பண்பாட்டு அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு இன்றியமையாதது தானா என்பதையும் தேசிய விடுதலை என்பது ஒரு பண்பாட்டு நடவடிக்கை தானா என்பதையும் கவனிக்க வேண்டும்”.

சீனாவைச் சேர்ந்த மா-சே–துங், “போராட்டமுனைகள்” பற்றிக் குறிப்பிடுகையில் “பண்பாட்டுமுனை”யின் முக்கியத்துவம் குறித்து இவ்வாறு கூறுகின்றார்கள்:

“சீன மக்களின் விடுதலைக்காக நாம் பல முனைகளில் போராடுகின்றோம். அவற்றுள் ஒன்று பேனா முனை; அதாவது, பண்பாட்டு முனை; இன்னொன்று, கத்தி முனை; அதாவது, இராணுவ முனை. பகைவரைத் தோற்கடிக்க, நாம் முதலில் துப்பாக்கி ஏந்தும் இராணுவத்தை நம்பியிருக்க வேண்டும். ஆனால், இந்த இராணுவம் மட்டும் போதாது, பண்பாட்டு இராணுவமும் நமக்குத் தேவை. நம் மக்களை ஒற்றுமைப் படுத்தவும், எதிரிகளை வெற்றி கொள்ளவும் இந்தப் பண்பாட்டு இராணுவம் இன்றியமையாதது.”

விடுதலைப் போராட்டங்கள் வெவ்வேறு கொள்கைகளுக்காக நடைபெற்றுள்ளன. வெவ்வேறு போர்க்களங்களில் நடந்துள்ளன. சிலசமயம் இவற்றின் குறிக்கோள்கள் முரண்பட்டனவாகவும் இருந்துள்ளன. எனினும், இந்த வேறுபாடுகளையெல்லாம் கடந்து, விடுதலை இயக்கத்தின் இன்றியமையாத கூறு பண்பாடு என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டுள்ளனர். பண்பாட்டுத் தற்பண்பு சார்ந்த புதிய சிக்கல்களும் இதனால் எழுந்துள்ளன.

தனிநபர்களும், குழுமங்களும் சமுதாயங்களும் படைப்புகளையும், பண்பாட்டு நெறிமுறைகளையும் உருவாக்குகின்றனர். அவர்கள் தங்களை உணர்ந்து கொள்வதற்கு இவை உதவுகின்றன. அவர்கள் ஒரு பண்பாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வைத் தூண்டி, பண்பாட்டின் மீது பற்றுக்கொள்ளும்படி செய்வதும் இந்தப் படைப்புகளேயாகும். தனிநபர்களுக்கும் குழுமங்களுக்குமிடையே ஏற்படும் இந்தப் பிணைப்பு, மொழியிலும், புனிதச் சடங்குகளிலும், உத்திகளிலும், சமூக அமைவனங்களிலும், வாய்மொழி மற்றும் ஏட்டுவழி மரபுகளிலும் வெளிப்படுகின்றன. ஒரு சமுதாயத்தைத் தனித்தன்மை வாய்ந்ததாக உருவாக்கும் இந்தப் பண்பாட்டுப் பண்புகளின் வாயிலாகத்தான் அச்சமுதாயம் மற்றவர்களுடன் தொடர்புகொள்கின்றது.

இவ்வாறாக, விடுதலைக்காகப்போராடுவதானது, இனவெறிக்கு எதிரான போராட்டம் என்பதைப் பண்பாட்டுத் தற்பண்பிலன நிலைநாட்டுவதன் வாயிலாகத்தான் தனிநபர்கள் உணர்ந்து நடைமுறையில் ஏற்பட்ட விளைவுகள் இவை எனலாம்.

பல்வேறு காலங்களிலும் இடங்களிலும் இனவெறிக்கு எதிரான போராட்டமானது பண்பாட்டுத் தற்பண்பின் அல்லது பண்பாட்டு வேறுபாடுகளின் முக்கியத்துவத்தை மிகுதிப்படுத்தி, பல்வேறு அரசியல், சமூக, நிறுவன, ஆதரவுகளைக் கோரியிருக்கிறது என்றாலும், அது எப்பொழுதுமே நம்பியிருப்பது பண்பாட்டையும், பண்பாட்டு தற்பண்பையுமேயாகும். எனவே ‘இனவெறிக்கு எதிரான போராட்டம் என்பது ஒருபுறம் சிந்தனை முறைகளில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்புகள் என்றும், மற்றொருபுறம் புதிய கேள்விகளைக் கேட்

எல்லா நாட்டவரும் மிக உயர்ந்த அறிவு, தொழில்நுட்ப, சமூக, பொருளாதார, பண்பாட்டு, அரசியல் வளர்ச்சி அடைய் சம திறம் பெற்றுள்ளனர்.

வெவ்வேறு நாட்டவரின் சாதனைகளின் வேறுபாடுகள் புவியியல், வரலாற்று, அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டுக் காரணங்களால் ஏற்பட்டவை. இவ்வேறுபாடுகளைக் கொண்டு நாடுகளை வரிசைப்படுத்தி பாகுபடுத்த முடியாது.

இனம், இன வெறுப்புபற்றிய அறிக்கை,
யுனெஸ்கோ, பாரிஸ், 1978

கொள்ள இயலும். இந்தப் போராட்டத்தில் தேசியத்தின் பண்பாட்டுநெறிமுறை என்பது, பண்பாட்டுப் படைப்புகளை உருவாக்குபவர்கள் என்ற முறையில் சமுதாய உறுப்பினர்களின் பங்குப் பணியை அவர்களுக்கு மீட்டுக்கொடுக்கிற தற்பண்பு வடிவத்தை நிலைநாட்டுவதில் வெளிப்படுத்தப்படுகின்றது. வரலாற்றுச் சூழலைப் பொருத்து அவர்களுடைய படைப்புகள் பல்வேறு வடிவங்களைப் பெறுகின்றன. இந்த வடிவங்களுள் சில: சமுதாயத்தைப் புதிய பாணியில் மாற்றியமைத்தல்; அரசியல் துறையில் ஆதிக்க வாதிகளை அமைவனங்கள் மூலம் எதிர்த்தல்; மக்களிடையே புரட்சிக் கருத்துகளை வளர்க்கும் படைப்புகளை உருவாக்கும் புதிய அறிஞர்கள் தோன்றுதல்; ஆக்கபூர்வமான அரசியல் திறம்பாட்டுக்கு படைப்பாற்றலையும், சமூக உணர்வினையும் அளவுகோலாகக் கருதுகின்ற புதிய சமூக உறவு நிலைகளை தனிநபர்களுக்கும், குழுமங்களுக்குமிடையில் உருவாக்குதல்; ஆதிக்க வாதிகள் வெறுத்து ஒதுக்கிய தாயக மொழிகளுக்குச் செய்தித் தொடர்புகளிலும், சமூக. அரசியல் நடவடிக்கைகளிலும் தலையாய இடம் கிடைக்கும்படி செய்தல்.

இவ்வாறாக, இனவெறிக் கண்ணோட்டத்தில் தாழ்ந்தவர்களெனக் கருதப்பட்டவர்கள், வரலாற்றை உருவாக்கும் வல்லமை வாய்ந்தவர்களாக தங்கள் சிந்தனையாலும் செயலாலும் உலகை மாற்றியமைக்கும் திறன் படைத்தவர்களாக விளங்குகின்றார்கள். அவர்கள் புதிய நாடுகளை உருவாக்குகின்றார்கள், புதிய சமூக உறவு நிலைகளை ஏற்படுத்துகின்றார்கள். உலக அரங்கில் முன்னணியில் செயற்படுகின்றார்கள். இனவெறிக் கோட்பாடுகளும் இன ஏற்றத் தாழ்வு மனப்பான்மையாலும் பது என்றும் பொருள் கூறவேண்டும்.

இந்தப் போராட்டங்கள் ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட இடத்தில் நடைபெறும் அறியப்படாத உண்மை என்பதால், ஒவ்வொரு குறிப்பிட்ட சமுதாயத்தின் போராட்டத்தையும் கவனத்தில் கொள்ளவேண்டும். ஒவ்வொரு சமுதாயமும், பொருளாதார, அரசியல், சமூக அமைப்பின் அடிப்படையிலான படிநிலை அமைப்புகளிடையிலான பூசல்களுக்கு இடங்கொடுத்து வந்திருக்கிறது. மேலும் சமூக அமைப்பில் அரசு ஆதிக்கம் பெறுவதற்கும், குடியியல் சமுதாயம் தனது படைப்புத்திறனை நிலைநாட்டிக்கொள்வதற்கு இயலாமல் செய்வதற்கும் வழி செய்யக்கூடிய ஆதிக்க அமைப்பு முறைகள் உருவாக்குகின்ற ஓர் அரசியல் பண்பாட்டை அது வெளிப்படுத்துகிறது.

எந்த வகையான கோட்பாடாயினும் நடைமுறையாயினும், அது புரட்சி அரங்கில் ஏற்கப்படுவதில்லை; ஒவ்வொரு ஆட்சிப்பிரிவினருக்கும் பின்னணியாக ஒரு தனி நபரைச் (தலைவர்) சார்ந்த, மனித இயல்புக்கு அப்பாற்பட்ட ஒரு பண்பியக்கத்தை சார்ந்த மறைமுகமான எண்ணங்களும், நெறிமுறைகளும், கற்பனைகளும் இருக்கின்றன. இது வரலாறு நமக்குக் கற்பிக்கும் பாடம்.

இந்தச் சூழ்நிலையில், இனவெறிக்கு எதிரான போராட்டத்தை, அதிகாரத்திற்கும் பண்பாட்டு மக்காளாட்சிக்குமான போராட்டத்திலிருந்து தனியே பிரித்துவிட இயலாது. மாறுதலில் ஈடுபட்டுள்ள தனிநபர்களும், குழுமங்களும், தங்களுடைய சிந்தனையிலும் செயலிலும், ‘கண்மூடித்தனமான கட்டுப்பாடுகளை எதிர்த்துப் போராடவேண்டும்.

தமிழில்; இரா. நடராசன்

கலப்பு உருமாற்றம்

ராபர்ட்டோ ஃபெர்னாண்டெஸ் ரெட்டமார்

யுனெஸ்கோ கூரியரின் 1977 அக்டோபர்—நவம்பர் இதழில் வெளியான ஒரு கட்டுரையில், தலை சிறந்த பிரேசிலிய நாவலாசிரியர் ஜார்ஜ் அமாடோ இவ்வாறு எழுதியுள்ளார்:

"இனங்களின் கலவையைக் கொண்ட நாடு பிரேசில் என்பது மறுக்க முடியாத தெளிவான உண்மை. இன்றைய உலகை அலைக்கழித்து வரும் பயங்கர இனவெறிச் சிக்கலுக்குத் தீர்வு காண்பதில் பிரேசில் பரிசோதனை முக்கிய வழிகாட்டியாக அமையும். ஏனென்றால், பிரேசிலில், பெரிதும் மாறுபட்ட பல்வேறு இனங்கள் இடையறாது ஒன்று கலந்து வந்திருக்கின்றன. இங்கு ஐபீரியர்களும். ஸ்லாவியர்களும், ஆங்கிலோ—சாச்சனியர்களும், கறுப்பர்களுடனும், அமெரிந்தியர்களுடனும், யூதர்களுடனும், அசாபியர்களுடனும் ஜப்பானியர்களுடனும் இரண்டறக் கலந்திருக்கிறார்கள். இந்நிலையில் இங்கு யார்தான் தங்களை ஒரு தூய இனத்தின் வழித்தோன்றல்களெனக் கூறிக் கொள்ள இயலும்?"

தோட்டப் பொருளாதாரத்தையும், அடிமைத் தொழிலாளர்களையும் அடிப்படையாகக் கொண்டு வளர்ந்த ஆண்டில்ஸ் சமுதாயங்களுக்கும் இக்கருத்துப் பொருந்தும். இந்த கலப்பு, இனத்தின் அடிப்படையில் நடைபெறவில்லை. மாறாக, பண்பாட்டு அடிப்படையில் நடைபெற்றதாகும். பிரேசிலியர்களும் ஆண்டிலியர்களும் கலப்புப் பண்பாடுகளின் ஒருங்கிணைப்புக்கு எடுத்துக்காட்டுகளாக உலகுக்குத் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

15ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பியர்கள் இங்கு வந்து குடியேறத் தொடங்கி, இங்கு ஓர் "எல்லைப்புறப் பேரரசு" நிறுவலானார்கள். அது முதற்கொண்டு இன்று வரையிலும், இந்த மண்டலத்தின் வளமான வரலாறு, இங்கு தாமாக விரும்பியோ அல்லது வலுக்கட்டாயத்தாலோ வந்து குடியேறிய மக்கள் குழுமங்களிடையே ஏற்பட்டு வந்த கலப்புக்கு வலுவான அடித்தளமாக அமைந்தது.

"நமக்கிடையே மிக இன்றியமையாததாகத் திகழும் இந்தப் பண்பாட்டு ஒருமைப்பாடு இனவெறியை ஒழிப்பதற்குத் துணைபுரியுமா? என்ற வினாவுக்கு "ஆம்" என்று திட்டவட்டமாக விடை கூற இயலாதநிலையில் இருக்கின்றோம். மேற்குக் கோளகையின், வடகோடியிலுள்ள இனுயிட் (எஸ்கிமோ) என்ற சில அமேசானிய இந்தியமரபுக் குழுமங்களைத் தவிர, 'தூய்மை'யான இனமோ பண்பாடோ எதுவுமே இல்லை எனலாம். இன்றைய உலகின் எல்லாப் பகுதிகளிலும், மக்கள் குழுமங்களிடையே கலப்புகள் ஏற்பட்டு வருகின்றன. எனினும், இனவெறி இன்னும் நிலவுகிறது, சில இடங்களில், மனித குலத்தின் கண்ணியத்திற்கே பெரும் அறைகூவலாக இந்த இனவெறி விளங்குகிறது.

'குடியேற்ற ஆதிக்கச் சூறையாடல்களும், அடிமை முறையும் இல்லாமல் முதலாளித்துவம் ஒரு நாளும் தலை தூக்கியிருக்க முடியாது' என எரிக் வில்லியம்ஸ் என்ற டிரின்டாட் அறிஞர் கூறியுள்ளார். இந்த முதலாளித்துவத்தின் தொடக்கக் காலத்தில், முதலாளித்துவத்தை நியாயப்படுத்துவதற்காக 'இனப்பாகுபாட்டுக் கோட்பாடு' உருவாக்கப்பட்டது. 'இனம்' என்ற சொல்லுக்கு அப்போது அளிக்கப்பட்ட பொருள் உலகில் எந்த மொழியிலும் இருக்கவில்லை. விலங்கியலிலிருந்து கடன் வாங்கியே இந்தப்பொருள் கூறப்பட்டது. இந்தப் புதிய பொருள் விளக்கத்தில் ஏராளமான பண்பாட்டு வேறுபாடுகள் புறக்கணிக்கப்பட்டன. செயற்கையான ஒரு படித்தன்மை வலியுறுத்தப்பட்டது. இதனால், கியூபா எழுத்தாளர் ஜோஸ், மார்ட்டி, "இன விரோதம் இல்லை. ஏனெனில் இனங்களே இல்லை' என்றும், மார்ட்டினிக்கன் ஃபிரான்ஸ் ஃபானான், "நீக்ரோ என்ற சொல்லைப் புனைந்தவர்கள் குடியேற்ற ஆதிக்கவாதிகளே' என்றும் கூறியுள்ளார்கள்.

பாரம்பரியப் பண்புகளில் சில உடற்கூற்று வேறுபாடுகள் காணப்படுவது உண்மைதான். இவை, சில நோய்களை எதிர்ப்பதில் வெளிப்படுகின்றன. ஆனால் இந்த வேறுபாடு அத்துடன் நின்றுவிடுகின்றது. இனம் பண்பாட்டை நிருணயப்பதில்லை; ஏனெனில், அடிப்படை அம்சம் எதையுமே இனம் நிருணயிருப்பதில்லை. இனப்பாகுபாடு கருதாமல் மனிதனால் பண்பாடு உருவாக்கப்படுகிறது. சில சமயம், இனத்துக்கும் பண்பாட்டுக்குமிடையே ஏதேனும் தொடர்பு இருக்குமாயின் அத்தகு இனங்களைப் பண்பாடுகள் செம்மைப்படுத்துவதுதான் காரணமேயன்றி பண்பாடுகளை இனங்கள்

ராபர்ட்டோ ஃபெர்னாண்டெஸ் ரெட்டமார்: கியூபா நாட்டுக் கவிஞர்: கட்டுரையாளர்; ஹாவனா பல்கலைக்கழகப் பேராசிரியர்; காசா தெலாஸ் அமெரிக்காஸ்' இதழின் இயக்குநர். இவருடைய கட்டுரைகளும் கவிதைத் தொகுப்புகளும் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன,

செம்மைப்படுத்துவது காரணமன்று.

“எல்லாப் பண்பாடுகளும் உடலின் மீது தம் முத்திரைகளை இட்டுச் செல்கின்றன” எனப் புகழ் பெற்ற ஃபிரெஞ்சு மானிடவியலறிஞர் கிளாட் லெவிஸ்டிரால் கூறுகின்றார். இதற்கு அன்றாடம் சான்றுகள் காண்கின்றோம். பண்பாட்டுப் பெருமை வாய்ந்த நகரங்களின் வீதிகளிலே நடந்து அங்கு செல்லும் பெண்களைக் கவனியுங்கள். அவர்கள் தங்கள் காதுகளைக் குத்திக்கொண்டு, அதில் பலவிதமான அணிகலன்களைத் தொங்கவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். உதடுகளிலும், கன்னங்களிலும், புருவங்களிலும், நகங்களிலும் பலவண்ண அலங்காரப் பூச்சுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் (“இவர்கள் தங்களை மறைத்துக் கொள்கிறார்கள்” என்கிறார் ஃபிரெஞ்சு கவிஞர் பால் எலுவார்டு); தங்கள் கூந்தலைப் பல வடிவங்களில் அலங்காரம் செய்து கொண்டிருக்கிறார்கள்; உடலின் பல்வேறு பகுதிகளிலிருந்து முடியை அகற்றிவிடுகின்றார்கள். இந்த நகரங்கள், நியூயார்க்காகவோ லண்டனாகவோ, பாரிசாகவோ இருக்கலாம். இதுதான் மேனாட்டுப் பண்பாடு என்றால், இது ஒரு கலப்புப் பண்பாடு என்பதில் ஐயமில்லை. இனங்கள் ஒருங்கிணையாமலே பண்பாடுகள் ஒருங்கிணைய முடியும் என்பதற்கு இது ஒரு சான்று.

குடியேற்ற ஆதிக்கத்தை நியாயப்படுத்துவதற்காக இனப்பாகுபாடு தொடங்கியிருக்குமானால், இனங்களையோ பண்பாடுகளையோ ஒன்று கலப்பதால் மட்டும் இனவெறிக்கு முடிவுகட்டிவிட முடியாது. இனப்பாகுபாட்டுக்கான மூல காரணத்தை, அதாவது, எல்லா விதமான குடியேற்ற ஆதிக்க வடிவங்களையும் அடக்கு முறையினையும் ஒழித்தாக வேண்டும். “இன்னொருவருக்குச்” சொந்தமாக இருக்கும்வரையில் ஒரு சிலர் மற்றவர்களைச் சுரண்டி வாழும் வரையில்—கலப்புகள் எவ்வளவு தீவிரமாக நடந்தபோதிலும், ரியோ அல்லது டிரினிடாடு திருவிழாக்கள் எத்துணை களிப்பூட்டினாலும், இனப்பாகுபாடு என்னும் நோய்க்கிருமி மேன்மேலும் பெருகிக் கொண்டுதானிருக்கும்.

பண்பாட்டுக் கலப்பு மூலமாக இனப்பாகுபாடு மறைந்துவிடும் என்று கருதுவதிலும் சில அபாயங்கள் உள்ளன. முதலாவதாக, இனத்தைப் பண்பாட்டுடன் இணைத்துவிடலாம் என்ற எண்ணம் உருவாகும். இது, கோபினூ காலம் முதல் இட்லர் காலம் வரை நிலவிய இனப்பாகுபாட்டுக் கொள்கையை ஏற்றுக்கொள்ள இடமளித்து விடும்.

இரண்டாவதாக, இன ஒருமைப்பாட்டின் மூலம், இனவெறிக்குத் தீர்வுகண்டு விடலாம் எனக் கருதுவது, “நீக்ரோ பண்பு” ஏன்பதைப் போன்று ஒருபோலி நம்பிக்கையேயாகும். மார்ட்டினிக் அய்மே சீசேர் ஏன்ற கவிஞர் தமது கவிதையில் “நீக்ரோ பண்பு” என்னும் சொல்லைக் கையாண்டார். இச்சொல் புதிய புதிர்களை உருவாக்கவே உதவியது. எனினும், இப்பண்பு இப்பெயரால் அழைக்கப்படுவதற்கு முன்பு, இப்பண்பில் பல ஆக்கக் கூறுகள் இருந்தன என்பதை மறுப்பதற்கில்லை. இத்னாலேயே மார்க்கஸ் கார்வே போன்ற ஜமாய்க்கன் அறிஞர்கள் இப்பண்புகளைப் போற்றியுள்ளார்கள்.

பூவர்ட்டோ ரீக்கோவைச் சேர்ந்த ரோமன் பெட்டான்சஸ் ஹைட்டி வரலாற்றை உலகறியச் செய்த அறிஞராவார். இவர் தமது நாட்டின் விடுதலைக்காகப் போராடிய பெருந்தலைவருமாவார். இவரைப் போன்றவர்கள் குடியேற்ற ஆதிக்கத்தையும், அடக்குமுறையினையும் எதிர்த்து நடத்திய தீவிரப் போராட்டங்கள் உண்மையில் இனவெறிக்கு முடிவு கட்டக் கூடியவை. ஹைட்டியைச் சேர்ந்த ஆண்டனார் பைர்மின் என்ற அறிஞர் தமது “மனித இனங்கள்” (1885) என்ற நூலில் ‘இன ஏற்றத் தாழ்வுக்கு அடிப்படையான அறிவியல் கோட்பாடு மனிதனை மனிதன் சுரண்டுவதை முழுவதும் சார்ந்திருகிறது’ என்கின்றார். கியூபாவில் விடுதலைக்காகப் போராடிய ஜோஸ் மார்ட்டி தமது நூலில் 1894 “மனிதன் ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவன் என்பதற்காக அவன் தனி உரிமைகள் எவற்றையும் பெறுவதில்லை. உரிமைகளைப் பற்றி எவ்வளவோ பேசிவிட்டோம். இனி மனிதனைப் பற்றுப் பேசுவோம். வெள்ளையரைவிட கலப்பினத்தவரைவிட, நீக்ரோவைவிட மனிதன் உயர்ந்தவன்’ என்று குறிப்பிட்டுள்ளார். மார்ட்டினிக் ஃபிரான்ட்ஸ் ஃபிரான்ஸ், தாம் இறந்து 20 ஆண்டுகளுக்குப் பின்னரும் விடுதலை போராட்டத்தின் முன்னணித் தலைவராகப் போற்றப்படுகின்றார்.

ஆனால் இது ஒன்று மட்டுமே போதாது. ஒருங்கிணைப்பின் முக்கியத்துவத்தை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால், இனவெறி ஒழிப்புக்கு இது ஒன்றுதான் வழி என்பதைத்தான் மறுக்கின்றோம். ஹைட்டியப் புரட்சியானது அமெரிக்கா விடுதலைக்கு வழிவகுத்தது. அங்கே இனவெறி ஒழிந்ததைக் கண்டோம். 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கியூபாவும் டொமினிக்கன் குடியரசும் இணைந்து விடுதலைக்காகப் போராடின. அப்போது கிரிகோரியோ லூபரான், அண்டோனியோ, மாசியோ போன்ற நாட்டுத் தலைவர்கள் உலகத் தலைவர்களாகப் புகழ்பெற்றார்கள்.

இனவெறியை ஒழிப்பதற்கு, இன மற்றும் பண்பாட்டு ஒருங்கிணைப்பு இன்றியமையாதது என்பது உண்மைதான். நீக்ரோவா, கலப்பினத்தவரா என்று உலகம் கேட்கவில்லை.

இந்தச் சீரிய குறிக்கோளை ஹைட்டியக் கவிஞர் ஜேக்ஸ் ரூமெயின் “கருங்காலி” என்ற அழியாத கவிதையில் அழகாக வெளிப்படுத்தியிருக்கிறார்:

உன்னை நினைத்தேன் ஆஃப்ரிக்கா!
புண்ணுள் சிம்பு இருத்தல்போல்
ஊரின் காவல் தெய்வம்போல்
என்னுள் என்றும் இருக்கின்றாய்!
எனினும் உலகில் ஒரே இனம்
உழவர் இனமே உந்தன் இனம்!
அந்த இனத்தைச் சார்ந்திருக்க
அல்லும் பகலும் விழைகின்றேன்!

இந்தச் சகோதரப் போராட்டத்துடன்தான் மனிதன் (ஆண்டில்சிலும் உலகெங்கும்) தனது பன்மையியல்பை இழக்காமல் ஒருமைப்பாட்டை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றான். மனிதனின் பன்மையியல்புகள், பல்வேறு வண்ணங்களிலும், தாளங்களிலும், இசையிலும், கனவுகளிலும் வெளிப்படுகின்றன. இவை மனிதனின் பண்பாட்டுச் செல்வமாகவும் போற்றப்படுகின்றன. பழக்கம் காரணமாக, “வெள்ளையர்” என்ற சொல், வெளிறியபோதிலும், பொன்னிற முடியும் தெளிவான கண்களும் உடைய நார்டிக் இனத்தவரையும், மஞ்சள் நிறத்தோலும் கறுப்பு முடியும், கருங்கண்களும் உடைய மத்திய தரைக்கடல் வாசிகளையும் குறிக்கப் பாகுபாடில்லாமல் பயன்படுத்தப்படுகின்றது. “இனம்” என்ற சொல் கூட மறக்கப்பட்டு அதுதோன்றிய விலங்கியல் துறைக்கே திருப்பியனுப்பப்பட்டு விடக்கூடிய ஒரு நிலை ஏற்படக் கூடும். ‘மனித குலமே நமது தந்தையர் நாடு’ என்று ஜோஸ் மார்ட்டி கூறியது நனவாகக் கூடும்.

தமிழில்: இரா. நடராசன்

மனித இனம் தனிமனிதர்களாலும் தொகுதியினராலும் ஆனது. அதன் ஒற்றுமையும் முன்னேற்றமும் அவர்களின் வேற்றுமையைச் சார்ந்துள்ளது. இதுவே மனிதனின் புதிர். மனுக்குலக் கிளைகளை எல்லாம் ஒரே இனமாகப் பிணைக்கும் தளை துணிக்க முடியாதது! ஆயினும் ஒவ்வொரு தொகுதியும் அல்லது பண்பாடும் பொதுநலத்தைப் பேணும் உரிமை பெறும் அளவுக்கு அது நெகிழக் கூடியது.
வலப்புறம்: மேற்கு நைஜரில் வாழும் ட்ஜெர்மா மக்களின வீட்டின் நடுத் தூணும் கூட்டிட அமைப்பும்.

திழற்படம் © ஜே. எஃப். சிரோ சியாக்ஸ், ஃபிரான்ஸ்

யுனெஸ்கோ செய்தியறை

இனவெறிக்கெதிரான இரண்டாவது உலக மாநாடு

ஐ.நா. அவையின் பொதுப்பேரவை 35–வது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கேற்ப, இனவெறிக்கெதிரான இரண்டாவது உலக மாநாடு 1983 ஆகஸ்ட் 1 முதல் 13வரை ஜெனீவாவில் நடந்தது. இன ஒதுக்கம், இன வெறி, இனப் பாகுபாடு குறித்த ஐ.நா.வின் தீர்மானங்களை முழுவதுமாக உலகமெங்கும் செயலாக்கும் வழிமுறைகளை மையமாகக் கொண்டே மாநாட்டுப் பணி அமைந்திருந்தது. ஒரு ‘‘செயல் திட்டத்தையும்’’ இனவெறி, இன பாகுபாட்டுக்கெதிரான இரண்டாவது பத்தாண்டு செயல்திட்ட அறிவிக்கையையும் பரிந்துரைத்தது. அறிவிக்கைக்கு ஆதரவாக 101 வாக்குகளும், எதிராக 12 வாக்குகளும் கிடைத்தன. 3 பேர் வாக்களிக்கவில்லை. செயல் திட்டத்திற்கு எதிர்ப்பின்றி 104 ஆதரவு கிடைத்தது. 10 வாக்குகள் பதிவாகவில்லை, ‘‘எத்தகைய இன உயர்வுக் கொள்கையும் அறிவியல் போக்கில் பொய்யானது, ஒழுக்க நெறிப்படி கண்டிக்கத்தக்கது, சமூக அநீதி, அபாயம் என்பதோடு எப்படியும் நியாயப்படுத்த முடியாது என்பதை அறிவிக்கை மீண்டும் வலியுறுத்துகிறது. இன ஒதுக்கம் என்னும் அமைப்பு வழியான இனவெறி மனித இனத்தின் கண்ணியத்திற்கும், மனச்சாட்சிக்கும் எதிரானது; முற்றிலும் வெறுக்கத்தக்கது; இகழத்தக்கது என்பதோடு பன்னாட்டு அமைதிக்கும், பாதுகாப்புக்கும் மிரட்டலாக அது அமைகிறது.

உலக உணவுத் திட்டத்திற்கு யுனெஸ்கோவின் இருபது ஆண்டு கூட்டுறவு

இந்த ஆண்டு ஐ.நா.வின் உலக உணவுத் திட்டமும் ஐ.நா.வின் உணவு உழவியல் தொடங்கி இருபது ஆண்டு நிறைவடைவதைக் குறிக்கிறது. செல்வவள நாடுகள் சிலவற்றின் உபரியான உணவு இருப்புகளைப் பயன்படுத்தி உதவுவதற்காக ஆரம்பத்தில் துவக்கப்பட்டது. உலக உணவுத்திட்டம் இன்று அதனுடைய முயற்சியின் பெரும் பகுதியை (1982ஆம் ஆண்டு சுமார் 80கோடி டாலர்களுக்குக் கையாண்டுள்ளது) வளரும் நாடுகளில் கிராமப் புறங்களில் உணவுக்கு வேலைத் திட்டங்களின் மூலம் வளர்ச்சிக்காக உணவுப் பொருள்களைக் கொடுத்து உதவுகிறது. உலக உணவுத் திட்டத்தில் யுனெஸ்கோ அதன் துவக்கத்திலிருந்து குறிப்பாக பள்ளியில் உணவளிக்கும் திட்டங்கள், உணவுக்கு வேலை-பள்ளி கட்டுமான திட்டங்கள், பண்பாட்டு நினைவுச் சின்னங்களைப் புதுப்பித்தல் ஆகியவைகளுக்கு ஆதரவு தரும் திட்டங்கள் ஆகிய பணிகளிலும் ஒத்துழைத்து வருகிறது;

இளம் கட்டிடக் கலைஞர்களுக்கு ஒரு உலகப் போட்டி

1985ஆம் ஆண்டு உலக இளைஞர் ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்டதையொட்டி பன்னாட்டுக் கட்டிடக்கலைசங்கத்துடன் இணைந்தும், ஜப்பான் விமான நிறுவனத்தின் உதவியுடனும் யுனெஸ்கோ ‘நாளைய இருப்பிடம்’ என்னும் பொருளில் ஒரு உலகப் போட்டியை ஏற்பாடு செய்துள்ளது. இதில் கட்டிடக் கலைப்பள்ளிகளின் மாணவர்களும், 35 வயதுக்குட்பட்ட இளம் கட்டிடக் கலைஞர்களும் பங்கு பெற அழைக்கப்பட்டுள்ளனர். தேசிய அளவிலான ஆரம்பப் போட்டிகள் செப்டம்பர் 1983இல் நடைபெறும். இதில் கலந்து கொள்பவர்கள் தங்களது திட்டங்களை 700மி.மீக்கு 1000மி.மீ. உள்ள இரண்டு அட்டைகளில் ஓவியங்கள், புகைப்படங்கள், வரைபடங்களாக வரைந்து தர வேண்டும்.

தேசியப் போட்டி அமைப்பாளர்கள் அவர்களது நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 5 நுழைவுகளை 1984 ஏப்ரல் 30–க்குள் யுனெஸ்கோ தலைமையகத்துக்கு அனுப்பவேண்டும். பன்னாட்டு நடுவர்கள் 1984 மேயில் கூடி 10 சிறந்த திட்டங்களைத் தேர்ந்தெடுப்பார்கள். பரிசு பெற்ற 10 பேர்களும் தங்களது திட்டத்தின் ‘‘மாதிரி’’ ஒன்றைத் தயாரித்து ஜப்பானில் நடைபெறும் ‘‘பன்னாட்டுக் கண்காட்சி ட்சுக்குபா 85இல் காட்சிக்கு வைப்பதோடு டோக்கியாவுக்கும் ட்சுக்குபா-எக்ஸ்போ 85-க்கும் இரண்டு வாரங்களுக்குச் சென்றுவருவதற்கான செலவுகளைப் பரிசாகப் பெறுவார்கள். இக்கண்காட்சிக்கு 6 மாதங்களில் 2 கோடி பார்வையாளர்கள் வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்து வருகின்ற ஒரு யுனெஸ்கோ கூரியர் இதழில் போட்டி பற்றி வெளியிடப்படும் மேலும் தகவல் வேண்டுவோர் உங்களது அருகிலுள்ள யுனெஸ்கோ தேசிய கமிஷனுடனோ அல்லது இளம் கட்டடக்களைஞர்களுக்கான உலகப் போட்டி’’ 7 பிளேஸ்த போந்தனோ, 75700, பாரிஸ், ஃபிரான்ஸ் என்ற முகவரியிலோ தொடர்பு கொள்க.

கார்ல் ஜெஸ்பர்ஸ் நூற்றாண்டை யுனெஸ்கோ கொண்டாடுகிறது

தத்துவ அறிஞர் கார்ல் ஜெஸ்பர்சின் நூற்றாண்டு விழா 1983 ஜூன் 17இல் யுனெஸ்கோவின் பாரிஸ் தலைமையகத்தில் கொண்டாடப்பட்டது. உலகின் எல்லா பகுதிகளின் சார்பாகவும் அறிஞர்கள் கலந்து கொண்டனர். பூமியில் உள்ள எல்லா உயிர்களும் அழிவதா அல்லது அரசியல் மாற்றம் மூலம் சமுதாயம் புதிய சிந்தனை, செயல், சேர்ந்து வாழ்தல் கொண்ட புதிய வழியைக் கடைப்பிடிப்பதா என்று தேர்ந்தெடுக்க வேண்டிய நிலையை உலகம் அடைந்துள்ளது என்று 1950களிலேயே ஜெஸ்பர்ஸ் அறிந்துகொண்டார் என்று தன்னுடைய பேச்சின்போது யுனெஸ்கோ தலைமை இயக்குநர் அமது மஹ்தார் எம்’போ கூறினார். யுனெஸ்கோ அமைப்பு விதிகளின் முகவுரையினை எதிரொலிக்கின்ற ஜெஸ்பர்சின் போற்றத்தக்க சொற்றொடரையும் அவர் எடுத்துக் காட்டினார்.

பன்னாட்டு தத்துவ கௌன்சில் மற்றும் மானிடவியல் படிப்புகளின் எம். ஃபிரான்ஸ் பிளாங்கர்ட், ஹைடல்பர்க் பல்கலைக்கழகப் பேராசிரியர் எச். ஜி. காடமர், கார்ல் ஜேஸ்பர்ஸ் அறக்கட்டளையின் தலைவர் திருமதி ஜீயஸ் ஹிஷ்ர் ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டனர்.

திருத்தம்

சீனாவின் 55 தேசிய சிறுபான்மையரில் 16 பெண்களின் படம் வெளியிடப்பட்ட 1982 பிப்ரவரி இதழில் பின் அட்டையின் தலைப்பில் ஏற்பட்ட குறையைச் சுட்டிக் காட்டி சீனமக்கள் குடியரசின் வாசகர் ஒருவர் எழுதியிருந்தார். வலதுபுறம் அடிப்பகுதியில் வெளிவந்த படம் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் ‘உய்கர்’ இன பெண் அல்ல என்பதையும் அவர் ‘கசக்’ பெண்மணி என்பதையும் குறிப்பிடுகிறோம். இந்தக் குறையைக் குறிப்பிட்ட நமது வாசகருக்குப் பல நன்றிகள்.

யுனெஸ்கோ கூரியர், அக்டோபர்- நவம்பர் மாதங்களில தவிர மாதந்தோறும் வெளியிடப்படுகிறது அக்டோபா-நவம்பரில் ஒரே இதழாக வெளிவரும் [ஆண்டுக்கு 11 இதழ்கள் பதிப்புரிமை அல்லாத தனிப்பட்ட படங்களையும் கட்டுரைகளையும் ‘யுனெஸ்கோ’ கூரியரிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது என்ற அறிவிப்புடன் இதழ் தேதியைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். அவ்வாறு வெளியிட்ட இதழின் மூன்று பிரதிகள் ஆசிரியருக்கு அனுப்பப்படவேண்டும். ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகளைத் திரும்பப் பிரசுரிக்கும்போது அதில் ஆசிரியர் பெயர் இடம் பெறவேண்டும் பதிப்புரிமை அல்லாத புகைப்படங்கள் வேண்டுவோருக்கு அனுப்பித் தரப்படும். கேட்டுப் பெறாத கட்டுரைகளைப் போதிய தபால் தலை இல்லாமல் திருப்பியனுப்ப இயலாது. ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகள் அவரது கருத்தை வெளியிடுவதாகும். யுனெஸ்கோ கூரியர் ஆசிரியர்களின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

துணை தலைமை ஆசிரியர்: ஒல்கா ரோடல்
நிர்வாக ஆசிரியர்கள்:
ஆங்கிலம்: ஹோவார்ட் ப்ராபின் (பாரிஸ்)
ஸ்பானிஷ்: ஃபெர்ணன்டெஸ்-ஸாண்டேஸ் (பாரிஸ்)
ரஷ்யன்: விக்டர் கோ லியச்கோவ்
ஜெர்மன்: வெர்னர் மெர்க்ளி (பெர்ன்)
அராபிக்: அப்தல் மேனீம் எல் ஸாவி (கெய்ரோ)
ஜப்பானிஸ்: கஸுவோ அகவோ (டோக்கியோ)
இத்தலியன்: மரியோ கெய்டேட்டி (ரோம்)
ஹிந்தி: கிருஷ்ண கோபால் (டெல்லி)
ஹீப்ரு அலெக்ஸாண்டர் ப்ரோய்டே (டெல்-அவிவ்
பெர்சியன்: சமத் நௌரினஜத் (டெஹ்ரான்
டச்சு: பல் மோரென் (அண்ட்வெர்ப்)
போர்த்துக்கீஸ்: பெனடிக்டோ சில்வா (ரியோ டி ஜெனீரோ)
துர்க்கியஸ்: மெஃப்ர இல்கசர் (இஸ்தாம்புல்)
உருது: ஹக்கீம் முஹம்மது சையத் (கராச்சி)

கட்டலான்: ஜோன் கார்ரெராஸ் மார்ட்டி (பார்சிலோனு)
மலேசியா: பகதூர் ஷா (கோலலம்பூர்)
கொரியன்: லீ குவாங் யங் (சியோல்)
சுவாஹிலி: டெமிஞே ருத்தாயேபெசிப்வா (தார்-எஸ். ஸலாம்)
ஃபிரெய்லி: ஃப்ரெடிரிக் போட்டர் (பாரிஸ்)
கிரேரடோ-செர்ப், மாசிடோனியன், செர் போகிராட்
ஸ்லோவேன்: புனிசாபாவ்லோவிக் (பெல்கிரேட்)
சீனம்: ஷென் குவேஃபென் (பீகிங்)
பல்கேரியன்: பவல் பிஷரெவ் சோஃபிய
கிரீக்: அல்கிஸ் ஆஞ்செலோ
அமைப்பு-வடிவம்: ராபர்ட் ஜாகுமின்
எல்லாக் கடிதங்களும் பிரதம ஆசிரியருக்கே எழுதப்படவேண்டும்.

Edited and Published by M. Mohammed Mustafa for the Southern Languages Book Trust, 18, East Spurtank Road, Chetput, Madras - 600 031 and Printed by B. Venugopal Reddy at Prasad Process Private Limited, Madras - 600 026.



1104 பக்கங்கள்
ஆங்கில, ஃபிரெஞ்சு, ஸ்பானிய
மும்மொழிப்பதிப்பு
55 ஃபிராங்குகள்

அண்மை வெளியீடு

■ உலகின் எல்லா பகுதிகளிலும் பெறக்கூடிய உயர்கல்வி, பயிற்சி சார்ந்த வாய்ப்புகளை விளக்கும் யுனெஸ்கோவின் பாராட்டிற்குரிய பார்வை நூலின் (24 ஆம்) அண்மைப் பதிப்பு.

■ பன்னாட்டு நிறுவனங்கள், அரசாங்கங்கள், அமைப்புகள், பல் கலைக்கழகங்கள் போன்றவை 115 நாடுகளில் வழங்கும் 2,00,000-க்கு மேற்பட்ட உதவித்தொகை, துணையுதவி, பயணச் செலவு போன்ற நிதியுதவிகள் பட்டியலை இது தருகின்றது.

■ யார், எங்கு, எது படிக்கலாம் எனும் செய்தியையும், ஒவ்வொரு உதவி யையும் எங்கு, எவ்வாறு பெறலாம் என்பது போன்ற எல்லா விவரங் களையும் தருகின்றது.

■ எல்லா கல்வி, தொழில்துறைகளிலும் உயர்நிலைப்படிப்பிற்குப் பிறகு பெறக்கூடிய கல்வியும், பயிற்சியும் வழங்கப்படும். இதில் யுனெஸ்கோ ஆதரவுடன் பெறக்கூடிய முதுகலைப் படிப்பும் அடங்கும்,

'யுனெஸ்கோ கூரியர்' - தமிழ்

* தனித்தன்மையுடன் திகழும் யுனெஸ்கோ கூரியர் இதழ் அறிவும் செய்தியும் செறிந்த இணையற்ற கருத்துக் கருவூலம்.
* பொதுமக்கள் விரும்பும் கலை, அறிவியல், தொழில் நுட்பம், கல்வி, உடல் நலம் போன்ற பொருள்களைப் பற்றி உலகப் பெரும் வல்லுநர்கள் கூறும் கருத்தோவியங்களை ஏந்திவரும் தன்னேரில்லாத் தமிழ்த் திங்கள் இதழ்.
* உயர்தர அச்சுப் பதிப்பும் அரிய நிழற் படங்களும் மல்கிய கண்கவர் எழிற் படைப்பு.
* மனித குலத்திற்குப் பணியாற்றும் நோக்குடன் ஒவ்வொரு திங்களும் வெளியாகும் இவ்விதழ் யுனெஸ்கோவின் உயர் குறிக்கோள்களுக்கு அரியதோர் சின்னமாக விளங்குகின்றது.
* நீங்கள் குறைந்த விலையில் இவ்விதழைப் பெறலாம். இவ்விலை இதனை வெளியிடும் செலவில் ஒரு சிறு பகுதியே.

ஆண்டுச் சந்தா ரூ. 21-00 தான். கல்வி நிலையங்களுக்குச் சலுகைச் சந்தா ரூ. 19-00. தனி இதழ் ரூ. 2-00

தொடர்பு கொள்க :

தென்மொழிகள் புத்தக நிறுவனம்

18, கிழக்கு ஸ்பர்டாங்க் சாலை, சென்னை-600 031.

REGD. NO. M. 8276

பல நாட்டவரும் பண்பாடுகளும் கலந்துறவாடும் நீண்ட வரலாறுடைய பகுதியின் நடுவில் கியூபா நாட்டுப் பெரும் ஓவியர் வில்ஃப்ரெடோ லாம் (1902-1982) பிறந்தார். அவர் கரீபிய இனக் கலப்பின் நான்கு (ஆஃப்ரிக்க, இந்திய. ஐரோப்பிய, சீன) அடிப்படைக் கூறுகளையும் பிறப்பால் மரபுரிமையாகப் பெற்றார். தம் படைப்புகளில் அவர் தமது ஆண்டிலிய கலை மரபைக் கன வடிவ, கனவு இயல்பு எடய, 'ஐரோப்பிய முன்னோடி'யின் மிகச் சிறந்த ஓவியக் கலைகளுடன் கலப்பதில் வெற்றி கண்டார். பல நாடுகளும் பண்பாடுகளும் ஒன்றையொன்று தழுவி எவ்வாறு வளம் பெறலாம் என்பதை வில்ப்ரெடோ ஃலாம் தம் வாழ்க்கையிலும் கலையிலும் காட்சி, இனவெறி எதிர்க்கும் போராட்டத்தில் பங்கு பெற்றார்.

நிழற்படம் © பாவ்லோ ஸபாட்டேரா, பெராரா, இத்தாலி